

# ஞானச்சுடர்

ஆடி

2011



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ**

**—விருந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம்.**

பொருள் : வந்த விருந்தினரை முன்னமே உண்ணச் செய்து எஞ்சியிருப்பதைத் தான் உண்ணுகின்றவனுடைய நிலம் விதையாமலே விளையும். (85)

**செல்விருந் தோம்பி வருவிருந்து**

**—பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு.**

பொருள் : முன் விருந்தாக வந்தவனை உபசரித்து, இனி வரும் விருந்தினனை எதிர்பார்த்திருப்பவனைத் தேவர்கள் மிக விரும்புவார்கள். (86)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி


**முழுதுமுண்மை ஆச்சுதெடி மூச்சுப்பேச்சுப் போச்சுதெடி**
**பழுதின்றி வாய்ச்சுதெடி - தங்கமே**
**பாராமற் பார்த்திடெடி** 21

**ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியும் நீயல்லை**
**ஐம்புலனும் நீயல்லை - தங்கமே**
**ஆன்மாநீ அறிந்திடெடி** 22

**என்னையுடை யானவன் தன்னையுடை யேனடியேன்**
**பின்னைப் பிறப்பிறப்பும் - தங்கமே**
**பேய்த்தேர்கனா வன்றோவெடி** 23

**முன்னை வினைவந்து மூண்டுதே யென்பார்கள்**
**தன்னை யறியாதார் - தங்கமே**
**சஞ்சலத்தை நீக்கிவிடு** 24

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு-2 சுடர்-163

2011 ஆடி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அனைத்தையும் அள்ளிக்... | யோ. ஜிந்துஷா | 01- 02 |
| ஆன்மீகமும் சமயமும் | கு. சோமசுந்தரம் | 03- 04 |
| வித்தகா! உன்....... | பா. சிவனேஸ்வரி | 05- 07 |
| பண்பாட்டு மையங்கள் | மூ. சிவலிங்கம் | 08- 10 |
| கந்தனே கலியுகத்.... | கே.வி. குணசேகரம் | 11- 12 |
| இயற்கையிடம்... | ஜக்கி வாசுதேவ் | 13- 14 |
| சிவனார் மனங்குளிர.. | செ. பாலச்சந்திரன் | 15- 17 |
| சிறுவர் கதைகள் | - | 18- 19 |
| விநாயக வழிபாட்டின்... | த. அம்பாலிகா | 20- 21 |
| துடக்கு என்றால் என்ன? | இ. ஸ்ரீதரன் | 22- 23 |
| நித்திய அன்னப்பணி | - | 24- 25 |
| அடியார்கள் துயர்.... | பு. கதிரித்தம்பி | 26- 27 |
| பரிபாடல் பகரும் பக்தி... | சிவ சண்முகவடிவேல் | 28- 29 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 30- 31 |
| ஆலயந் தொழுவது..... | இரா. சாந்தன் | 32- 34 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 35- 37 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 38- 39 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 40- 42 |
| செய்திச் சிதறல்கள் | - | - 43 |
| யாழ்ப்பாண அரசவம்ச.... | ந. குமரசிறி | 44- 45 |
| தகவற் பக்கம் | - | 46- 48 |
| முன்னைப் பழமையும்.... | ச. லலீசன் | 49- 51 |
| சந்நிதியான் | அற்புதன் | 52- 55 |
| முன்பள்ளிகளில்.... | அ. நிருபா | 56- 58 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 59- 64 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்




**வெளியீட்டுரை:**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள் நிகழ்த்தினார்கள்

அவர் தனது உரையில், ஆச்சிரமம் ஆற்றிவரும் பல்வேறு பணிகள் பற்றி எடுத்துரைத்தார். நித்திய அன்னப்பணி, மருத்துவசேவை, வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள், கல்வி கற்கும் மாணவர்களுக்கான நிதி உதவி போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் பலவற்றையும் பற்றி தெளிவாகவும் விரிவாகவும் சபையோருக்கு தெளிவுபடுத்தினார்.

மேலும் அவர் தனதுரையில், பல்வேறு சஞ்சிகைகளும் தோன்றி மறையும் இந்நாளில், "ஞானச்சுடர்" மட்டுமே முற்றுமுழுதாக ஒரு ஆன்மீக மலராக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளது என்றும், ஞானச்சுடரினை ஆச்சிரமத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியுமே தவிர- வேறு எங்குமே இதன் பிரதிகளை பெறமுடியாது என்பதுவும் ஒரு விசேடமான அம்சம் எனவும் குறிப்பிட்டு தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. நவரெத்தினம் (இளை. ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் முதலில், சபையில் உள்ள அனைவருக்கும் சந்நிதிவேற் பெருமானின் பூரண அருளாசி கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துக்கூறி தனது மதிப்பீட்டுரையை ஆரம்பித்தார்.

அவர் தனது உரையில் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்ற வாக்கிற்கிணங்க பசித்து வரும் அடியவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உணவினை வழங்கி, அவர்களது பசிப்பிணியைப் போக்குகின்றது. அத்தோடு "ஞானச்சுடர்" எனும் ஆன்மீக சஞ்சிகையினை வெளியிட்டு அறிவுப்பசியைப் போக்குகின்றது என்றும் கூறினார்.

தொடர்ந்து தனது உரையில், "ஞானச்சுடர்" சஞ்சிகையானது, கட்டுரைகள், கவிதைகள், படங்கள் தரும் பதிவுகள், பாடல்கள் என பல அம்சங்களைத் தாங்கி மாதாமாதம் வெளிவருகின்றது. ஞானச்சுடர் மலரை அனைத்து சைவ மக்களும் தமது பூஜை அறையில் வைத்து வழிபடக்கூடிய புனிதம் பெற்றுள்ளது என்றும் கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞரும் பேராசிரியருமான கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி தமிழ் நெஞ்சங்களை ஆழ்ந்த வேதனையில் மூழ்கடித்துள்ளது. அன்னாரது இறுதிச் சடங்குகள் கடந்த 10.07.2011 ஞாயிறு மாலையில் கொழும்பில் நடந்தது.

தமிழ்மொழி ஆய்வுக்காக, நுண்கலைத் துறையின் வளர்ச்சிக்காக, நாடக பாரம்பரியத்தின் எழுச்சிக்காக, ஈழத் தமிழினத்தின் வரலாற்றுக்காக பேராசிரியர் சிவத்தம்பி தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். தமிழ் இலக்கியம் மற்றும் தமிழாய்வினில் இவருக்கிருந்த புலமை மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளிலும் இவருக்கு உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றுக்கொடுத்தன.

கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் இவர் சமர்ப்பித்த "தமிழ் நாடகத் துறையின் தோற்றம்" பற்றிய ஆய்வறிக்கை பின்னர் புத்தக உருவில் வந்தபோது, அந்நூல் தமிழக அரசின் சிறந்த பரிசினைப் பெற்றுக் கொடுத்ததோடு நாடகத்துறை பற்றிய ஒரு புதிய விழிப்புணர்வினை இலங்கையிலும்-தமிழ் நாட்டிலும் தோற்றுவித்தது.

அவர் தம்மிடமிருந்த தமிழ்ப் புலமையினால்- இலக்கிய விமர்சனங்கள் செய்யும் செழுமையான ஆற்றலினால் தமிழ் சமுதாயத்திற்கு என்றும் மனநிறைவைத் தரக்கூடிய பெருமைகளைச் சொத்தாகக் கையளித்துச் சென்றிருக்கிறார்.


தம் ஆளுமையினால் தொட்டதெல்லாம் துலங்க வைத்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது மறைவினால் துயருறும் தமிழ் உலகத்தாரினதும்- அவரது குடும்பத்தாரினதும் தீராத சோகத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

ஞானச்சுடரும், அதன் வாசகர்களும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

# செல்வச் சந்நிதியானே சேயோனே!

## வணக்கம்



செந்தமிழ்ச் சொல் மலர் தொடுத்து
மாலை கட்டி யழகாய்
திருமுருகன் பாதமலர்
சிறியே னன்பால் சூட்டி
வந்தனையே பொருளாக
ஆற்றுப்படை யோடு
வான் பொருளாம் அநுபூதி
ஆற்றுப்படை இசைப்பேன்
கந்தா வென்பேன் சண்முகனே
கார்த்திகேயா வென்பேன்
கார்மயில்வா கனா என்பேன்
கழல் பணிந்தே நின்றே
சிந்தை நிறை புலம் வாழ்வோர்
செம்மனம் போல் அடியேன்
திருச் செல்வச்சந் நிதியானை
தியானிப்பேன் மறவேனே

வேறு

ஒருபோதும் மறவாத அன்பும்- என்றும்
ஓயாது நினைக்குஞ்சிந் தனையும்
இரு போதும் முப்போதும் போல- உன்னை
எப்போதும் வந்தேத்தும் உடம்பும்
குருவா யகத்தியர்க் குரைத்த அத்திருக்
கோலத்தை எனக்கும் காட்டாயா முருகா
பெரு ஞானம் இஃ தொன்றைக் கேட்டேன்- உன்தன்
பெருமலர்த்தாள் சேர்த்திடாயெம் பிரானே

முதுபெரும் புலவர், கலாபூஷணம்
ஆசிரியர் வை.க. சிற்றம்பலம்

# ஆடிமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**திரு ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)
**மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(கொழும்பு)
**K. கனகசபேசன்**
(கனடா)
**செல்வி தம்பு சறோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
**திரு இ. பேரின்பநாயகம்**
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)
**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
**திரு Dr. பொன். சின்னத்தம்பி**
(திருவேரகம், பொலிகண்டி)
**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
**திரு வே. பாரானன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)
**திரு நா. தங்கராசா**
(இளை. அதிபர், ஈவினை)
**திரு சி. தயாபரன்**
(கிராம சேவகர், கோப்பாய்)
**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
**திரு பொன்னையா சிவக்கொழுந்து**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)
**திரு நா. இராசலிங்கம்**
(அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி)
**உரிமையாளர்**
(தனு வீடியோ, உரும்பராய்)
**திரு வ.சி. குணசீலன்**
(தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி)
**திரு. செ. சுந்தரலிங்கம் J.P.**
(நிர்வாகி - சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலிசந்தி)

**திரு ந. சேகர்**
(கிராமசேவையாளர், வீரபத்திரகோவிலடி, உடுப்பிட்டி)
**திரு. கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)
**திரு. சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு சி. கருணா**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
**திரு மூ. பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக், இணுவில்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு. கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**திரு ம. இரத்தினமூர்த்தி**
(ஜெயகனன் பல்பொருள் வாணிபம், சுண்ணாகம்)
**திரு ந. இராசரத்தினம் J.P**
(நாகம்ஸ் நிறுவனம், சுண்ணாகம்)
**செல்வி. தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு சு. குணரெத்தினம்**
(ஞானவைரவர் வீதி, உரும்பராய்)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்.)
**செயலாளர்**
(கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய்)
**திரு மூ. சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)

**திரு. க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**திரு க. சிவகடாட்சம்**
(தாவடி, கொக்குவில்)
**திரு அ. ஸ்ரீதரன்**
(வளர்பிறை பட்டுச்சோலை, சங்கானை)
**செயலாளர்**
(கணபதி படிப்பகம், நெடியகாடு)
**திரு மு. விசயரத்தினம்**
(காட்டுப்புலம், தொண்டைமானாறு)
**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**திரு S. தர்மலிங்கம்**
(கமலபதி, மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**திரு சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**திரு வீ. சிவபாலசிங்கம்**
(கரன்பான்சி, சுண்ணாகம்)
**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
**திரு M. பாலசுப்பிரமணியம்**
(ஸ்ரீ முருகன் கபே. ஈவினை)
**திரு க. கிருபானந்தம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு M.K. ஜீவகதாஸ்**
(அறவழி, சாவகச்சேரி)
**திரு பா. பத்மராசா**
(மூளாய், சுழிபுரம்)
**திரு செல்வநாயகம் செல்வக்குமரன்**
(சிவன் வீதி, உரும்பராய்)
**திரு மு. இராஜேந்திரன்**
(முருகையா கோவிலடி, புலோலி)
**திருமதி. ஜெயலக்ஷ்மி**
(சென்ற் அந்தோனிஸ் லேன், மாதகல்)
**திரு பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)
**திரு செ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
**திரு நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**திரு வீ. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)

**திரு சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**திரு அ. அருள்நாதன்**
(துவாரகா, இணுவில்)
**திரு தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**திரு த. கமலேஸ்வரன்**
(ஈஸ்வரி வர்சம், இணுவில்)
**திரு செல்லப்பா சோமசுந்தரம்**
(முன்னாள் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு செ. அருளானந்தம்**
(கிராமசேவகர், பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**திரு C.K. சிதம்பரநாதன்**
(வட்டுவத்தை, அல்வாய்)
**திரு க. ஆனந்தராசா**
(லிங்கவாசா, நெல்லியடி)
**திரு க. தங்கராசா T.A.**
(அல்வாய் மேற்கு)
**திரு மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**திரு R. தவகோபால்**
(ஹரிராம், பலாலி வீதி, உரும்பராய்)
**திரு ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**திரு ச. சண்முகவடிவேல்**
(ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
**திரு செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வறங்கம், இணுவில்)
**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**திரு த. கந்தசாமி**
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**திரு இ. பரமசாமி**
(கொல்லோலை, உடுப்பிட்டி)
**சு. சர்வேஸ்வரன்**
(காளி கோவிலடி, மல்லாகம்)

# அனைத்தையும் அள்ளிக்கொடுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு



ஜிந்துஷா யோகராஜா அவர்கள்

ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிகளைத் தியானித்து தொழுதோமேயானால் சகல காரியங்களும் எளிதில் கைகூடும். கஸ்டங்கள் எல்லாம் விலகி சகல சௌபாக்கியங்களும் நம்மை வந்தடையும். ஆஞ்சநேய மகாப்பிரபுவின் அநுக்கிரக சக்தி அசாத்திய மானது. ஆஞ்சநேயசுவாமிகளின் துணை நமக்கு கிடைத்து விட்டால் மலையைக் கூடத் தூக்கி விடலாம். மலை போன்ற கஷ்டங்கள் கடுகாகவும், கடல் போன்ற சோதனைகளை கால்வாயாகவும் ஸ்ரீஆஞ்சநேய வழிபாடு மாற்றி விடும். சிரஞ்சீவி அனுமா் தம்மை வழிபடுவோருக்கு இன்னல்களையும் துன்பங்களையும் போக்கித் திருவருள் செய்வார். இவரை வழிபடுவோர் மிகவும் ஆசாரமாகவும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளை உடையவராகவும், புலனடக்கம் உடையவராகவும் இருத்தல் அவசியம். இயற்கையின் எழிலோடு உறவாடும் காற்றுத் தேவனின் திருவருளைப் பெற விரும்பி தமிழகத்திலும், மராட்டிய மாநிலத்திலும் மலைகளிலும், குன்றுகளிலும் சிற்பிகளால் ஸ்ரீ ஆஞ்சநேயரின் சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. இயற்கையில் மிகவும் வலிமை பொருந்திய சக்திகளில் முக்கியத்துவம் பெற்றுள்ள காற்றின்(வாயு) அம்சமாக இவர் விளங்குகின்றார்.

இராமபக்தி மிக்க அனுமர், இராம பஜனை செய்யும் இடங்களிலெல்லாம் எப்போதும் இருப்பார் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகின்றது. அனுமாரின் படங்களில் கூடத் தெய்வீக அருள் வழங்கும் தன்மை ஏற்பட்டு விடுவதாகக் கூறப்படுகின்றது. எனவேதான் அனுமாரை வேண்டிக் கொண்டு, தினந்தோறும் அவர் படத்திற்கு கவச அமைப்பாக சந்தனப் பொட்டு வைத்து வந்தால் எண்ணியகாரியம் நிறைவேறும் என்னும் நம்பிக்கை மக்களிடம் நிலவி வருகின்றது.

அனுமான், ஆஞ்சநேயன், வாயுபுத்திரன் மஹாபலிஷ்டன், இராமேஷ்டன், அர்ஜுனசகன், பிங்காட்சன், அமிதவிக்ரமன், சமுத்திரத்தைத் தாண்டியவன், சீதையின் சோகத்தைநாசம் செய்தவன், இலக்குமணனுக்கு உயிரைக் கொடுத்தவன், இராவணனின் கொழுப்பைப் பரிகாரம் செய்தவன் என்ற பன்னிரண்டு நாமங்களையும் கொண்ட ஸ்ரீ ஆஞ்சநேயர் துதிப்போர்க்கு மனஅமைதியையும், எடுத்த காரியத்தில் வெற்றியையும், அச்சம் என்பதே இல்லாத வாழ்வினையும் பயன்களாகக் கொடுக்கின்றான். அனுமாருக்கு வெண்ணெய் சாற்றுவதும் வடைமாலை சாற்றுவதும் மிகச் சிறப்பான வழிபாடாகக் கருதப்படுகின்றது. தினந்தோறும்

காலையில் நீராடிவிட்டு அனுமார் படத்துக்கு மலர்கள் சூட்டி அவர் நெற்றியிலும் வால் தொடங்குமிடத்திலும் சந்தனம், குங்குமப் பொட்டு வைத்து வணங்க வேண்டும். இவ்வாறு தினமும் ஒரு பொட்டாகத் தொடர்ந்து வாலின் நுனிவரை பொட்டிட்டு முடிக்கும் தினத்தன்று வடைகளைச் செய்து அவற்றை நாரிலே கோர்த்து அனுமார் படத்திற்கு 'வடைமாலை' சாத்தினால் பரிபூரண பலன் கிட்டும் என்பது ஒரு நம்பிக்கை.

ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிகளை எல்லா நாட்களிலும் வழிபடலாம். இயலாதோர் புதன், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களிலேனும் வழிபடலாம். துளசிமாலையும், வெற்றிலைச் சுருள் மாலையும் ஆஞ்சநேயருக்கு விசேடமானவை. துளசியில் அநேக மருத்துவ குணங்கள் உண்டு. அதே போல் அசோக வனத்தில் சீதாப்பிராட்டி வெற்றிலையைக்கிள்ளி ஆஞ்சநேயரின் சிரசின் மேல் போட்டு "அனுமா! நீ இவ்வுலகில் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்வாயாக" என்று அருள் பாலித்தார். அதனால் வெற்றிலைச் சுருள் மாலையும் விசேசமானது. பூஜையை ஆரம்பிக்கும் போது ஸ்ரீராம ஜெயம் அல்லது ஸ்ரீராம் ஜெயராம் ஜயராம் என்ற மந்திரத்தை 54 அல்லது 108 முறை தியானித்தல் சிறப்பானதாகும். கீழ்காணும் தினங்களில் பூஜையைத் தொடங்குவது விசேஷமானதாகும்.

1. மார்கழிமாதத்தில் மூலநட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை (இது தான் ஆஞ்சநேயர் அவதரித்த திருநாள்)
2. நட்சத்திரமும் அமாவாசையும் சேர்ந்து வராவிட்டால் அமாவாசையில்
3. சித்திரையில் ஸ்ரீ ராம நவமி தினத்தில்
4. மாதம் தோறும் கேட்டை நட்சத்திரத்தில்
5. இவை எதுவும் இல்லாவிட்டால் புதன், வியாழன் சனிக்கிழமைகளில் தொடங்கலாம்.

ஆஞ்சநேயச் சன்னதிகளில் வெண்ணெய் சாற்றியிருப்பதைக் காண்கிறோம். நமது வேண்டுதல்களுக்கு வெண்ணெய் போல உருகி நற்பயனைத் தருவார். அவரது அருளால் நம் மனத்திலுள்ள துன்பங்களெல்லாம் வெண்ணெய் போல் கரைந்துவிடும். ஸ்ரீ ஆஞ்சநேயர் வாலில் நவக்ரஹங்கள் இருப்பதாக ஐதீகம். ஸ்ரீ ஆஞ்சநேயர் விடும் மூச்சுக் காற்றுக் கூட 'ராம ராம' என்று தான் ஒலிக்கும். ஸ்ரீ ராம நாமம் எங்கு ஒலித்தாலும் அங்கே வந்துவிடுவர் ஆஞ்சநேயர். ஸ்ரீ ராம நாமம் ஆஞ்சநேயரின் உயிர் மூச்சு நாமம் மட்டுமல்ல, எம்பெருமான் பரமேஸ்வரனுக்கும் மிகவும் விருப்பமானதாகும். மகாபாரத யுத்த முடிவில் தருமரின் பட்டாபிஷேகத்தின் பின்பு பீஷ்மரிடம் வந்து ஆசி வேண்டி நிற்கும் போது பிஷ்மரினால் அருளப்பட்ட விஸ்ணு சகஸ்ரநாம தோத்திரத்தின் போது பரமேஸ்வரனால் அசரீரியாகக் கூறப்பட்ட ஸ்லோகம் இது. இந்த ஒரு ஸ்லோகம் துதிக்கப்பட்டால் முழு விஸ்ணு ஸகஸ்ர நாமம் துதிக்கப்பட்ட பலன் கிடைக்கும்.

ஈச்வர் உவாச: "ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே!
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வரானனே
ஸ்ரீ ராம நாம வானன ஓம் நம இதி"

ஆஞ்சநேய வழிபாட்டை மேற்கொண்டு இவ்வுலகில் சௌபாக்கியர்களாக வாழ்வோமாக.

**தனிமை மிக இனிமையானது. சிறந்தபல சிந்தனைகள் தோன்றத் துணைபுரிவது.**

# ஆன்மீகமும் சமயமும்

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சமயத்தைக் கற்றறிந்து கொண்டால் மட்டும் போதாது; கற்றபடி ஒழுகவும் வேண்டும். "கற்றாங் கொழுகு" என்பது இதனைக் குறிக்கும் மகுடவாசகம். சமய வாழ்க்கை வாழவேண்டும் என்கிறார்கள். அப்படியென்றால் என்ன? துறவியாக வேண்டுமா? சந்நியாசம் பூணவேண்டுமா? காட்டுக்குப் போகவேண்டுமா? என்று பலர் நினைக்கிறார்கள்; இன்னுஞ் சிலர் கேட்டும் விடுகிறார்கள். சமூகத்தில் வாழ்ந்து கொண்டும்; தொழில்கள் செய்துகொண்டும்; குடும்பத்தை நடத்திக் கொண்டும்; மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டும்; அதேவேளை சமயவாழ்வு வாழவும் வேண்டும் என்றால், அது எப்படிச் சாத்தியமாகும்? நேர அவகாசத்திற்கு எங்கே போவது? ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், உண்ணவும் உறங்கவும்கூட நேரமில்லாமல், என்னென்னவோ கருமங்களை ஓடிஓடி ஆற்றிக் கொண்டிருக்கும் மனிதர்கள், சமய வாழ்க்கை வாழவேண்டும் என்னும்போது மலைக்கிறார்கள்; அது வேறு சுமையா? எனக் கேட்டுச் சலிக்கிறார்கள். இதுவே மனிதர்களின் இன்றைய நிலை. இவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

பாடசாலைகளில் மாணவர்களுக்குப் பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்தையும் கற்பிப்பதற்கெனப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டு நேரசூசி தயாரிக்கப்படுகிறது. குறித்த பாடத்தை அதற்குரிய பாடவேளைகளில் கற்பிக்கிறார்கள். மேலதிக பாடம் இருப்பின், அதனைக் கற்பிக்க, நேரசூசியில் இடமளிக்கப்படவில்லை என்று கூறிக் கற்பிக்க மறுத்துவிடுகிறார்கள். இந்தமாதிரியான ஒரு நிலைமை தான் மனிதர்களுக்கும் ஏற்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது.

வாழ்க்கை என்னும் பள்ளிக்கூடத்தில், தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் நேரசூசியில், சமய வாழ்க்கைக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை; அதனால் சமய வாழ்க்கையை வாழக் காலநேரம் இல்லை என்பது இன்றைய மனிதர்களின் நிலைப்பாடு.

சமய வாழ்க்கை வேறு, சமூக மற்றும் உலகியல் சார்ந்த வாழ்க்கை வேறு என்று இம் மனிதர்கள் கருதுகிறார்கள். இதுவே இந்தக் குழப்பத்திற்குக் காரணமாகும்.

உண்மையில் நாம் வாழ்க்கையை நடத்தும்போதே, சமயத்தையும் அதனுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். "நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் அவன் தாள் நினை" என்கிறார் ஓர் அருளாளர். கடவுளை நினைப்பதற்கு என்று ஒரு நேரம் தேவையில்லை. நாம் எமது அன்றாட கடமைகளையும், கருமங்களையும் ஆற்றும் போதே கடவுளையும் நினைத்துக் கொள்ளலாம். கடவுளைச் சிந்தையிலிருத்தி, ஆற்றும் கருமங்கள் நல்லனவாக அமையும். கருமங்கள் நல்லனவாய் அமைவதாலும், வழி செம்மையாய் இருப்பதாலும், காரியங்கள் சித்திபெறுகின்றன. கடவுளை நினைந்து, செய்யும் காரியங்கள் நல்லனவாகவே

தன்னடக்கமும் சுறுசுறுப்புமே மனிதனுடைய நிவாரணங்கள்.

அமைகின்றன. இங்கு சமயம் வாழ்க்கையோடு கலக்கின்றது. வாழ்க்கையோடு கலக்காத சமயமோ, சமயத்தோடு கலக்காத வாழ்க்கையோ பயனுள்ளதாக விளங்க முடியாது.

அளவாகப் பேசுங்கள்; இன்சொல் பகருங்கள்; அன்பைப் பெருக்குங்கள்; பிறர்மீது கரிசனை கொள்ளுங்கள்; பகிர்ந்து உண்ணுங்கள்; நலிந்தோர், ஊனமுற்றோர், ஏழைகள் ஆகியோருக்கு உதவுங்கள்; சாந்தம், அமைதி, அடக்கம் என்பவற்றைப் பேணுங்கள்; தாய், தந்தை, பெரியோர், மூத்தோர் ஆகியோரைக் கனம் பண்ணுங்கள், மரியாதை செய்யுங்கள்; கடமையுணர்வோடு உங்கள் தொழில்களை ஆற்றுங்கள்; செய்யுந் தொழிலே தெய்வம் என்று கொள்ளுங்கள்; வசதிப்பட்ட வேளைகளில் ஆலயம் சென்று இறைவனை வழிபாடு செய்யுங்கள்; தொண்டுகள் புரியுங்கள். இதுதான் சமய வாழ்வு. அன்றாட வாழ்க்கையோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். தீயவற்றை விலக்கி நல்லவற்றை ஏற்று வாழும் வாழ்வே சமயவாழ்வு ஆகும். அதுவே ஆன்மீக வாழ்வும் ஆகும்.

## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகால நிகழ்வுகள்

| | |
|---|---|
| **கொடியேற்றம்** | **:29.08.2011 திங்கட்கிழமை காலை 09.20 மணி** |
| **காலைத்திருவிழா ஆரம்பம்** | **:01.09.2011 வியாழக்கிழமை** |
| **பூங்காவனம் 10ஆம் திருவிழா** | **:06.09.2011 செவ்வாய்க்கிழமை** |
| **கைலாசவாகனத் திருவிழா** | **:07.09.2011 புதன்கிழமை** |
| **சப்பறத் திருவிழா** | **:10.09.2011 சனிக்கிழமை மாலை 06.00 மணி** |
| **தேர்த்திருவிழா** | **:11.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி** |
| **தீர்த்தத்திருவிழா** | **: 12.09.2011 திங்கட்கிழமை காலை** |

**சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல பணிகளுக்கும் மூலகாரணமாக அமைவது நித்திய அன்னப்பணியே ஆகும். அந்த வகையில் ஆச்சிரமப் பணிகள் அனைத்துக்கும் ஆதரவு நல்கும் அன்பர்கள், அடியார்களுக்கு சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன், வழமைபோல உற்சவ காலத்தில் நடைபெறும் அன்னப் பணிக்கு தங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றோம்.**

**-சுபம்-**

**சந்நிதியான் ஆச்சிரமம்.**

**கடவுள் தமது செயலைக் கோழைகள்மூலம் விளக்கமாட்டார்.**

(தொடர்ச்சி...

# ஓ வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

நினைக்க முத்தி அளிக்கும் திருவண்ணாமலைக் கோயிலின் கோபுர உச்சியிலிருந்து அருணகிரிநாதர் வாழ்க்கையை வெறுத்து, உயிரை மாய்த்துக்கொள்ள "முருகா" என அழைத்தவண்ணம் குதித்த போது; கருமேனி தாங்காது திருமேனி தாங்கி வந்த கருணை வள்ளல், அவரைத் தன் செங்கையால் ஏந்தி தன் திருப்பாதங்களைக் காட்டி ஆட்கொண்டார். அருணகிரிநாத சுவாமிகள் முருகப்பெருமானிடம் "சும்மா இரு சொல்லற" என்ற மௌன மந்திரோபதேசம் பெற்று நிறுவி கற்ப சமாதியில் வீற்றிருக்க, சண்முகன் மயில் மிசை தோன்றி, "உலகம் உய்யத் திருப்புகழ் பாடுதி" என்றருள் புரிய, அருணகிரியார் மறைகளாலும் சாற்றுதற்கரிய தேவரீரது புகழை, ஏடெழுதா முழு ஏழையாகிய சிறியேன் எங்ஙனம் பாடுவேன் எனலும், "நாக்கை நீட்டு" என்று வேலின் நுனியால் "ஓம்" எனும் மந்திரத்தை எழுதினார். செந்தமிழ்க் குமரன் தனது ஞானமூறு செங்கனி வாய் மலர்ந்து கனத்த செந்தமிழால் "முத்தைத் தரு" என்று அடியெடுத்துக்கொடுக்க, கடல் மடைதிறந்த வெள்ளம்போல் திருப்புகழைப் பாடினார்.

முருகவேள், "வயலூருக்கு வா" என்றருள்புரிய அருணகிரிநாதர் அங்கு சென்று முருகன் அருளியபடி பொய்யாக் கணபதி சந்நிதியில் நின்று, "கைத்தல நிறைகனி" என்ற திருப்புகழைப் பாடியபின் முருகன் கனவிலும், நனவிலும் அடிக்கடி தரிசனம் தந்தருள் புரிந்ததும் தெய்வீகம் பொருந்திய திருத்தலமானபடியினாலும் வயலூரையும் திருப்புகழில் இடையிடையே பாடினார். திருப்புகழின் சந்தத்திற்கு இணையான ஒன்று எந்த மொழி இலக்கியத்திலுமில்லை. சங்கத் தமிழின் தலைமைப் புலவனாம் குமரவேளைச் சந்தத் தமிழ்பாடி திருப்புகழ் ஆக்கியவர். நம் பிறவிப்பந்தம் களைய வல்ல சந்தத்தமிழ் நூல் "திருப்புகழ்". பேரின்பப் பெருவெள்ளம் அது. படிப்போரை உணர்ச்சி வெள்ளத்தில் திக்குமுக்காடச் செய்யும் தெய்வீகத்தேனே அருணகிரியின் அமுதம். இதனை அன்புடன் ஓதினால் இறைவன் நம்வயப்படுவான். திருப்புகழை ஓத ஆசைப்பட்டாலே போதும். எத்துணைப் பாவங்கள் புரிந்தாரேனும், பாவநாசகனாகிய குமரக்கடவுள் கரிசனையுண்டாகுமேல், பாவங்கள் முழுதும் நீங்கித் தூயவராவர். முருகப்பெருமானின் திருவடிகள் மூன்று இடங்களிற் பட்டன. மயில்மீது, தேவர்தலை மீது, மூன்றாவது திருப்புகழ் ஏட்டில். முருகன் திருவடிபட்டு அனுக்கிரகம் பெற்ற ஒப்பற்ற பாமாலைதான் எத்திக்கும் புகழ்மணக்கும் தித்திக்கும் திருப்புகழ் பாடல்கள். விந்தையான சந்தம் கொண்டு சிந்தை கவர்வது. படிப்போரையும், கேட்போரையும் பக்தியில் திளைக்கச் செய்யும். முருகன் திருவருளை

எதையும் மன்னிக்கும் ஒரே நீதிமன்றம் தாயின் இதயம்.

வேண்டி "சந்தக்கடல்" என்று சொல்லத்தக்க அளவில் பல்லாயிரம் பாடல்களை முருகன் திருவடிகளில் சூட்டி மகிழ்ந்தார் அருணை முனிவர்.

ஞானமலையிலும் அருணகிரிநாதரின் வேண்டுகோளுக்கிணங்க வள்ளியுடன் தரிசனம் கொடுத்தான் ஞானபண்டிதன். முருகன் அஷ்டமாசித்திகளை அருளிச் செய்த பெருமைகளை திருவகுப்புத் தொகுப்பில் பாடுகிறார். திருவிடைக் கழியில் உள்ள குராமரத் தடியில் முருகன் உலவிய அழகைப் பாடுவார். பிரபுடதேவ மகாராஜன் கண்டு இன்புற, முருகன் ஆடிவந்த அழகை "அதல சேடனாராட" என்னும் திருப்புகழ் பாட முருகன் கருணை கொண்டு காட்சியளித்தார்.

"சித்ர கவியால் நான் உன்புகழ்பாட அருள்செய்வாய்" என அருணகிரியார் பிரார்த்திக்க சுவாமிமலை முருகன் அருள்புரிகிறான். "திருஎழு கூற்றிருக்கை" என்கிற தேர் வடிவில் அமைந்த- சித்ரகவி பிறக்கிறது. திருச்செந்தூர், திருத்தணிகை, பிரான்மலை, சிதம்பரம் முதலிய திருத்தலங்களில் கந்த வேளின் நடன தரிசனம் கிடைக்கிறது.

எத்தனையோ ஆயிரம் கோடி அலங்காரங்கள் கந்தனுக்குண்டு. ஆனால் கந்தரலங்காரமே அலங்காரம். சொற்சுவையும், பொருட்சுவையும் இட்டளைந்த தேன் பாகாய் இருக்கும் வண்ணம் கட்டளைக் கலித்துறையாக கவிவிருந்து வைத்தார் அருணகிரிநாதர். "அடலருணைத் திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு வடவருகிற் சென்று கண்டு கொண்டேன்" எனக் கந்தப்பெருமானை அடையாளங் கண்டு ஆனந்தம் அடைவதாக அலங்காரம் ஆரம்பமாகிறது. ஆனைமுகனைச் சொல்லாமல் ஆரம்பிக்கலாமா? விநாயகனைக் காணவருகிறவர்கள் "தடபட" எனச் சத்தம்வருமாறு நெற்றிப்பொட்டில் குட்டிக்கொள்கிறார்கள். அந்தக் குட்டை ஏற்றுக்கொள்வதோடு அவர்கள் படைக்கும் இனிப்பான மோதகத்தையும் ஒருகைபார்க்கும் ஆனைமுகத்தான் தம்பி, சின்ன யானையைக் கண்டு கொண்டேன் என்கிறார். கந்தரலங்காரத்தில் பிரமனையும், யமனையும் வம்புக்கிழுக்கிறார். முருகனின் முழு அழகையும் காண இரு கண்கள் எப்படிப் போதும். "நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" எனக் குறிப்பிடுகிறார். யமனுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். செந்தில் வேலவனுக்குத் தொண்டுபுரிவதால் தம்மிடம் ஞானச்சுடர்வாள் இருக்கிறது. "யமனே! கொஞ்சம் அருகே வந்து பார்" எனக் கூவுகிறார். "தேரணியிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேல்" எனும் பாடலில் சூரனோடு போர் செய்த மாபெரும் போர்க்களக் காட்சியை கண் எதிரே நிறுத்தி விடுகிறார். "மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்" என்று கந்தனின் காதலை வெளிப்படுத்துகிறார். கந்தரலங்காரப் பாடல்களை மேலோட்டமாகப் படிக்கக்கூடாது. பலமுறை படித்து பொருளுணர்ந்து சிந்தித்து அனுபவித்தல் வேண்டும். அப்பொழுதுதான் கரும்பையும், தேனையும் விடக் கந்தனின் திருநாமம் இனிப்பதைச் சுவைக்கலாம்.

உயிர்களுக்குப் பற்றுக்கோடாக விளங்கும் கந்தனோடு ஒன்றுபடுவதுதான் கந்தரநுபூதி. கூடுவிட்டுக் கூடுபாய்ந்து கிளி ரூபத்திலிருந்து அருணகிரிநாதரால் "கந்தரநுபூதி" பாடப்பட்டது. கந்தரநுபூதி தனித்த பெருமையுடையது. கந்தப்பெருமானிடம் கலந்துறவாடுவதற்கு ஒரு பாலமாக துணையாக உள்ளது. சொற்பதங்களில் ஓர் அற்புதம். சிறிய பாடல்கள் ஒவ்வொன்றும் அநுபூதியில் விளைந்த அருள்முத்து. ஆன்மீகப் பாரிஜாதம்.

கந்தனின் அருள் முகத்தை மாந்திக் களித்த அருணகிரியார், நாம் நீந்திக் களிக்க தந்த நீறநிலை. அஷ்டமா சித்திகளை அருள வல்லது. "கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை அருணகிரி" என்கிறார் தாயுமானவர். கந்தர் அநுபூதி பெற்றுப் பாடியது மட்டுமல்ல, கந்தர் அநுபூதி எல்லாரும் பெறப்பாடியதாகும். மந்திரத்தமிழ் அநுபூதி "யாம் ஓதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" வந்தது. இந்தப் பாடலை உள்ளம் உருகி ஓத ஓராயிரம் கலை உடனே வசமாகும். அல்லும் பகலும் நினைந்து உருகி, உருகி கந்தர் அநுபூதியை யார் உபாசனை புரிகிறார்களோ அவர்களுக்கு ஸ்கந்தலோகப் பதவி கிடைக்கும். செந்தமிழ் மந்திர அநுபூதியில் நிறைவான பாடல் "உருவாய் அருவாய்" இந்தப் பாடலை ஓத இன்ப நிலை தானே வந்தெய்தும். இறைவரும் அருள்தரும் நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக, தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர் செஞ்சொற் புனைமாலையே அருணகிரிநாதர் சூட்டிய அநுபூதிமாலை. பரஞானத்தின் உச்சம் கந்தரநுபூதி.

இப்படி நமக்கெல்லாம் மந்திரம் சொன்ன அருணகிரிக்கு ஆறுமுகப்பரமன் உபதேசமாக ஒரு மந்திரம் சொன்னான். "சும்மா இரு சொல்லற", செயலற்று, பேச்சற்று இருத்தல். கையும், வாயும் அடங்க மனம் தானே அடங்கும். மனமற்ற நிலை சும்மா இருக்கும் நிலை. நான், தான் என்ற வேறுபாடு நீங்கி, மோன நிலை பெற்றால், சான்றோரும் அற்ற தனிவழியில் முருகனோடு ஒன்றி இன்புறலாம். "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்கிறார் தாயுமானவர். ஆகவே மௌனமென்பதும் "சும்மா இரு" என்பதும் சுட்டிறந்த முதல்வனையுணரும் ஞானநிட்டை என்பது தெளிவு.

அருணகிரிநாதர் பாடிய திருவகுப்பு, வேல், மயில், சேவல் விருத்தங்கள், திருஎழுகூற்றிருக்கை ஆகியன ஒப்பற்ற அற்புதமான மகாமந்திரங்கள்.

சிவனாரின் குலக்கொழுந்து, உமையவள் பெற்ற இலஞ்சியம், உலகம் உய்ய உதித்த திருமுருகன், நாமெல்லாம் உய்யும் பொருட்டு, திருவிளையாடலை நடாத்தி அருணகிரிநாதரை ஆட்கொண்டு நமக்கெல்லாம் உபதேசமாக இம் மகா மந்திரங்களை அவர் மூலமாக அருளிச்செய்துள்ளார். அந்த அமிர்தத்தினைப் பருகி, இளம் தலைமுறையினரும் இவற்றை ஓதி உணர்ந்து தெளிவு பெற்று முருகன் அருள் பெறவேண்டும். விதியையும் வென்று மும்மலங்களினின்றும் நம் மனதைக் கட்டுப்படுத்தி, செயலையும், பேச்சையும் குறைத்து, கந்தப்பெருமானைச் சிந்தையிலிருத்தப் பழகிக் கொண்டால் கந்தப் பெருமானே நமக்குக் குருவாக இருந்து திருவருள் புரிவான். அருணகிரிநாதர் அருவியெனப் பொழிந்த திருப்புகழை, சந்தம் முந்தும் செந்தமிழில் கந்தனைப் போற்றிய பேரின்பச் சுவையை, அருளமுதத்தினை ஓதி உணர்ந்து, மகிழ்ந்து, துதித்து உமைபாலன் திருவருள் பெறுவோமாக.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

(தொடரும்...

# பண்பாட்டு மையங்கள்

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

அருட்தெய்வமாக , அழகுத்தெய்வ மாக, ஞானத்தெய்வமாக, தமிழ்த் தெய்வமாக விளங்குகின்ற முருகனுக்குத் தமிழர் கண்ட வழிபாடு தொன்றுதொட்ட வழிபாடாகும். "சேயோன் மேயமைவரையுலகமும்" என்ற தொல்காப்பிய அடி அதனை வலியுறுத்து கிறது.

யாழ் மண்ணில் கந்தபுராண கலா சாரம் மேலோங்க முருக வழிபாட்டுத் தலங் கள் பல உள. முத்தமிழையும் சுவைத்த முருகன் ஆலயச் சூழலில் சமய, கலை, கலாசார, மேம்பாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி சிறப்படைந்துள்ளன. சிறப்படைந்த பல முரு கன் ஆலயங்களில் மூன்று தலங்களை நோக்குவோம்.

யாழ் நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் இலங்கையின் ஒரேயொரு ஆதீன மாக அமைந்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் சைவ சமயத்தின் அதியுயர் பீடமாக அமைந்து அரும் பணியாற்றுகிறது. பண் ணிசை, வழிபாடு, சமயச் சொற்பொழிவுகள், சமயக் கருத்தரங்குகள் மூலம் எம்மக்களை நெறிப்படுத்த முருகனருள் தூண்டுகிறது.

யாழ்ப்பாண அறநெறிப் பாடசாலை களின் ஒன்றியத்தின் சமய கலை நிகழ்வுகள், வருடாவருடம் நல்லைக் கந்தனின் மஹோற் சவ காலத்தின்போது, நாவலர் மணிமண்ட பத்தில் மெய்யுருக வைக்கின்றன. மேலும், பல சைவ சமய விழாக்கள், கருத்தரங்குகள் அடிக்கடி நடைபெறுவதால், மக்களுக்குச் சமய விருத்தியை நல்லைக்குமரன் ஏற்படுத்து கிறார். யாழ் இளங்கலைஞர் மன்றத்தினின் தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் மகோற்சவ காலத்தில் நடை பெறுகிறது. மேலும் பல சமய, விழாக்கள், கலைப் படைப்புக்களை இம் மண்டபத்தில் அனுபவிக்க வைத்த முருகப்பெருமானின் பெருங் கருணையைப் போற்றாதாரில்லை.

பார்போற்றும் வண்ணம் சைவமும் தமிழும் ஆய கலைகளும் உறைந்து பண் பாட்டுச் சிறப்பால் உயர்ந்த ஊர் இணுவில். இங்கு வாழ்ந்த சித்தரான பெரிய சந்நியாசி யார் இணுவைக் கந்தனின் கோரிக்கைப்படி உலகப்பெருமஞ்சமாம் அற்புதமான கலைக் களஞ்சியத்தை அமைத்து மக்களின் பக் தியை நிலைநாட்டினார். முருகன் பணிக்கென முன்வந்த இளந்தொண்டர் சபையினர் இறை பணியுடன் கலை, கலாசாரப் பணியையும் மேற்கொண்டனர். முருகனின் அருட்கொடை யாக அமைந்த இளந்தொண்டர்சபை என்னும் சைவசமய நிறுவனம் சமயத்துடன் தூய கலைகளையும் வளர்க்கின்றது. இங்குள்ள முன்பள்ளி, அறநெறிப்பள்ளி, கலை வகுப்புக் களில் முன்னூறு சிறிய மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இவர்களின் அறுவடையாக பதி னெட்டு மாணவர்கள் கலைகள் பயின்று கலைஞர்களாக அரங்கேற்றங்கண்டு பல் வேறிடங்களில் சிறப்பாகப் பணியாற்றிப் பிர காசிக்கின்றனர். அறநெறிப்பள்ளி மாணவர்கள்

பண்ணிசை, சமய கதாப்பிரசங்கம், வில்லிசை, நடனம், நாடகம், யாவற்றிலும் சிறப்படைந்துள்ளனர். தமது திறமை காரணமாக பல்வேறு சமய நிலையங்கள் ஆலயங்களில் மேடையேறித் தமது திறமையை நிலைநாட்டி உள்ளனர்.

இணுவில் கந்தப்பெருமானின் அருளாசியுடனும், சமய, கலை, கலாசாரப் பண்புடைய சபையின் ஆரம்பகால உறுப்பினர் மா.ந. பரமேஸ்வரனின் நெறிப்படுத்தலுடனும் சகல கலைகளும் மேடையேறுகின்றன. ஒரு நிகழ்ச்சி மேடையேறுமிடத்து முதலிடமும், சிறந்த விமர்சனமும் பெறாத நிகழ்ச்சிகள் இல்லை. இவையாவும் இறையருளும் குருவருளும் மண்வாசனையும் இணைந்ததனால் கிடைத்தது.

அடுத்து ஆடம்பரமற்ற அற்புதங்களுடன் அருள்தந்து மக்களினைப் பக்தி வெள்ளத்தில் மூழ்கடிப்பவர் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன். இச்சூழலில் அன்னம் வழங்கி அறப்பணியாற்றி அன்பினால் அருங்கலைகளை அரங்கேற்றும் சந்நிதியான் ஆச்சிரமம் சிறப்புடையது. அன்னக்கொடைப் பணியாற்றும் மோகனதாஸ் சுவாமிகள் தமது முன்வினைப் பயனுக்கேற்ப பல, சமய சமூகப் பணியாற்றிவருவது யாவரும் அறிந்ததே.

சுவாமிகளின்பால் தூய சிந்தனையும், அபார பக்தியும், சிறந்த இசைவளமும், நெறிப்படுத்தும் ஆற்றலும் மிகுந்து பிரகாசிக்க வைத்தவர் சந்நிதி முருகன். சுவாமிகள் தமது இளமைப் பருவத்திலிருந்தே முருகபக்தி மேலீட்டினால் பஜனை செய்யும் ஆற்றல் படைத்தவர். ஆற்றங்கரை வேலவனின் அருளாசியால் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உதயமானது. சைவநெறி புகட்டும் அற்புதமான கட்டுரைகள் சமயநீதிகளை வெளிப்படுத்தும் "ஞானச்சுடர்" என்னும் அரிய மாதாந்த மலர் இப்பேரவையினால் தொடர்ந்து வெளிவருகிறது. முருகனின் வேண்டுதலுக்கேற்ப 162ஆம் மலரும் சிறப்புடன் மலர்ந்துள்ளது. ஒவ்வொரு மாதக் கடைசி வெள்ளி தோறும் மலர் வெளியீடும், ஏனைய வெள்ளி தோறும் கலை நிகழ்வுகளும் சமயச் சொற்பொழிவுகளும் தவறாது நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. இந்த நிகழ்வுகள் முத்தமிழையும் சுவைக்கும் முருகனுக்கு அர்ப்பணமாகவே அமைந்துள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெள்ளி வாராந்த விழாவினை அடியேன் கண்டு களிக்க முருகன் அருள் கூடியது. குளிர்ச்சியான மார்கழி மாத காலநிலை அன்றைய விழாவுக்குச் சிறப்புச் சேர்த்தது. திருவாசகம் ஓதிய விற்பன்னர் யாவரையும் வியக்க வைத்தார். தொடர்ந்து இணுவில் இளந் தொண்டர்சபை அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற "வள்ளி திருமணம்" எனும் நாடகம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பதினான்கு வயதுக்குட்பட்ட நான்கு மாணவர்கள் தமது திறமையை நிலைநாட்டினர். நிகழ்வில் பாடல்களே அதிகமாக உபயோகிக்கப்பட்டன. தாளம், லயம், சுறுசுறுப்பு அதற்கமைவான அங்க அசைவுகள் யாவும் நாடக இலக்கணத்துக்கமைவாகவே இருந்தன.

மாணவர்களின் பக்திநெறியும் பயிற்சி தந்த பரமேஸ்வரனின் நெறிப்படுத்தலும் சபையில் இருந்தவர்களை வசீகரித்தது. பங்குகொண்ட மாணவர்கள் ஒரு தலை சிறந்த நாடக நடிகர் எவ்வாறு செயற்படுவாரோ, அதனிலும் திறமையான தமது நடிப்பினாலும் பிஞ்சுக் குரலின் மழலை மொழியாலும் யாவரையும் (ஆடாமல் அசையாமல் இருந்து) உறைய வைத்தனர். சிறந்த ஹார்மோனிய, மிருதங்க இசை அணிசேர்ந்தன.

நிகழ்ச்சியின் முடிவில் கலாரசிகரும் ஓய்வு பெற்ற அதிபருமான அன்னைதாசன் அவர்கள் அந்த மாணவர்களை வெகுவாகப் பாராட்டினார். மேலும் மாணவர்களின் ஊரான இணுவில் கிராமத்தின் கந்தபுராண கலாசாரமும் பல்கலைஞானமும் பிரகாசித்ததென வியந்தார்.

தொடர்ந்து பஜனை நிகழ்வு நடைபெற்றது. சிறந்த பின்னணி இசையுடன் முதலில் திருவாசகம் ஓதப்பட்டது. சிறிது நேரத்தில் மேடையின் நடுவே மோகனதாஸ் சுவாமிகள் தமது சமய இசைப்பணியை ஏற்றார். எடுத்த எடுப்பிலேயே திருவாசகத்தில் உயிரோவியமான திருப்படையாட்சியில் பன்னிருசீக்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்த "கண்களிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே" என்று தொடங்கும் பாடலை ஆரம்பித்தார். இப்பெரு நிகழ்வில் பங்குபற்றிய அணிசெய் கலைஞர்கள் உட்பட பஜனையில் உடன்பாடியவர்கள் அனைவரும் அகவை அறுபதைக் கடந்தவர்கள். திறமையான பண்ணிசையை உரிய முறைப்படி பாடினார்கள்.


மோகனதாஸ் சுவாமிகள் தமக்கே உரித்தான இன்னிசையுடன் தமது சிம்மக் குரலில் ஓங்கார நாதத்தில் திருவாசகப் பாடலைப் பாடியதும் சபையினர் (திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திலும் உருகார் என்றாற்போல) அனைவரும் உருகி விட்டனர். மாணவர்களின் பிஞ்சுக்குரலில் உறைந்த சபையினரைத் தலைபஞ்சாகிப் போன முதுமைபெற்ற பஜனையாளரின் திருவாசகப் பாடலால் உருகவைத்தமை யாவும் அருட்தெய்வமான முருகனின் திருவிளையாடலேயாகும்.

இவ்வரிய பஜனையைச் சுவைத்த போது தென்னிந்திய பக்திப்பாடகர் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளின் இசையினை மோகனதாஸ் சுவாமிகளின் பாடற்சிறப்பு விஞ்சிவிட்டது. மோகனதாஸ் சுவாமிகளின் பாடலில் இனிமை, அடக்கம், கம்பீரம், சாரீரம், தாளம், சுருதி யாவும் ஒருங்கமைந்துள்ளன. பாடும்போது தம்மை இறைவனிடம் ஒப்படைத்து அவன் குரலாகவே பாடினார். திருவாசகப் பாடலுடன் முருகன் பேரிலும், சிவன் பேரிலும் பல பாடல்களைப் பாடினார். யாவும் போற்றத்தக்கவை.

அன்றைய நிகழ்வுமூலம் ஆற்றங்கரை வேலவன் தாமும் சுவைத்து எம்மையும் இன்புற வைத்த திருவிளையாடலை ஏற்றிப்போற்றுவோமாக.

**எம்மை ஆளும் சந்நிதிச் சேய்**
**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

**ஆர வாரம் மிக்க ஆழி**
**யாயும் பக்கம் கோயில் கொண்டு**
**தார மாய தேவி மாராம்**
**வள்ளி தெய்வ யானை யோடு**
**சேர ஐய நீயி ருந்து**
**சீர ருள்தான் தந்து நிற்பாய்**
**ஆரு னக்கு நேர தாவர்**
**ஆறு சூழுஞ் சந்நி திச்சேய்**



-மு. தியாகராசா-

ஒருவன் சிரித்த முகத்துடனேயே கெட்டவனாக இருக்கமுடியும்.

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



**திரு கே.வி. குணசேகரம் அவர்கள்**

சைவசித்தாந்தப் பெருநூலான சிவ ஞானபோதம் கடவுளின் நிலை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது. "பிரமாவுக்குமேல் விஷ்ணு, அவருக்கு மேல் உருத்திரர், அவருக்குமேல் மகேஸ்வரர், அவருக்குமேல் சதாசிவர், அவருக்குமேல் விந்து, அதற்கு மேல் நாதம், அதற்குமேல் சக்தி, அதற்கு மேல் சிவம், சிவனே சிருஷ்டி, திதி, சங்காரம் என்னும் அனைத்திற்கும் காரணர்; தேவ நாயகர்; ஞானமூர்த்தி. இவரே சிவதத்துவ தாண்டேசுவரர். அவரைச் சுகாசணத்தில் இருந்து புஸ்பத்தைக் கையிலே கொண்டு வணங்க வேண்டும் என்று மகுடாகமம் சொல்கிறது.

சங்கரருக்கு முன்பு சைவம் என்றொரு சமயமே இருந்தது. சங்கரர்தான் சைவக் கடவுள்களைப் பிரித்து வெவ்வேறு சமயமாக்கினார். ஒரே குடும்பத்தைக் காரணமின்றிப் பிரித்தது மகாதவறு. தாய் ஒரு சமயம், தந்தை ஒரு சமயம், பிள்ளைகள் வெவ்வேறு சமயம், இரத்த உறவினர் வேறு சமயங்கள் என்று பிரித்தமை பிழை. ஒரு குடும்பத்தில் ஆறு சமயங்கள் எப்படி வரும். சைவ சித்தாந்தமோ அல்லது சங்க நூல்களோ செய்யாத ஒரு செயலைச் சங்கரர் செய்துள்ளார். வேத ரீதியாக, ஆகம ரீதியாக, உபநிடத ரீதியாகப் பார்த்தால் கடவுள் ஒருவர். அவர் சிவன். சிவனின் குடும்பத்தவர்கள் ஏனையோர். கணவனையும் மனைவியையும் பிரிக்கமுடியாதென்பதற்காகவே சிவன் அர்த்த நாரீசுவர உருவம் எடுத்தார்.அதை எப்படிப் பிரிக்க முடியும். புராணங்களின் கூற்றுப்படி சிவன் தொழில்களைப் பங்கீடு செய்து கொடுத்துள்ளார். அதுவும் தனது இன்னொரு அவதாரத்திற்கு. விநாயகரும் முருகனும் சிவனின் பிள்ளைகள் என்றும் சிவனே அவர்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

கந்தபுராணம் சிவனே முருகன் என்று கூறுகிறது.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய"

சைவ சித்தாந்தம் சிவனுக்குக் கூறிய இலக்கணங்கள் முதல்வரியில் கூறப்பட்டுள்ளது. அந்த இலக்கணங்களை உடைய சிவன், சிவராத்திரியன்று பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும் இடையே யார் பெரியவர் என்ற போட்டியில் சண்டையேற்பட்டபோது

பேரொளியாகத் தோன்றிய வரலாறு சைவர்களுக்குத் தெரியும். அந்தப் பிரமமாக நின்ற சோதிதான் முருகனாக அவதாரம் எடுத்தது என்கிறார் கச்சியப்பர்.

அசுரர்களின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் சிவனிடம் முறையிட, சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியவன்தான் முருகன் என்று புராணங்கள் கூறுகின்றன. அத்துடன் அது சிவனின் அவதாரம் என்றும் கூறுகின்றன.

முருகனுக்கு ஆறு திருமுகங்கள். இந்த ஆறு திருமுகங்களைப் பற்றிப் பண்டைய நூல்கள் பலவாறு கூறுகின்றபோதும் அவ் ஆறு திருமுகங்களும் அடியவர்களுக்கு அருளவே சிவன் அத்திருவுருவை எடுத்தார். தமிழரின் வாழ்க்கையை எடுத்து நோக்கினால், அதில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு கடவுள் வணங்கப்பட்ட வரலாற்றைக் காணலாம். அவற்றை மாறுபாடு என்று கொள்ளாது அவதாரம் என்றும் திருவிளையாடல்கள் என்றுமே வரலாறு கூறுகிறது.

கந்தபுராணத்தை எடுத்து நோக்கினால் அதன் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கந்தனின் தோற்றம் பற்றியும், அத்தோற்றத்துக்கான காரணம் பற்றியும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது. கந்தபுராணத்தின் முதற்பாடலான “திகட சக்கரச் செம்முக மைந்துளான்” என்ற அடி சிவனின் சதாசிவ வடிவத்தைக் குறிப்பிடுகிறது. அத்துடன் கந்தபுராணம் மகா சதாசிவ வடிவத்தைப் பற்றியும் விரிவாகச் சொல்கிறது. சோமஸ்கந்த வடிவம் அடியவர்களின் அல்லல்களைத் தீர்ப்பது. புராணங்கள் இச் சோமஸ்கந்த வடிவத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. சிவன் சக்தி விநாயகன் முருகனென சிவனின் குடும்பம் அவ் வடிவத்தில் உள்ளமையால் அவ்வடிவத்தை வணங்குவோருக்கு சிவனினதும் உமையினதும் விநாயகனினதும் முருகனினதும் அருள் இலகுவாகக் கிட்டும். அப்படிப்பட்ட வடிவத்தின் சிறப்பைப் பற்றிக் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது.

சிவனின் இலிங்கோற்பவ வடிவத்தைப் பற்றியும் அதன் உருவ அழகைப் பற்றியும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது. பிரம்மாவும் விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவர் என்று தர்க்கப்பட்டு, அது முற்றி யுத்தமாக மாறியபோது சிவன் ஒளிப்பிழம்பாகத் தோன்றிய வடிவம்தான் இலிங்கோற்பவ வடிவம். அந்த வடிவம்தான் முருகன் என்று கந்தபுராணத்தின், “பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒருதிரு முருகன் வந்தான்” என்ற பாடல் வரிகள் கூறுகின்றன.

வேதங்களையும் உபநிடதங்களையும் சிவன் குருவாக இருந்து சனற்குமார முனிவருக்கு உபதேசித்ததாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் சிவஞானபோதம் என்ற நூல், சிவஞானபோதத்தைச் சிவன் நந்திதேவருக்கு உபதேசிக்க, நந்திதேவர் தனது மாணவனான சனத்குமார முனிவருக்கு உபதேசிக்க சனத்குமார முனிவர் தனது மாணவரான மெய்கண்ட தேவருக்கு உபதேசித்து, அதை உலக மக்கள் உய்யும்படி- நூலாக்கும்படி வேண்டினார் என்று கூறுகிறது. தட்சணாமூர்த்தி வடிவத்தைப் புராணங்கள் குருவடிவம் என்று கூறுகின்றன. சிவன் குருவாக எடுத்த வடிவம் தட்சணாமூர்த்தி வடிவம். அதுபோல, குரு சுவாமி என்ற வடிவத்தை முருகன் எடுத்துப் பிரணவ மந்திரத்தை, குருவடிவெடுத்த தட்சணாமூர்த்தியாகிய சிவனுக்கு உபதேசித்தார். குருவிற்குக் குருவான சிவகுரு முருகன் என்று கந்தபுராணம் கூறுகிறது.

(தொடரும்....

# இயற்கையிடம் கற்றுக்கொள்ளுங்கள்

***சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்***

சாலைகள் கூடும் இடத்தில் சில நிமிடங்கள் நில்லுங்கள். உங்களைக் கடந்து செல்பவர்களைக் கவனியுங்கள். எத்தனை முகங்கள் சந்தோசமாக இருக்கின்றன? நூறு பேர் கடந்து போனால், அதில் நான்கோ, ஐந்தோ முகங்களில்தான் சிரிப்பிருக்கிறது. அவர்களும் இளைஞர்களாகத்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் ஏதோ வாழ்க்கையைத் தொலைத்து விட்டவர்கள் போல் தெரிகிறார்கள். ஏன் இப்படி?



வெளியே எதற்குப் போக வேண்டும்? உங்களையே கண்ணாடியில் பாருங்களேன்...... உங்கள் முகத்தில் ஆனந்தமும் கொண்டாட்டமும் தெரிகிறதா? அல்லது சிரிப்பை வற்புறுத்தி அழைத்து வரவேண்டியிருக்கிறதா? உங்களுடைய ஐந்துவயதில் ஒரு பட்டாம்பூச்சியைத் துரத்திக் கொண்டு ஓடினீர்களே, ஞாபகம் இருக்கிறதா? இந்தப் பட்டாம் பூச்சியைத் தொட்டதும் அதன் வண்ணங்கள் உங்கள் கையில் பளபளவென்று ஒட்டிக்கொண்ட போது, அதைவிட உலகில் பெரிதாக எதுவுமே தெரியவில்லையே. அப்போது எப்படிப் பொங்கிப் பொங்கி ஆனந்தமாய் இருந்தீர்கள்? ஐந்து வயதில் உங்கள் உயரம் என்ன, இப்போது உங்கள் உயரம் என்ன? உங்கள் சந்தோசமும் குறைந்தபட்சம் அதே விகிதத்தில் வளர்ந்திருக்க வேண்டாமா?

கள்ளங் கபடமற்ற அந்தச் சிறுவயதில் சந்தோசத்தைத் தவிர வேறு எதுவுமே நீங்கள் அறியவில்லை. பிறகு என்ன ஆனது? நீங்கள் வளர்ந்திருந்தீர்கள். சந்தோசமாக இருக்கப் பல விஷயங்களைத் தேடித் தேடிச் சேகரித்தீர்கள். பெரியபடிப்பு, கொம்பியூட்டர், சொந்தவீடு, மோட்டார்சைக்கிள், கார், கிரடிட்கார்ட், ரீ.வி, டீ.வீ.டி, ஏ.சி, செல்போன் என அவரவர் முயற்சிகளுக்கு ஏற்ப எவ்வளவு வசதிகள் சேர்த்துவிட்டீர்கள்? சில நூற்றாண்டுகளுக்கு முன், உலகையே வெறுத்து விட்டதாக நினைத்த பேரரசர்களுக்குக் கூட இத்தனை வசதிகள் இருந்ததில்லை தெரியுமா? ஆனால், என்ன ஆனது? சந்தோசத்திற்காக வாழ்க்கையில் இவ்வளவையும் தேடிய நீங்கள், கடைசியில் உங்கள் சந்தோசத்தை மட்டும் தொலைத்து விட்டீர்கள். எங்கே போயிற்று உங்கள் சந்தோசமெல்லாம்?

ஒருமுறை மூச்சுமுட்டக் குடித்துவிட்டுச் சங்கரன் பிள்ளை பஸ்தரிப்பிடத்தில் நின்றிருந்தார். வந்த பஸ்ஸில் கூட்டம் பிதுங்கி வழிந்தது. எப்படியோ முண்டியடித்து அதில்

ஏறிவிட்டார். பத்து பதினைந்துபேர் காலை மிதித்து, நான்கைந்து பேரை முழங்கையால் நெட்டித் தள்ளி உள்ளே நகர்ந்தார். ஒரு மூதாட்டிக்குப் பக்கத்து இருக்கையில் இருந்தவர் எழுந்திருப்பதைப் பார்த்ததும், சங்கரன்பிள்ளை பலரையும் இடித்துத் தள்ளிப் பாய்ந்தார். குடிகாரனோடு மல்லுக்கு நிற்க வேண்டாமே என்று அவர்கள் முகச்சுழிப்புடன் ஒதுங்கி, வழிவிட்டார்கள். சங்கரன்பிள்ளை பெருமிதத்தோடு அந்த இருக்கையில் தொப்பென அமர்ந்தார். உட்கார்ந்த வேகத்தில் அந்த மூதாட்டியின் மீது சரிந்தார். அவள் மடியில் வைத்திருந்த பழக்கூடை உருண்டோடியது. கோபத்தோடு அவரைப்பார்த்த மூதாட்டி, "நீ நேரே நரகத்துக்குத்தான் போய்ச் சேரப்போகிறாய்" என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

சங்கரன்பிள்ளை பதறியடித்து எழுந்தார். "வண்டியை நிறுத்துங்கள். நான் போக வேண்டியது காந்தி நகருக்கு. தப்பான வண்டியில் ஏறிவிட்டேன்" என்று கத்தினார். உங்களில் பலர் இப்படித்தான் எந்த பஸ்ஸில் ஏறியிருக்கிறோம் என்பதே தெரியாமல் ஏறுவதும் இறங்குவதுமாக அல்லாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆசைப்பட்டது கிடைக்காதபோது, சோகத்தில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வதே முட்டாள்தனம். ஆசைப்பட்டது கிடைத்த பிறகும், ஏன் முழுமையாகச் சந்தோசத்தை அனுபவிக்கத் தெரியாமற் தவிக்கிறீர்கள்? இயற்கையிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

தென்னை மரத்தைக் கவனியுங்கள். உங்கள் தோட்டத்தில் நெடுநெடுவென வளர்ந்திருக்கிறது. சுவையான தேங்காய்களை வழங்கிக்கொண்டு இருக்கிறது. மற்ற மரங்களை வெட்டிப்போடும் நேரத்திலும், தென்னையை வெட்ட உங்களுக்கு மனசு வராது. அதற்குத் தண்ணீர் ஊற்றிக் கவனித்துக் கொள்வீர்கள். ஆனால், உங்களிடமிருந்து தண்ணீரை எதிர்பார்த்தா அது தேங்காய்களைச் சுமக்கிறது?

அதன் இயல்பு என்னவோ, நூறு சதவீதம் அந்த இயல்புப்படி நடக்கிறது. அதற்குக் கிடைக்கவேண்டிய தண்ணீர் தானாகக் கிடைத்தும் விடுகிறது. இயல்பு....அதை ஒட்டிய செயல்...... அதற்கான பலன் என்பதுதான் இயற்கை வகுத்துள்ள நியதி. ஆனால் நீங்கள்? உங்களுக்குச் சச்சின் போல் கிரிக்கெட் ஆடவேண்டும்; ஐஸ்வர்யாராயைப் போல் அழகாக வேண்டும்; பில்கேட்ஸ் போல் பணக்காரராக வேண்டும்; இந்த மாதிரி ஒரு பங்களா; அந்த மாதிரி ஒரு கார்; அவரைப்போல் ஒரு வாழ்க்கை; இவரைப்போல் செல்வாக்கு..... இப்படிப் பலதை முதலில் தீர்மானித்தீர்கள். அதை எதிர்பார்த்துச் செயலில் இறங்கினீர்கள். அது உங்களுக்குச் சரிவருமோ இல்லையோ, அதை உங்கள் இயல்பாக்கிக் கொள்ளப் பார்க்கிறீர்கள்.

இப்படி அடுத்தவரைப் பார்த்து, அதே போல் உங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயற்சி செய்யும் போது, வாழ்க்கை நரகமாகிப் போகும்.ஆம்..... உங்கள் இயல்பைப் புரிந்து கொள்ளாமல், எதிர்த்திசையில் துடுப்புப் போடுவதுதான் அத்தனை துன்பங்களுக்கும் காரணமே தவிர - உங்கள் அடிப்படை ஆசை குற்றமல்ல! உங்களுடைய இயல்பு என்ன? அதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்வது.

-நன்றி: வலம்புரி-.

# "சிவனார் மனங்குளிர..."



திரு செ. பாலச்சந்திரன் அவர்கள்

சிவன் என்றால் "மங்களகரமானவன்" எனப் பொருள்படும். சிவம் என்றால் "செம்மை உடையது" எனவும் பொருள்படும். ஆக செம்மையான வாழ்வைப்பெற, மங்களகர மான வாழ்க்கை வாழச் சிவனை வழிபட வேண்டும். சிவபூஜை எல்லாப் பூஜைகளிலும் தனித்தன்மையானது. இதனையே திருஞானம் வாய்க்கப்பெற்ற சம்பந்தப் பெருமான்

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில்..." எனக் குறிப்பிடுகிறார்.

சிவபூசை பாவமாகிய பஞ்சுமூட் டையை எரித்துவிட வல்லது. "நாம் இப் பிறவியை எடுத்ததன் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம்" என்கிறார் நாவலர் பெருமான். எனவே பரமகருணாநிதியாகிய சிவச்செம்பொருளை வழிபட்டு உய்வு பெறலாம்.

உலகில் உள்ள எல்லா உயிரும் விரும்புவது ஆனந்தத்தை. எல்லா உயிரும் வெறுப்பது துன்பத்தை. இன்ப, துன்பம் எப்படி ஏற்படுகிறது. "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்கிறது புறநானூறு. ஆனந்தம் ஏற்படுவதும், அவஸ்தை ஏற்படுவதும் அவரவர் செய்த வினையின் வடிவே. இதனையே "செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ? இருநிதியம்" என்கிறார் தமிழ் மூதாட்டி. இதற்கும் மேலே ஒருபடி சென்று பட்டினத்தடிகள் "என் செயலாவது யாதொன்று மில்லையே..." என விளிக்கிறார்.

நாமே துக்கத்தை உற்பத்தி செய்து அதில் உழன்று வாழாது இருக்கச் சிறந்த வழி சிவவழிபாடு ஆகும். சிவனைப் போற்றி னால் போதும் பாவங்கள் பஞ்சாய்ப் பறந்து விடும். இதனை மணிவாசகப் பெருமான் சிவ புராணத்தில் ".....முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்..." எனக் கூறிச் செல்வதன் மூலம் உணரலாம். முக்காலமும் உணர்ந்த திருமூல முனிவர்

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே"

எனத் தமது திருமந்திரத் திருப்பாடல்மூலம் பேரின்பத்துக்கு வழிகாட்டுகின்றார். பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவர்,

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனக் குறிப்பிடுகிறார். மெய்ப்பொருள்

எது? என்ற வினாவுக்கு விடையைச் சரியாகக் கூறியவர் ஞானத்தின் திருவுருவாகிய திருஞானசம்பந்தரே! அதேபோல ஏனைய நாயன்மார்களும் குறிப்பிட்டுள்ளனராயினும் நேரடியாகக் குறிப்பிட்டவர் முதற்குரவரே. இதனைத் தமது மூன்றாம் திருமுறையில்,

“காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே”

எனச் செப்பமாக விளக்கியுள்ளார். அதாவது நாதனின் நாமமே மெய்ப்பொருள். அதனைக் காதலுடன் மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து கைதான் தலைமேல் வைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பியுள்ளம் பொய்தான் தவிர்த்து... “நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க...” எனப் போற்றினால் பேரின்பமடையலாம் என மணிவாசகப் பெருமான் சிவபுராணம்மூலம் புகட்டுவதையும் நோக்குக.

திருநாவுக்கரசு சுவாமிகளும் மெய்ப்பொருள் சிவனின் ஐந்தெழுத்தே என அடித்துக் கூறுகிறார் நமச்சிவாயப் பதிகத்தில்.

“.......நாவினுக்கருங்கலமாயிருப்பதும்? பாவத்தை நண்ணிநின்றறுப்பதும், நடுக்கத்தைக் கெடுப்பதும், நலமிகக் கொடுப்பதும், நல்லக விளக்கதும், நன்னெறியாவதும், நற்றுணையாயிருப்பதும் நமச்சிவாயவே” எனக் கூறிவைத்துள்ளார் அற்புதமாக.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், “.......நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே” என மெய்ப்பொருளின் திறத்தை வியக்கிறார். இதனைச் சைவப் பெருமக்கள் உணர வேண்டும். ஓதவேண்டும். பழக்கம், வழக்கமாகி வாழ்வில் உயர வழிகாட்டும் சமயகுரவர் வாழ்க்கை வாயிலாக எம்மை எல்லாம் நன்னெறிக்குய்ப்பதாகிய செயலில் நாம் ஈடுபடல் அவசியமே.

ஐந்தாம் குரவர் எனப்போற்றப்படும் நாவலர் பெருமான், “மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் இறைவனை மெய்யன்போடு திரிகரண சுத்தியுடன் வழிபடுவதே விரதம்” என விளக்கியுள்ளார். இறைவனிடம் நாம் ஜெபம் செய்ய மனம் அடங்கவேண்டும். மனம் அடங்க என்ன செய்யவேண்டும்? விரதம் அனுட்டித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் மனம் பொறிவழி போகாமல் தடுத்தல் வேண்டும்.

“உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங்காப்பான்...” என வள்ளுவப் பெருமான் கூறுவார். மனம் அடங்கிய பின் நாமம் என்ற மெய்ப்பொருளை அப்பியாசிக்கலாம்.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியது
திண்ணியராகப் பெறின்” என்பார் பொய்யாமொழியர்.

யானை, சிலந்தி போன்ற உயிரினங்களும், இராவணன் போன்ற அசுரர்களும், அயன், அரி, இந்திரன் முதலான தேவர்களும், அறுபத்துமூன்று அடியார்களும் சிவனார் மனங்குளிர வழிபாடியற்றி உய்ந்தனர் என்பதைப் புராணங்களும், இதிகாசங்களும், திருமுறைகளும் விளக்கி நிற்கின்றன. சிவவழிபாடு என்பது இயற்கையோடு இணைந்தது. சூரியன், சந்திரன், ஆகாயம், பூமி, காற்று, நீர், நெருப்பு, இயமானன் என அட்டாங்கமாக நோக்கப்பெறுவது. இவற்றை நாயன்மார்களின் திருமுறைப்பாடல்களின்மூலம் ஓதி உணரலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமணர் நீற்றறையில் இட்டபொழுது ஏழு நாட்களாக எம்பெருமான் திருவடியைத் தொழுது அதனை இயற்கையின் வடிவமாகக் காண்கிறார்.

“மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே” எனவும்,

இதேபோலத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் “.......... மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த வதனால்....” எனவும் இயற்கையில் இறைவனைக் காண்கிறார்கள். மணிவாசகப் பெருமான் “பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம்பரனே...” என உருகித் தொழுகின்றார்.

ஆனால், இன்று, இயற்கையுடன் இணையாத வாழ்வும், இயற்கைக்கு ஊறுவிளைவித்து செயற்கைக்கு முன்னிடம் கொடுத்து வருவதனால், மானிட விழுமியங்கள் அருகிவருவதைக் கண்கூடாகக் காணலாம்.

பணிவு, பெரியோரை மதித்தல், உண்மைத் தன்மை என்பன எல்லாம் நலிவுற்றுப் பல சமூகச் சிக்கல்கள் தோற்றம் பெற்று மானிடத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது. இயற்கையில் இயற்கையாகக் காணவேண்டிய விலங்கினம், பறவையினத்தை காட்டுனாகக் காட்டிக் குழந்தைகளை ஏமாற்றுகிறோம். வாழும் நெறியாகிய சமயத்துறை இன்று போலித்தன்மையுடையதாகி எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி நிற்கிறது. இதற்கு விரதநெறியில் நின்று எதிர்காலத்தை வளமாக்க, சிவனார் மனங்குளிர அவர்பாதம் பணிவோம்.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன் கற்றோர் கவிமாலை- 21

**பல்லவி**

**சித்தம திரங்காயோ? செல்வச்சந்நிதிக் கந்தா!
தத்துவக் கடல்நீந்தித் தகைமைசால் முத்திபெற**


**அநுபல்லவி**

**வித்தகர்க் குபதேசம் விளம்பிய சாமிநாதா!
முத்தனே கருணைவாரு மூவிருமுகத்து வேலா!**

**சரணம்**

**நத்திடு கதிர்காமம் நாடிவிழாக் கண்டே
சித்திதரும் தீர்த்தத் திருவிழா முடிந்தபின்னே
வித்தக வேல்வடிவை விருப்புடன் அனுப்பிவைக்க
பித்தொடு வந்திங்கு பேரருள் புரிவேலா!
நித்தமு மாறிறங்கி நேயமொடு மூழ்கி
பத்தியுட னழகார் பதமதனை வேண்ட
புத்திர பௌத்திரர்க்கும் புண்ணிய வாழ்வருளி
முத்தியும் தந்தருளும் மூலமே ஷண்முகனே! (சித்தம)**

-இராசையா குகதாசன்-




## நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே- அல்லாது
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்"

நல்ல குணமுடைய சான்றோர்க்கு உதவி செய்தால் அது கல்லிலே செதுக்கிய எழுத்துக்களைப்போன்று அழிவதில்லை.

அப்படி இல்லாமல் இரக்கமற்ற அரக்கர்களுக்கு உதவி செய்தால், அது நீர்மேல் எழுத்தைப்போன்று அப்போதே காணாமற்போய் இருக்குமிடமும் அழிந்திடும்.

கார்வண்ணன்புரம் என்ற ஊரில் சிவகுருநாதன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் கடுமையாக உழைத்தார். பிறகு இல்லறத்திலிருந்து சற்று விலகி வாழ்ந்தார்.

எனவே அவரை அனைவரும் குருநாதர் என்றே அழைத்தனர். குருநாதர் இளமைமுதலே இறைநெறியில் திளைத்தவர். எப்போதும் இறைநாமத்தைத் தன் மூச்சோடு சேர்த்து உள்ளிழுக்கும் மூச்சினில் "ஓம் சிவாய" என்றும் "நம" என்று கூறி மெல்ல மூச்சை வெளியேற்றிடுவார்.

இவர் ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் கிராமத்து மக்களுக்கு நல்ல பல பக்திக் கதைகளைக் கூறுவார். பிறகு நீதிக்கதைகளைக் கூறுவார். கிராம மக்களை பக்திபூர்வமான செயலில் ஈடுபடுத்துவார். தினமும் ஒரு வீட்டிலிருந்து கடலை, பச்சைப்பயறு, வேர்க்கடலை போன்றவையும் புளியோதரை, சுண்டல் பொங்கலும் கொண்டுவந்து படைத்துப் பரிமாறுவார்கள்.

குருநாதர் காவி நல் வஸ்திரம் அணிந்தார். பிறகு தலையில் ஒரு துண்டைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு தியானம், தவம் செய்வார். எங்கும் போய் ஏதும் கேட்கமாட்டார். அவரைத்தேடி கிராம மக்கள் அன்புடன் கூழ், மோர்மிளகாய், முருங்கைக்கீரை தருவார்கள். மதியம் அல்லது இரவு ஏதாகிலும் ஒருவேளை சாப்பிடமாட்டார்.

அதற்கு அவரிடம் கேட்டபோது "நீங்கள் எனக்குக் கொடுக்கிறீர்கள். நான் சாப்பிடுகிறேன். ஆனால் ஒரு வேளை உணவுகூட இல்லாமல் எத்தனைபேர் இருக்கின்றனர். அவர்களோடு சேர நான் ஆசைப்படுகிறேன்" என்பார்.

பகல் வேளைகளில் ஊருக்குள் ஒரு பார்வை.... பிறகு மாலையில் மலையடி வாரங்களுக்குச் செல்லுவார். சில வேளைகளில் வயல் நிறைந்த சோலைப்பக்கம் செல்வார்.

அங்கு வயலில் வேலை செய்வாரோடு வேலையைச் செய்து அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவார். சிலவேளைகள் தென்னை- பனைமரத் தோப்புகளில் அமர்ந்து தியானம் செய்வார். அப்போது அவருக்கு தோட்டக்காரர் இளநீர், பதநீர், நுங்கு இப்படிப் பலவும் அருகில் வைத்துவிட்டு அவரவர் வேலைகளில் ஈடுபட்டு வருவார்கள். ஊர்மக்களுடைய அன்புக்கு அடிமையானார். அவர்களுடைய நலனுக்காக வருந்தித் தவம் செய்தார். அவர் செய்த காலை வழிபாடு நன்றாக இருந்தது. பிறகு, "அவர் மாலையில் சொன்ன கருத்துக்கள் கீதையைப் போன்றிருந்தது" என்று சிலர் கூறினர்.

இதைக்கேட்ட சிவகுருநாதர் பல உன்னதமான மந்திரங்களை அந்த ஊர் மக்கள் பயன்படுத்தும் வகையில் அவர் வாழ்ந்த பகுதி மக்களின் மொழியிலேயே சொற்பெருக்கம் செய்தார்.

பல அரிய ஆன்மீக நெறி கொண்ட நல்ல நூல்களை சிவகுருநாதர் இயற்றினார். அதைப் பல்வேறு நாட்டவரும் தமிழிலிருந்து நூற்றுக்கணக்கான மாநில மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழி பெயர்த்தனர்.

அவர் மிகவும் சிறந்த மனிதர். புனிதர். அவர் பூசை அறைக்குச் செல்லும் போதும் வெளியே வரும்போதும் பல்லாயிரவர் தரிசித்தனர். ஒரு சூரிய ஒளியை அனைத்துலக மக்களும் பெறுவதைப்போல குருநாதருடைய தரிசனத்தைப் பெற்று மகிழ்ந்தனர்.

அவரவர் குறைகளைக் கேட்டு அவை அகன்றிட அப்போதே ஒரு கவிதையை இயற்றிவிடுவார். பொதுப் பிரார்த்தனை செய்வார். பெரும்பாலும் மாலைவேளைகளில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தி அதில் அனைவரையும் அமைதியாகப் பயில வைத்த பெருமைக்குரியவர் நம் குருநாதர் என்று அனைவரும் போற்றினர். நல்லவரைப் பற்றிப் பேசும்போது தீயவரைப் பற்றிக்கூற வேண்டிய அவசியமில்லை. ஒரு தீயவனுக்கு உதவினால் அவனால் ஒருநாள் துன்பம்தான் விளையும். நீ கொடுப்பதை நிறுத்தினாலே உடனே அவன் கொலை செய்யவும் தயங்கமாட்டான்.

எனவே, நல்ல மகான் சிவகுருநாதருக்கு அனைவரும் பணிசெய்ய விரும்பினர். அவர் மறுத்தார். அவர் குடியிருந்த குடிலை ஆச்சிரமம் என்று கூறினர். மக்கள் அந்தக் குடிசையைச் சுற்றி மலர் செடிகளை உருவாக்கினர். கிணறு வெட்டித் தந்தனர்.

அவருக்கு உதவியாக வழிபாட்டுக்கு மலர் பறித்து மாலை கட்டித் தந்தனர். அவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். அவரை மனதில் நினைத்த குடும்பங்களில் திருமணம் தடையின்றி நடந்தது.

குழந்தைப்பேறு வேண்டியபடியே நிகழ்ந்தது. மாணவர்களுடைய கல்வி மிகவும் சிறந்தோங்கியது. இறைவனிடத்தில் அவர் வேண்டிச் செய்யும் பிரார்த்தனையின் பலன்கள் அனைவருக்கும் கிடைத்தன.

நல்ல மழை பொழிந்து மக்கள் யாவரும் மகிழ்வோடு வாழ்ந்தனர். ஆகவே நண்பர்களே, நீங்களும் நல்ல குணமுடைய நல்லவர்களுக்கு உதவி செய்தால் அது பசுமரத்தாணி போலிருக்கும். கல்லில் செதுக்கிய எழுத்தாக மட்டுமல்லாமல் சிலையாகவும் இருந்திடுவீர்கள். உங்கள் உதவி என்றும் நிலைபெற்றதாக விளங்கும் என்பது வெள்ளிடைமலையே.



(தொடர்ச்சி...

# விநாயக வழிபாட்டின் தத்துவ விளக்கங்கள்

***செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்கள்***

விநாயகரின் பெருமைபற்றி புஷ்பகந்தர் அருளிய "கணேஷ மஹிம்நஷ்" எனும் தோத்திரமானது "யானை முகனைக் கண்டவன் எல்லாத் தேவர்களின் முகங்களையும் கண்டவன் ஆகிறான்" யானை முகத்தவரான கணபதி, மகிழ்ந்தால் மூன்று உலகிலும் உள்ள எல்லோரும் மகிழ்வர் எனக்கூறுகிறது. அதுமட்டுமல்லாது இவர் நாராயணன், சதாசிவன் போன்றோரை உள்ளடக்கியவர் என்றும், சூரியன், காற்று, விஸ்ணு, வர்ணன், யமன், அக்னி, இந்திரன், தேவதைகள் ஆகிய யாவருக்கும் ஒலி கொடுக்கும் "வக்ரதுண்டன்" என்றும் வக்ரதுண்ட தோத்திரம் கூறுகின்றது.

அடுத்து விநாயகர் காலை மடித்து வைத்த கோலம்- அகரம், தலையும் துதிக்கையும்- உகரம், வயிறு- மகரம் எனப் பொருள்படும். விந்து, நாதம் ஆகிய இரண்டும் விநாயகரின் உருவத்திலே விளைகின்றன. சுண்டெலி ஊர்தியாகின்றது. தந்தமானது பதி அறிவை வளர்க்கின்றது. கொழுக்கட்டை, ஜெபமாலை என்பன ஏழு உலகங்களையும், நான்கு திருக்கரங்கள் அறம், பொருள், இன்பம், வீட்டையும், மூன்று கண்களில் நடுக்கண் ஞானத்தையும் குறிக்கின்றது. அதுமட்டுமன்றி

| | |
|---|---|
| இடக்கண் | -அகரம் |
| வலக்கண் | -உகரம் |
| நெற்றிக்கண் | -மகரம் |

என்பதனையும் குறிக்கின்றது. இருக்கு வேதத்தில் வரும் 'பிரக்மனஸ்பதி சூக்தங்கள்' கணபதியை விபரித்துக்கூறும்போது 'பிரம்மன், திருமால், உருத்திரன், ஈஸ்வரன், சதாசிவன் எனும் ஐந்து வேதவடிவம் கொண்டு "பஞ்சகிருத்தியம்" என்னும் ஐந்தொழிலை புரிபவன் விநாயகனே என்கிறது. மேலும் விநாயகரது ஐந்து கரங்களும் பஞ்சாட்சர மந்திரத்துடன் ஒப்பிட்டு நோக்கின்

| | |
|---|---|
| பாசம் ஏந்திய கரம் | -வகரத்தையும் |
| அங்குசம் தாங்கிய கரம் | -சிகரத்தையும் |
| தந்தம் கொண்டுள்ள கரம் | -யகரத்தையும் |
| மோதகம் ஏந்திய கரம் | -நகரத்தையும் |
| துதிக்கை | -மகரத்தையும் |

உணர்த்தும் என்பர்.

பஞ்சபூதங்களையும் தன்னுள் அடக்கியவர் என்ற நிலையில் மடிந்த நிலையிலான ஒரு பாதம்- பூமியையும், சரிந்துள்ள தொந்தி- நீரையும், மார்பு- நெருப்பையும், இரண்டு புருவங்களும் இணைந்த அரைவட்டம்- காற்றையும், நடுவில் வளைந்துள்ள கோடு- ஆகாயத்தையும் குறிக்கின்றது. மேலும் அவனுள் அனைத்தும் அடக்கம் எனும் தன்மையில் விநாயகரது-

| | | | |
|---|---|---|---|
| சிரசில் | -பிரம்மா | முதுகு | -மேருமலை |
| உச்சியில்- | -பரமேஸ்வரன் | கை | -நதிகள், ஆறுகள். |
| கழுத்தில்- | -பிரமாண்டம் | கைவிரல் | -சர்ப்பங்கள் (ஆதிசேடன் பாம்பு) |
| மேல் உதட்டில் | -புண்ணியம் | | |
| கீழ் உதட்டில் | -பாவம் | கால்கள் | -துருவம் முதலான நட்சத்திரம் என்பதுடன் |
| பற்களில் | -சூரிய, சந்திர, நட்சத்திரம் | | |
| நாக்கில் | -நான்கு வேதங்கள், புராணம் | இடையில் | -மண்ணுலகு |
| மூக்கில் | -இந்திரன் | குறியில் | -உயிரினங்கள் |
| மார்பு | -இலக்குமி | தொண்டையில் | -மலைகள் |
| தொப்பூழ் | -ஆகாயம் | முழந்தாள் | -தேவர்கள் |
| உள்ளம் | -வேதம் | கணுக்கால் | -பாதாளம் |
| வயிறு | -கடல் | உள்ளங்கால் | -முனிவர் |
| நாடி, நரம்பு | -கந்தர்வர், மனிதர், அரக்கர் | கட்டைவிரல் | -காலன் (யமன்) |

கணபதிக்குரிய பூசையில் இருபத்தொரு அறுகம்புல், இருபத்தொரு பழங்கள், இருபத்தொரு மோதகங்கள், இருபத்தொரு மலர்கள் என்பன வைத்து வழிபடப்படுகிறது. இது "நம்முள் உள்ள 5 தன்மேந்திரியம், 5- ஞானேந்திரியம், 5- அவை செயற்படும் காரியம், 5- அவற்றின் செயல்கள் என்பதுடன் மனம் என்ற ஒன்றையும் இணைத்து உருகி வழிபடுதல் வேண்டும்" எனும் தத்துவத்தை விளக்குகிறது.

விநாயகர் தத்துவம்பற்றி ஜகத்குரு காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். "பிள்ளையார் யானைக்கு யானை, குழந்தைக்கு குழந்தை ஆனால், அவரை எத்தனைமுறை பார்த்தாலும் போதும் என்ற திருப்தி உண்டாவதில்லை. கள்ளம் கபடம் அற்ற குழந்தை முகம் அவருக்கு, குழந்தைபோல் நல்ல உள்ளம், யானைபோல் தேகம், புத்திக்கூர்மை, குறையாத அழகு நிறைந்தவர். இவரது உருவத்தில் கழுத்திற்கு கீழே குழந்தை. அதாவது மனிதன் மேலே யானை. அதாவது- மிருகம். ஆனால் உண்மையில் தேவவர்க்கமே மகாதத்துவருபமாக உள்ள இவரிடம் பல நுணுக்கமான மாறுபாடுகள் காணப்படுகின்றன".

இவ்வாறு விநாயகரது நாமம், வழிபாட்டுமுறை உடலின் பாகங்கள் என அனைத்திற்கும் பல்வேறு தத்துவ விளக்கங்கள் கூறப்பட்டு அவரது பெருமை முதன்மைப்படுத்தப்படுகின்றது.

(முற்றும்)

# துடக்கு என்றால் என்ன?

*திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்*

'உனக்குத் துடக்கு இருக்கிறது. இப்போது கோயிலுக்கு உள்ளே வரக்கூடாது. அது கழிந்த பின்பு வா' என்று சொல்லி ஆலயக் குருக்கள் ஒருவரைக் கோயிலுக்குள் வர அனுமதிக்காமல் திருப்பி அனுப்பி விடுகின்றார் என்றால் அதன் முக்கியத்துவம் என்ன? அது ஏன் என்று ஏதாவது உங்களுக்குப் புரிகிறதா? துடக்கு என்றால் என்ன? அது எப்படி ஏற்படுகிறது? அதன் தாற்பரியம் என்ன?

புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்தவர்கள் தமது வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்குப் பலவித நடமுறைகளும் சம்பிரதாயங்களும் நம்மூதாதையரினால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை நாம் அலட்சியம் செய்யக்கூடாது. ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாக வைத்தே அவை முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் புது மணத் தம்பதிகளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அங்கே துடக்கு இருக்கும். ஒரு இளம் பெண் பருவமெய்திப் பூப்படைந்தால் அங்கே துடக்கு இருக்கும். ஒரு வீட்டில் வயோதிபரோ அல்லது யாரோ ஒருவர் இறந்து விட்டால் அங்கே துடக்கு இருக்கும். இந்தத் துடக்கு எப்படி ஏற்படுகிறது? எப்போது கழிகிறது? இந்த வினாக்களுக்கு விடை என்ன?

ஒருவர் பிறந்தாலோ அல்லது இறந்தாலோ துடக்கு வருகிறது என்றால் அது எப்படி வருகிறது? அதன் நிறம் என்ன? உதாரணமாக ஆலயவழிபாட்டுக்குச் செல்லும் போது குளித்துத் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துப் புனிதமாகச் செல்லவேண்டும் என்று கூறப்படுகிறது. இதிலேயுள்ள அந்தப் புனிதத்துக்கு அர்த்தம் என்ன? அதன் நிறம் என்ன? என்று கேட்பது அறிவீனம். அந்தப் புனிதம் நமது உணர்வின் பிரகாரமே வெளிப்படுகிறது. அது சொல்லில் எடுத்துக் கூற இயலாத ஓர் உணர்வு. அதை எங்களால் உணர்ந்துகொள்ள முடியுமே தவிர உணர்த்த முடியாது. ஒருவரின் உள்ளத்தில் உற்சாகம் பிறந்துவிட்டால் அவருடைய முகத்தில் ஒரு தேஜஸ் தெரியும். முக மலர்ச்சி இருக்கும். அதுபோலத்தான் இதுவும்.

துடக்கு இருந்தால் தன்னை அறியாமலே ஒரு குற்ற உணர்வு உள்ளே குறுகுறுத்துக் கொண்டேயிருக்கும். அந்த உள்ளுணர்வு தான் துடக்கு. ஒருசுத்த சைவன் பதினாறு நாட்கள் துடக்குக் காத்தல் வேண்டும். துடக்குக்கு ஆசூசம், ஆசௌசம் என்றெல்லாம் பெயர்கள் வழக்கில் இருக்கின்றன. குழந்தை பிறந்த துடக்கு, ஒரு ஆள் இறந்த துடக்கு, கன்னி ஆகிய துடக்கு எதுவாயிருந்தாலும் பதினாறு நாள் கழிந்த பிற்பாடு ஓர் அந்தணரைக் கொண்டு புண்ணியாகாவாசனம் செய்தால் தான் ஆசௌசம் நீங்கும்.

மச்சம், மாமிசம், முட்டை புசிப்பவர்களாயின் முப்பத்தொரு நாள்களுக்குத் துடக்குக் காக்க வேண்டும். வைத்தியசாலை மற்றும் மயானம் மயிர் வெட்டுமிடம், செத்தவீடு போய் வந்தால் குளித்தபின்பே வீட்டிற்குள் நுழைவார்கள். அந்த இடங்களில் துடக்கு இருப்பதாக ஓர் ஐதீகம். நமது முன்னோர் ஏதோ

ஒரு முக்கிய காரணத்தை முன்வைத்துத் தான் சில வழக்கங்களையும் சம்பிரதாயங் களையும் பாரம்பரியமாக நடைமுறை வாழ்க் கையில் கொண்டிருக்கின்றார்கள். அதை நாம் மூட நம்பிக்கை என்றோ, தேவையற்ற ஒழுங்குமுறை என்றோ ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அதன் பின்னால் பெரியதொரு விடயம் மறைந்திருக்கும்.

எமது அன்றாட வாழ்வில் சமயம் சம்பந்தமான பல்வேறு நன்மைகளை அடிப் படையாகக் கொண்ட உண்மைகள் பொதிந் திருப்பது எமக்குத் தெரியாமலிருக்கலாம். ஆகவே, துடக்கு என்பதை நாங்கள் கட்டாய மாகக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதை அலட்சியம் செய்து முக்கியத்துவம் கொடுக்காது விட்டுவிட்டால் பெரிய விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை அறிந்து கொள்வது மிகமிக அவசியம். மேலும், குழந்தைகள் உள்ள வீட்டில் ஏதேனும் அலுவலாக வெளியில் சென்று வந்தால் கைகால் முகம் கழுவிய பின்னரே வீட்டுக்குள் செல்லுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் குழந்தைக்கு நோய் துன்பம் ஏற்படலாம்.

பெண்பிள்ளைகள் விவாகஞ்செய்து வேறு புதுக்குடித்தனம் ஆரம்பித்து விட்டால் ஆசௌசம் அணுகாது. பிறவிச் சைவர்களும் மச்சமாமிசம் உண்ணாதவர்களும் சிவதீட்சை அதாவது சைவசமயத்தில் பிரவேசிக்கவும் சமய அனுட்டானங்களைக் கைக்கொள்ளவும் சமயதீட்சை பெற்றவர்களும் வேறு இடங்களி லும் கடைகளிலும் உணவு உண்ணாதவர் களும் குலமரபு காத்து வாழ்பவர்களும் வேண்டுமாயின் பதினாறாம் நாள் துடக்குக் கழிக்கலாம். இல்லையேல் முப்பத்தொரு நாள் கழித்தே ஆசூசங் கழிக்கலாம்.

துடக்கு உள்ளவர்கள் சுப காரியங் கள் செய்ய முடியாது. அவர்கள் திருமண வைபவங்களில் கலந்து கொள்ள அனுமதி கிடையாது. இருப்பினும் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டி நேரிட்டால் புதிய மணமக்களை மனதாலும் வாயாலும் வாழ்த் தலாமே தவிர அறுகரிசியிட்டு மலர்மாலை சூட்டி வாழ்த்த முடியாது. வீடுகளில் நிகழும் சுபகாரியங்களில் தேங்காய் உடைக்கவும் துடக்குள்ளவருக்கு அனுமதி மறுக்கப்படு கின்றது. இதை உதாசீனஞ் செய்யக் கூடாது. “அது பரவாயில்லை; செய்யலாம்” என்று நாலு பேர் தூண்டினாலும் செய்தல் தகாது.

ஒரு வீட்டுத் தலைவன் காலமாகிவிட் டால் ஓராண்டு காலத்துக்குத் துடக்குக் காக்க வேண்டும். முப்பத்தொருநாள் கழித் துத் துடக்குக் கழிந்து போனாலும் சுபகாரி யங்கள் செய்யக்கூடாது. வீடு, கோயில் முதலியனவற்றில் இடம்பெறுகின்ற மங்கள வைபவங்களில் எக்காரணங் கொண்டும் கலந்து கொள்ளுதல் கூடாது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் வேறு ஆள் இல்லாத பட்சத்தில் துடக்குள்ள ஒருவர் கலந்து கொள்ள வேண்டி நேரிட்டு விட்டால் தொட்டு வாழ்த்தாமல் வாயினால் மட்டும் வாழ்த்தலாம். ஆகவே, பொதுவாக “துடக்கு” என்பது எல்லோருக்கும் பொது வானதே. சைவமக்களாகிய நாம் பாரம்பரிய சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் கோட்பாடுகள் கலந்த முறைகளையும் கட்டா யம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். இல்லையேல் பாவமூட்டைகளைச் சுமக்க நேரிடும்

(தொடர்ச்சி...

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| திரு சத்திதரன் | | கொழும்பு | 2000. 00 |
| திரு கார்த்திகன் | | கொழும்பு | 2000. 00 |
| வரலக்ஷிமி செல்வராசா | யாமாவளவு | தெல்லிப்பழை | 1500. 00 |
| நா. இரத்தினம் இளை. ஆசிரியர் | | பருத்தித்துறை | 2000. 00 |
| ஜெ. இர்ாசகோபால் | கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அ. தயாளன் | நந்தாவில் ஒழுங்கை | தாவடி | 10000. 00 |
| திருமதி ஞானமலர் ஸ்ரீபாலன் | | கனடா | 2500. 00 |
| சற்குணநாயகி நடராசா | | அவுஸ்திரேலியா | 2500. 00 |
| S. கிருபாகரன் குடும்பம் | | சுழிபுரம் | 5000. 00 |
| சுபாஜினி மகாநுஜம் | | நுணாவில் | 5000. 00 |
| செ. செல்வரெத்தினம் | | தெகிவளை | 1000. 00 |
| திரு சக்திவேல் குடும்பம் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| தவராசா தேன்மொழி | (கனடா) | ஆவரங்கால் | 5000. 00 |
| திரு திருமதி துளசீதரன் | பாறாளைவீதி | சுழிபுரம் (அவுஸ்திரேலியா) | 10000. 00 |
| P.T. பாலச்சந்திரன் | அவுஸ்திரேலியா | (வல்வெட்டித்துறை) | 10000. 00 |
| ஹாஸ்யன் - யாதவன் | | | 3500. 00 |
| பரஞ்சோதிநாதன் வாகீசன் | | துன்னாலை | 5000. 00 |
| திருஞானசோதி | | நாவற்குழி | 800. 00 |
| திரு மோகனதாஸ் | | அல்வாய் | 2000. 00 |
| ஜெயானந்த ஸ்ரோர்ஸ் | | கொழும்பு | 3000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் இளை. ஆசிரியர் | | கரணவாய் தெற்கு | 5000. 00 |
| சுப்பையா பரமநாதன் | | கனடா | 5500. 00 |
| J. ரமணன் | | லண்டன் | 5000. 00 |
| கனகம்மா குடும்பம் | | லண்டன் | 200பவுண்ஸ் |
| சத்தியப்பிரபா | | நவிண்டில் | 3000. 00 |
| வே. வைரமுத்து குடும்பம் | | | 1000. 00 |
| க. கிருஸ்ணபிள்ளை | | நவிண்டில் | 10000. 00 |
| வீ. பாலா | | லண்டன் | 2000. 00 |
| ரஞ்சித் குமாரதாசன் | | கோப்பாய் மத்தி | 1000. 00 |
| திருமதி சற்குணநாதன் | | கோப்பாய் தெற்கு | 1000. 00 |
| சிவகுமார் கஜகர்னிகன் | | கொக்குவில் | 6000. 00 |

அவசியமற்றதை அகற்றுவதே அழகு.

| | | | |
|---|---|---|---|
| சந்திரசேகர் நினைவு | | கோண்டாவில் 3மூடை அரிசி | 10000. 00 |
| Dr நா. கந்தசாமி | | இடைக்காடு | 3000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | | கோப்பாய் | 5000. 00 |
| க. கனகராசா | தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| அருணாசலம் அம்மாப்பிள்ளை | | சிறுப்பிட்டி | 3500. 00 |
| திரு துளசிதாசன் | | துன்னாலை | 8000. 00 |
| மோகன் விமலா | கோவிற்கடவை | கரவெட்டி | 2000. 00 |
| சுந்தரம்பிள்ளை குடும்பம் | | உரும்பராய் | 1000. 00 |
| K.V. துரைசாமி | | மயிலிட்டி | 3000. 00 |
| S. சிவாஜினி (லக்ஷ்மி நினைவாக) அந்தணந்திடல் | | உடுப்பிட்டி | 1500. 00 |
| இ. கருணாகரன் | | தம்பசிட்டி | 2000. 00 |
| S. சின்னத்துரை | மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| சிவபாலராஜா விமலாதேவி குடும்பம் | | நல்லூர் | 1000. 00 |
| க. அருள்நம்பி | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| ம. சியாமளன் | | லண்டன் | 10000. 00 |
| சிவசீலன் துவாரகா | | கொக்குவில் | 1000. 00 |
| த. நிஷாந்தன் | | உரும்பராய் | 3000. 00 |
| Dr சி. இராஜலிங்கம் | | அச்சுவேலி | 1000. 00 |
| இ. உதயசூரியன் | | கோப்பாய் | 5000. 00 |
| சி. மகாலிங்கம் | | கொற்றாவத்தை | 1000. 00 |
| ப. உதயகுமார் | | லிங்கம் செரமிக்ஸ் | 1000. 00 |
| தர்மலிங்கம் நிர்மலா | | லண்டன் | 7000. 00 |
| ஜெயகணேசன் மாலினி | | மானிப்பாய் | 5000. 00 |
| நா. ஜெயகுமரன் | | மானிப்பாய் | 2000. 00 |
| நடராஜா ராஜ்மோகன் | நெல்லியடி | கரவெட்டி | 5000. 00 |
| கந்தசாமி குகனேந்திரன் | | அச்சுவேலி | 2000. 00 |
| புனிதவதி சிவசுப்பிரமணியம் | | கனடா | 10000. 00 |
| தி. பாலசுப்பிரமணியம் | | இமையாணன் | 1000. 00 |
| P. மாணிக்கவாசகர் | (பொன்வயல்) | நெதர்லாந் | 7000. 00 |
| இராஜசேகர் திருசிகன் | | ஆவரங்கால் | 1மூடை அரிசி |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி | தாதி உத்தியோகத்தர் | | 2000. 00 |
| திருமதி J. சோதிலிங்கம் | நெல்சன் பிளேஸ் | கொழும்பு | 2000. 00 |
| திரு ஜனார்த்தனன் | | சித்தங்கேணி | 1000. 00 |
| திரு விவாகரன் | | உரும்பராய் | 3426. 00 |
| S. ஞானசம்பந்தன் | வலவந்தோட்டம் | கரணவாய் தெற்கு | 10000. 00 |
| தில்லையம்பலம் மகேந்திரராசா | கோப்பாய் மத்தி (சுவிஸ்) | | 10000. 00 |
| T.C. ராஜா | | அல்வாய் | 1000. 00 |

(தொடரும்...

# அடியார் துயர் துடைக்கும் நம்பெருஞ்சுடர்ச்சோதி செல்வச்சந்நிதியான்



திரு பு. கதிர்த்தம்பி அவர்கள்

பூமியில் அவதரித்த ஆறறிவுடைய மனிதனுக்கு அரும்பெரும் பொக்கிஷமாக விளங்குவது ஆலயம் ஆகும். மனிதன் புலன் ஒடுங்கி இறை சிந்தனையுடன் வழிபடும் தன்மையதால் “ஆலயம்” என்னும் நாமம் பிறந்தது என்று அறிஞர் கூறுவர். இறைவன் ஒருவன். அவன் சக்தி, சிவமாக விளங்குகின்றான். அடியவர் இறைவனை சக்தியென்றும் சிவனென்றும் பிள்ளையார் என்றும், முருகனென்றும், வைரவரென்றும், வீரபத்திரர் என்றும் தனித்தனியே பிரித்து ஆலயம் அமைத்து வழிபடுகின்றனர். இந்தவகையில் கலியுகத்தில் கலியுகவரதனாக விளங்குபவன் செல்வச்சந்நிதி முருகன் என்று கூறினால் மிகையாகாது.

மனிதர்கள் தாம் வழிபடும் நோக்கில் சிவன் ஆலயம், அம்பாள் ஆலயம், முருகன் ஆலயம், பிள்ளையார் ஆலயம், வைரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் எனத் தனிக் கோவில்கள் அமைத்து இறைவனைப் பூசிக்கின்றனர். மூலஸ்தானத்தில் சிவன் பிரதிட்டை செய்தால் சிவனாலயம் என்றும், பிள்ளையார் பிரதிட்டை செய்தால் பிள்ளையார் ஆலயமென்றும், முருகன் பிரதிட்டை செய்தால் முருகன் ஆலயமென்றும் கூறுகின்றனர். எல்லாக்கோவில்களிலும் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய பிள்ளையாரை முதற்கண் வணங்கி ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை செய்ய வேண்டுமென்ற கட்டாய நியதி உள்ளது. கோவில்களில் மூலமூர்த்தியாகிய விநாயகர் கொடித்தம்பத்தின் முன் அமைந்திருப்பதையும், வரும் அடியார்கள் முதற்கண் வணக்கம் செலுத்தி ஏனைய மூர்த்திகளை வணங்குவதையும் மெய் அடியார்கள் அறிவார்கள். அம்மன், முருகன், வைரவர், சிவன் ஆலயங்களில் பிள்ளையார் சந்நிதி உள் வீதியில் நிருதிமூலையில் (தென்மேற்கு) அமைந்திருப்பதைக் காணலாம். மூலமூர்த்தி பிள்ளையார் பிரதிட்டை செய்த ஆலயங்களில் நிருதிமூலையில் நாகதம்பிரான் வீற்றிருப்பதையும் காணலாம். கோவிலின் வடமேற் திசையில் முருகன் சந்நிதி அமைந்திருப்பதையும், வடகீழ்த் திசையில் வைரவர் சந்நிதி அமைந்திருப்பதையும் நோக்குகின்றோம். நவக்கிரகங்கள் தனியாக வடகீழ்த் தீசையில் உள்வீதியின் உட்புறத்தில் அமைந்திருக்கின்றன. எல்லா மூர்த்திகளையும் வழிபட்டு கடைசியில் நவக்கிரகங்களைத் தொழவேண்டுமென்பதனால் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் மூலஸ்தானத்துக்கு வடமேற் திசையில் நாகதம்பிரான் அமைந்திருப்பது புதுமையாக உள்ளது. இதனால் அடியவர்கள் பெருஞ்சுடர்ச் சோதியாக சந்நிதியானைப் போற்றிப்புகழ்கின்றனர்.

சிவபூமி என திருமூலநாயனாரால் புகழப்பட்ட ஈழநாட்டின் கிராமங்கள்,

நகரங்கள், பட்டினங்கள்தோறும் காணப்படும் முருகன் ஆலயங்களாக கதிர்காமக்கந்தன் ஆலயம், மாவிட்டபுரம் முருகன் ஆலயம், நல்லூர்க் கந்தன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் என்பன விளங்குகின்றன. கதிர்காமக் கந்தனுக்கும் செல்வச்சந்நிதி முருகனுக்கும் தொடர்பு படுத்தி, கதிர்காமக் கந்தனின் கொடியேற்ற விழாவுக்கு, செல்வச்சந்நிதியில் முருகனை வழியனுப்பும் நிகழ்வாக மாலையும் இரவும் சந்திக்கும் அந்திப்பொழுதில் கோயில் பூசகர் வேலினை வழியனுப்பி வைப்பதையும் அடியவர்கள் பக்திப்பரவசத்தில் அரோகரா! முருகா! முருகா! என்று ஓசை எழுப்புவதையும் காணலாம். வேல், சுடர் ஒளியாகச் செல்வதாக அடியார் கூறுவதால் செல்வச்சந்நிதி முருகனை அரும்பெருஞ் சுடர்ச்சோதி என்று கூறுவது மிகையாகாது.

யாழ் குடாநாட்டில் பக்தர்கள் அலை மோதும் கோவில்களாக நல்லூர்க் கந்தசாமி ஆலயம், மாவிட்டபுரம் முருகன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆகியவை காணப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் இக்கோவில்களில் காவடியாட்டம், கரகாட்டம், பன்னீர்க்காவடியாட்டம், புஷ்பக் காவடியாட்டம் என்பன நிகழ்வதை அடியார்கள் கண்டு பரவசமடைவர். நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தனென்றும், மாவிட்டபுரம் முருகனை தீர்த்தக் கந்தன் என்றும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக் கந்தனை அன்னதானக்கந்தனென்றும் அடியார்கள் போற்றி வணங்குகின்றார்கள். ஆலயங்கள், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைக் கொண்டவை. அந்த வகையில் மாவிட்டபுரக் கந்தன் ஆலயத்தீர்த்தம் கீரிமலையில் ஆடிஅமாவாசையன்று நடைபெறுகின்றது. அன்று சைவ மக்கள் கீரிமலைக் கேணியில் நீராடி பிதிர்க்கடன் தீர்ப்பார்கள். எனவே மாவிட்டபுரக் கந்தனைத் தீர்த்தக் கந்தனென்று கூறுவது சாலவும் பொருத்தமாகும். நல்லூர் முருகன் ஆலயம் அலங்காரத் தோற்றத்துடன் கோபுரங்கள் காட்சியளிக்கின்றன. அதுமட்டுமன்றி கோவிலின் உட்பிரகாரச் சுவர்களில், முருகனின் அருட் செயல்களை விளக்கும் ஓவியங்கள் கண்டோர் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன. முருகன் வலம் வரும்பொழுது ஆடை அணிகலன்கள் மின்னொளி வீசுகின்றன. இதனால் நல்லூர் முருகனை அலங்காரக் கந்தனென்று கூறுவதிலும் தவறில்லை. செல்வச்சந்நிதி முருகன், அடியார்கள் எல்லோருக்கும் எந்நேரமும் அன்னம் பாலித்துக் கொண்டிருக்கும் சந்நிதியான் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு பசிநீக்கி, நோய்நீக்கி அருளுகின்றார். எனவே நாம் அவனை அன்னதானக்கந்தன் என்று கூறுவது சாலப் பொருத்தமே. நாம் அவனைக் கைதொழுது பேறு பெறுவோம்.

# ஆவணி மற்றும் புரட்டாதி மாத குருபூசை தினங்கள்

**06.09.2011 ஆவணி 20 செவ்வாய்க்கிழமை**
**குங்குலியக்கலயர் குருபூஜை**

# பரிபாடல் பகரும் பக்திப் பிரார்த்தனை

(தொடர்ச்சி...

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முருகப்பிரானுடைய அன்புமுதிர்ந்த அடியார்கள் பழுத்த பக்திப் பிரார்த்தனையை பரிபாடல் அழகாகப் பாடுகின்றது. "பெரும் பெயர் முருக! அடியேங்கள் நின்னைப் பெரிதும் விரும்பி மீண்டும் மீண்டும் வழிபாடு ஆற்றுவதன் அடிப்படை எமது பத்திமைப் பரவுதல் மேன்மேலும் நின்னுடைய தொன்மை மரபிலும் புகழினும் மேலோங்குவனவாகவே! இதனைப் பரிபாடல் பாடும் திறம் இது:

"...யாம் நின்னைத்
துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்
இன்னு மின்னுமவை யாகுக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே

(பதினான்காம் பாடல் வரி - 29 - 32)

"நீலமணி நிறமுடைய மயிலினையும் உயர்ந்த கோழிக்கொடியினையும் பிணிமுகம் என்னும் யானையைச் செலுத்திச் செய்த போரில் வெற்றியுற்ற மயில் மேல் அழகா!!

"யாங்களும் எம்முடைய சுற்றத்தவரும் எம்போல்வாரைப் பாடும் பணியினைத் தவிர்த்தோம். "என்றும் எப்பொழுதும் நின்னுடைய அழகிய நிமிர்ந்த திருப்பரங்குன்றத்தைப் பாடுவோம். நின்னுடைய புகழையே ஏத்தித் தொழுது நிற்போம். அவ்வாறு பாடுதலும் பரவுதலும் பணிதலும் யாது காரணம் பற்றியோ எனின் என்றால் துன்பப் பிறவியில் அழுந்தாமல் பிறவாத பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதற்பொருட்டேயாம்.

பரிபாடல் சங்கத்தமிழ் மங்குல் வானில் எங்கும் பொங்கி ஒலிக்கின்றது.

"மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்
பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ
பணியொரீஇ நின்புகழ் ஏத்தி
அணிநெடுங் குன்றம் பாடுதுந் தொழுதும்
அவை, யாமுமெஞ் சுற்றமும் பரவுதும்
ஏம வைகல் பெறுகயாம் எனவே

(பதினேழாம் பாடல் வரி 48-53)

"வெற்றிவேல் தாங்கிய கொற்றவை செல்வ! நினது பூசையில் முறுக்கு யாழ் நரம்பிசையும் நல்லிசைப் புலவர் பாடலும் பொருந்தி வேத ஒலியும் உபசார மலர்களும் தீபங்களும் சிவணி அகிற் புகையும் சந்தனப் புகையும் கமழாநிற்கும்.

"நினது திருவடியின்கீழ் வாழ்தலை யாம் எங்கள் சுற்றத்தவரோடு ஒருங்கு சேர்ந்து

நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.

எமக்கு உரித்தாய ஊரிடத்தில் உறைதலைப்போல எப்பொழுதும் உடனாக உரிமையோடு உறைவோமாக.

"அங்ஙனம் உடன் உறையும் பொருட்டு அருள் புரிவாயாக.

பரிபாடல் பரிந்து உருகிப் பாடும் திறத்தை ஒரு தரம் பாடிப் பாருங்கள். பரவரிய பக்திப் பான்மை தானாகப் பரந்து ஊற்றெடுத்துப் பாயாதோ?

"புரியுறு நரம்பு மியலும் புணர்ந்து
சுருதியும் பூவுஞ் சுடருங் கூடி
எரியுரு கசிலோ டாரமுங் கமழும்
செருவேற் றானைச் செல்வநின் அடியுறை
உரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப்
பிரியா திருக்கவெஞ் சுற்றமோ டுடனே"

(பதினெட்டாம் பாடல் வரி 51-56)

"வேற்படையை உடையோனே!!

"நின் பகைவரை வென்று அவ்வெற்றிக்கு அடையாளமான தொரு கோழிக் கொடியாலே வெற்றிபெற்று விளங்கினை,

"கற்பொழுக்கம் பொருந்திய நெறி நிற்கும் நின் தேவியருடைய ஊடல் அன்பு கூட உரிமையை உணர்த்தற் குரியது.

"பண்பு வியத்தற்குரிய அழகனே!! யாங்கள் நின் அன்பினில் சிறந்த நினது திருவடி நீழலில் உடன் உறையும் உறைவு நாள்தோறும் பொலிவு பெற்றுப் பயன் தந்து சிறப்பதாக என்று பெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தி வணங்குகின்றோம்.

காரைக்கால் அம்மையாரும் சிவபெருமானுடைய திருவடி நீழலில் வேண்டும் பிரியா உறவிற்கு ஒப்பாக விளங்கும் தன்மையை ஒப்புநோக்கி இன்புறற்பாலது.

"இறவாத வின்ப வன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும்
பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன்
னடியின்கீ ழிருக்க வென்றார். (மாக்கதை)


பரிபாடல் பாடுகின்றது.

"மேஎ வெ·கினவை
வென்றுயர்த்த கொடி விறல் சான்றவை
கற்பினை நெறியூ டற்பிணைக் கிழமை
நயத்தகு மரபின் வியத்தகு குமர
வாழ்த்தினேன் பரவுதுந் தாழ்த்துத்தலை நினையா
நயத்தலிற் சிறக்க நாடோறும் பொலிந்தே

(ஒன்பதாம் பாடல் வரி 79-85)

(வளரும்....

# படங்கள் தரும் பதிவுகள்




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இலவச வைத்திய சேவைப் பணியில் Dr. பொன். சின்னத்தம்பி அவர்கள் நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும், சிகிச்சை பெற வந்திருந்த நோயாளர்களையும் படத்திற் காணலாம்.




பெரியோர் பேச்சு அறிவு தருவதுடன் அன்பையும் பெருக்கும்.



கதிர்காம யாத்திரையை மேற்கொண்ட ஆச்சிரமத்து யாத்திரைக் குழுவினர்
வள்ளியம்மன் கோயிலில்.



கதிர்காம யாத்திரையின் முடிவில்
திருக்கேதீஸ்வர தரிசனத்திற்குச் சென்றிருந்த வேளையில்.

பழைய நண்பரைப்போற்று, புதியோரைப்பற்றி அறிந்துகொள்.

# ஆலயந் தொழுவது சாலவும் நன்று



*திரு இரா சாந்தன் அவர்கள்*

ஆலயம் என்ற சொல்லுக்கு ஆன்மா ஒடுங்கும் இடம் என்பது ஒரு பொருள். ஆணவம் ஒடுங்கும் இடம் என்பது இன்னொரு பொருள். ஆலயமாவது எங்கும் வியாபகராய் மறைந்திருக்கும் கடவுள், தம்மை ஆன்மாக் கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தி யராய் எழுந்தருளியிருக்கும் இடமாம்.

சைவர்களாகிய எமக்கு ஆசாரியர் களாக எப்பொழுதும் விளங்குபவர்கள் முக்கியமாக நால்வர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் தாம்பாடிய திருமுறைகளிலுள்ளே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆகையால்த் தான் நாம் அவர்களைச் சைவசமயாசாரி யர் என்று முக்கியமாகப் போற்றுகின்றோம். அத்துடன் நால்வருக்கும் தவறாது குருபூஜை யும் கொண்டாடி வருகின்றோம். சமயகுரவர் நால்வரும் ஆலயம் உள்ள இடமெல்லாம் சென்று வணங்கியதோடல்லாமல், தாம் அனுபவித்த இன்பங்களைத் திருமுறைப் பாடல்களாகவும் பாடி உள்ளனர்.

ஆலயவழிபாடு அறிகுறியாக அறி வைப் பெருக்கும், அருள்நெறியாக அன்பை வளர்க்கும், அனுபவவாயிலாக அழியாப் பேரின்பத்திற்கு அடிகோலும் திசைதெரியாது புயலினால் அல்லலுறும் மாலுமிக்கு வழி காட்டியாக இருப்பது கலங்கரை விளக்க மாகும். அதுபோல வாழ்க்கைப் புயலிலே அகப்பட்டுத் தவிக்கும் மக்களுக்குக் கலங் கரை விளக்கமாக விளங்குபவை ஆலயங் களாகும். ஆதலால், யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று சிரத்தையோடு விதிப் படி தரிசனம் செய்தல் வேண்டும். நாடோறும் போக இயலாதவர் வாரம் ஒருமுறையேனும் செல்லுதல் வேண்டும். அதுவும் இயலாதவர் புண்ணியகாலங்களிலேனும் தவறாமல் ஆலயத்துக்குச் செல்லுதல் வேண்டும்.

ஒருசிலர் தீபாவளிக்குத் தீபாவளி எண்ணெய் வைத்து ஸ்நானம் செய்வதுபோல வேடிக்கை விளையாட்டுக்கள் நிறைந்த திரு விழாக் காலங்களிலே மாத்திரம் ஆலயங் களுக்குச் செல்லும் வழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருஞானசம்பந்தர் முத்திபெற்ற இடம் திருநல்லூர்ப் பெருமணம் ஆகும். அப்பர் முத்தி அடைந்த இடம் திருப் திருப்புகலூர் ஆகும். சுந்தரர் முத்திபெற்ற இடம் திருக்கயிலை ஆகும். மணிவாசகர் முத்தி பெற்ற இடம் சிதம்பரமாகும். எமது சமய குரவர்கள் நால்வரும் திருக்கோயில் களிலேயே முத்தியடைந்திருக்க நாம் திருக் கோயில்களை நாடாதிருப்பது எமது அறி யாமையாகும்.

தமிழ்நாடு கண்ட தமிழ்ப்புலவர் களுள் ஔவையார் தலைசிறந்தவராவர். அவர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு நீதிநெறியைப் போதித்தவர். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற உண்மை கண்ட அவ்வருள்

அம்மையார் தமிழ்நாட்டில் கல்வியறிவில்லாத பாமரமக்களும் கடைத்தேறவேண்டும் என்னும் ஆர்வத்தினால் சிலவகை எழுத்திற் பல்வகைப் பொருளடங்கிய சிறுசிறு நூல்களை நமக்கு ஆக்கிக் கொடுத்தவர். யாவருங் கற்கத்தக்க உரைநடைநூல் இல்லாத அக்காலத்தே பிள்ளைகளும் எளிதில் மனப்பாடம் பண்ணும் விதத்தில் தமிழ் நெடுங்கணக்கின் அகரமுதல் னகரமீறாகத் தொடங்கும் இரண்டெழுத்து, மூன்றெழுத்துச் சொற்களைக் கொண்டு அவர் ஆத்திசூடியை இயற்றினார். அவ்வாறே நான்கு சிறு தொடர்களால் மோனை நயம்படக் கொன்றை வேந்தனையும் இயற்றித் தந்தனர்.

அம்மையார் இயற்றியுள்ள விநாயகர் அகவலிலிருந்து அத்தமிழ் மூதாட்டி யோகம் பயின்று அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர் என்பது விளங்கும். அதனால் அவருக்கு யோகக்காட்சி என்ற சூட்சும திருஷ்டியும் இருந்திருக்கவேண்டும். அவர் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று அருளிச் செய்தபோது, அது வெறும் புறப்பார்வை கொண்டு மாத்திரம் அல்லாமல், அகப்பார்வைக்கும் உகந்ததெனக் கொண்டே அவ்வாறு கூறியிருத்தல் கூடும். ஆனால் "இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கையில் அவரைக் காண்பதற்கு ஆலயம் செல்வானேன்? என்பது இக்காலத்தவர்களிடம் அடிக்கடி எழும் கேள்வி. இது புதிய கேள்வியல்ல. முன்பும் பலமுறை கேட்கப்பட்டதேயாகும். இன்றும் பலர் தாங்கள் ஏதோ கடவுளைக் கண்டமந்திரியாக "நீங்கள் ஏன் ஆலயத்திற்குச் செல்லவேண்டும்? எங்களுக்குப் பின்னே வாருங்கள், கண்ணை மூடுங்கள், ஐந்து நிமிடத்திற் கடவுளைக் காட்டுகின்றோம்" என்று பாமர மக்களை ஏமாற்றுவதல்லாமல் தாமும் ஏமாந்து போகின்றனர். ஆகமங்களிற் கூறியபடி ஆறுமுகநாவலர் பின்வருமாறு கூறியுள்ளார்;

"கடவுள் வியாபகமாய் நிற்பினும் ஆலயத்திருமேனிகளிலும் மெய்யடியார் திருவேடத்திலும் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றைய இடங்களில் பாலில் நெய் போல விளங்காது நிற்பர்".

இறைவன் விளங்குவதாக இங்கு கூறப்படும் அந்த இரண்டு உருவத்திருமேனிகளுள், அநுபூதிமான்களாகிய மெய்யடியாரைக் காணக்கிடைப்பதே அருமையான காரியம்; அதனிலும் அடிக்கடி அவரை அண்டக் கிடைப்பது அருமையினும் அருமையாம். ஆனால் ஆலயங்கள் இல்லாத ஊர்கள் மிக அபூர்வம். "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பதே நமது முன்னோர் துணிபு. அத்துடன் ஆலயங்கள் அடிக்கடி நாம் செல்லக்கூடிய இடங்களுமாம். அதனால் சாதாரண மக்கள் தயிரில் நெய்போல இறைவனைக் காணக்கூடிய இடங்களே ஆலயங்கள் என்பது பெறப்படும். இதனையே "தேவாலயங்கள், எங்கும் வியாபகமாய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடங்களாம்" என்று ஆறுமுகநாவலர் மேலும் விளக்குகின்றார்.

நமது முன்னோர் அறிவு விருத்தியடையும் வழிகளில் கற்கை, கேட்கை, கோயிற் பழக்கம் என மூன்றைக் கூறுவர். ஆலயத்திற்குச் செல்லாமல் ஆலயம் சம்பந்தமான பழக்கம் எவ்வாறு ஏற்படும்? வழிபாட்டு முறையிலும் குரு, லிங்கம், சங்கமம் என மூன்றாகக் கூறுவர். லிங்கம் என்பதுதான் கோயில் வழிபாடாகும். கோயில் வழிபாட்டினால்த்தான் ஒருவர் முழுமை பெறுவார் என்பதைத் தாயுமானவர் பின்வரும் பாடல்மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"


ஆலயத்திற்குச் செல்வதனால்த்தான் அடியார் கூட்டுறவும் கிடைக்கின்றது. ஆகவே ஆலயந் தொழுவது சாலவும் நன்று..

# அருணகிரிநாத சுவாமி விழா 2011

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் விழாக்களில் அருணகிரிநாதர் விழாவும் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவானது வருடாவருடம் யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக்கல்வி நிலையத்தின் அனுசரனையுடன் நடைபெற்று வருகிறது.

மேற்படி குருபூசை நிகழ்வு 15.07.2011 வெள்ளிக்கிழமை காலை வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிசேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் ஆரம்பமாகியது.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்ற வந்த சைவப்புலவர். க. நித்தியதசீதரன் ஆசிரியர் அவர்கள் அருணகிரிநாத சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் உரைத்ததோடு அவரது வரலாற்றின் மூலம் மனிதராகிய நாம் பலவிதமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பல எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளக்கிக் கூறினார்.



மேற்படி இவ்விழாவினை ஆச்சிரமத்தினால் மேற்கொள்வதற்கு காரணமாய் இருந்த சிவத்தமிழ் வித்தகர் திரு சிவ. மகாலிங்கம் அவர்கட்கும், அவரோடு கரணவாயைச் சேர்ந்த திரு. ம. கதிரிப்பிள்ளை அவர்கட்கும், இந்நிகழ்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகோலிவரும் புதிய விஞ்ஞானக்கல்வி நிலைய நிர்வாகிக்கும் நன்றி தெரிவித்ததோடு இவ்விழா தொடர்ந்து நடைபெற வேற்பெருமான் அருள்வேண்டி அன்றைய நிகழ்வு சிறப்புற முற்றுப்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வழமை போன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் 63 நாயன்மார்களது குருபூசை நிகழ்வும் இடம்பெற்றது.

**தகுதி இல்லாதவன் பிறரை அவதூறு செய்து பொழுதைப் போக்குவான்.**



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

சங்கநூற் செல்வர் பண்டிதர் க. அருளம்பலவனார்

(தொடர்ச்சி...

பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு

**பதவுரை**

பட்ட மங்கையில் பாங்காய் இருந்து- பட்ட மங்கை என்னும் திருப்பதியிலே உரிமையுடன் வீற்றிருந்து, அங்கு அட்டமா சித்தி அருளிய அதுவும்- அவ்விடத்தில் எட்டுப்பெரிய சித்திகளின் இயல்பினை அறிவுறுத்தியருளிய அத்தன்மையும்.

முன்னொரு காலத்திலே இறைவன் திருக்கையிலையிலிருந்து, சிவகணங்கள் துதி செய்து விதியிற் கேட்பச் சிவ தருமங் களை உபதேசித்தருள்வாராயினர். அப்பொழுது அறுமுகக் கடவுளுக்கு அன்பொடு பால் நல் கிய இயக்கமாதர் அறுவரும் இறைவனைத் தொழுதுபோற்றி அடியோங்களுக்கு அட்டமா சித்திகளை உரைத்தல் வேண்டுமென இறைவனும் அணிமா முதலிய எட்டுச் சித்தி களையும் பொருளொடு செப்புங்காலை, அம் மாதரார் இடையே பாராமுகஞ் செய்தனராக அப்பொழுது இறைவன் வெகுண்டு நீவிர் தென்னவன் நாட்டிலே "பட்டமங்கலம்" என் னும் பதியிலே ஆலமர நீழலிற் கல்லுருவ மாகிக் கிடக்கக் கடவீர் எனச் சபித்தனர். அதுகேட்டு அம்மாதரார் வணங்கி, மங்கை பங்கனே! சிறியோங்கள் பிழைபொறுத்தருளிச் சாபமும் ஒழித்தி என்று குறையிரப்ப, இறை வனும் உவகை கூர்ந்து நீவிர் யாம் புகன்ற நாட்டைச் சேருமின்; அவ்விடத்து யாம் வெளிப்பட்டு உங்கள் சாபமும் நீக்கி நுமக்கு அவ்வட்டமாசித்தியு நிகழ்த்துவேம் என்று அருள்புரிய, இயக்கிமார் அறுவரும் பட்ட மங்கையிற் போந்து ஆலின்கீழ் நெடுங்காலம் கல்லாய் நின்றனர். இறைவனும் குருவடிவாகி அக்கற்களையணுக அம்மங்கையர் சிலை வடிவொழிந்து முன்னை வடிவொடும் வந்து வணங்கி அச் சித்திகளை விளம்பென்று ஏத்தினர். இறைவனும் அப்படிச் செய்குவம் என்று எட்டுச் சித்திகளையும் பொருளொடும் விரித்துரைத்தனன் என்று நம்பி திருவிளை யாடற் புராணம் கூறும்.

"பட்டமங்கை" பட்டமங்கலம் எனவும் வழங்கும். சிவகங்கையைச் சார்ந்தது. பாங்கு- உரிமை. இயக்கமாதர்க்கு. இறைவன் மொழிந்த படி வந்து அவர்க்கு அருள்புரிந்தமையின் "பாங்காயிருந்து" என்றார். ★ அட்டமாசித்தி அணிமா மகிமா கரிமா இலகிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வகித்துவம் என்பன.

★ இவற்றின் விரிவைப் பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் அட்டமா சித்தியுபதேசித்த படலம் 23-7 செய்யுளிற் காண்க.

தற்புகழ்ச்சி கூடாது.

"அணிமா மகிமா கிரிமா லகிமா
நணுகீ சத்துவம் வசித்துவ நன்குள
விணைசேர் பிராத்திப் பிராகா மியமென்
குணமார் சித்திக டுளங்கக் கூறினான்"

நம்பி திருவிளை. அட்டமா 15 என வருதல் காண்க.

வேடுவன் ஆகி வேண்டுஉரு கொண்டு- பாண்டியனுக்காகச் சோழனொடு போர்புரிதற் பொருட்டு வேட்டுவப் பணியாளனாகி அச்சமயத்திற்கு வேண்டிய திருவுருவத்தினை எடுத்து, காடது தன்னில் கரந்த கள்ளமும்- காடுமூடிக்கிடந்த மடுவினிடத்துக் குதிரையோடு குதித்து மறைந்த தந்திரமும்.

முன்னொரு காலத்தில் சோழமன்னன் ஒருவன் தன் வலிமையினை வியந்து செருக்குடையனாய் தென்திசை யொழிந்த மூன்று திசைகளிலுமுள்ள அரசர்களை வென்று பின் தென்றிசை நோக்கி வருவானாயினான். அக்காலத்தில் மதுரையிலிருந்து அரசுசெய்த பாண்டிய மன்னன், அவன் தன்னை எதிர்க்க வருதலை அறிந்து உற்றகாலத்துத் தெய்வமல்லாமல் வேறு உதவியில்லை எனத் தேறித் திருக்கோயிலிற் சென்று சொக்கனை வணங்கி "சோழன் திக்கெலாம் வென்று நம்மேல் வந்தான்" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்போது சொக்கன் திருவருளால் "நீ நின்படையொடு சென்று இளைத்திடாது அமர்செய் வென்றி தருகுவம்" என்று அசரீரி வாக்குத் தோன்றிற்று. பாண்டியன் அதுகேட்டுத் தன் படையொடு சென்று அவனொடு போர் செய்தான். அப்போது இறைவன் திருவருளால் பாண்டியனின் சிறுபடை அளவில்லாத வெம்படையாய் விளங்கச் சோழனின் தானை எதிர் நின்று பொரவாற்றாது முதுகிட்டது. அது கண்ட சோழன் வெகுண்டு மூலபலத்தோடு எதிர்க்கக் கண்டு பாண்டியன், என்னை யாளுடையாய் தேவரீர் மொழிந்தது கொண்டு எதிர்க்கின்றேன் என்று கூறி முன்செல்ல இறைவனும் வேட்டுவப் பரியாளாகிப் போர்க்களத்துத் தோன்றிப் பாண்டியன் முற்போந்து சோழன் ஏறிவந்த குதிரை முகத்தில் வேலினை எறிய அது கண்ட சோழன் நீ புகுமிடம் புகுந்து குதிரையோடு உன்னைப் பிடிப்பன் என்று கூறித் தொடரச் சொக்கனும் அவனுக்குத் தளர்ந்தவன்போல் நடித்து களத்தினைவிட்டு ஓடுவான்போல் குதிரையொடும் மதுரை நோக்கிப் போகத் தொடங்கினான். சோழனும் தன் படைவெள்ளத்தொடு பின்றொடர்ந்தான். சொக்கனும் மதுரை மாநகரின் மேல்பாலுள்ள ஆழம்மிக்க தடத்துட் பாய்ந்து மறையப் பின்றொடர்ந்து வந்த சோழனும் வந்த வேகத்தினால் குதிரையோடு அத்தடத்துட் பாய்ந்து மாண்டான் என நம்பி திருவிளையாடற்புராணம் கூறும். இவ்வரலாறு,

"மண்டிரு வேட்டுப் பஞ்சவற் பொருத
கிள்ளியுங் கிளையுங் கிளர்படை நான்குந்
திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட
வெரிவா யுரக ரிருணாட் டொருவக்
கொலைக்கொண் டாழி குறியுடன் படைத்து
மறியப் புதைத்த மறங்கெழு பெருமான்"

(83:11.6) எனக் கல்லாடத்து வருதலுங் காண்க.

வேடுவனாகி வேட்டுவப் பரியாளனாகி, “விரைவின் வெங்களத்துத் தோன்றி வேட்டுவப் பரியாளாகி” (நம்பி திருவிளை. சோழனை 20) என வருதலுங் காண்க. இறைவன் வேட்டுவப் பரியாளாகியது அச்சமயத்திற்கு வேண்டிய திருவுருவாதலின் “வேண்டுருக் கொண்டு” என்றார். சோழனைத் தடத்தில் வீழ்த்திய இடம் அடிகள் காலத்துக் காடாய்க் கிடந்தமை பற்றிக் காடது தன்னில்” என்றார். போர்க்களத்திலே புறங்கொடுத்தான் என்று சோழன் எண்ணும்படி களத்தினைவிட்டு மதுரைநோக்கிச் சென்று அச்சோழன் படையொடும் பின்றொடர்ந்து தடத்துள் பாய்ந்து மாளுமாறு இறைவன் தன் படையொடு அதனுட் பாய்ந்து மறைந்தமையின் “கரந்த உள்ளமும்” என்றார்.

(தொடரும்....

## வீட்டில் சுவாமி விக்கிரகங்களை வைத்து வழிபட்டால், அவற்றுக்குத் தினமும் அபிஷேகம், நைவேத்தியம் முதலியன செய்ய வேண்டுமாமே!

உடல் சுகாதாரத்துக்கு நீராடுகிறோம். பசியைப் போக்க உணவருந்துகிறோம். வீட்டில் பசுமாட்டை வளர்த்து அதைக் கழுவி அதற்கு உணவும் அளிக்கிறோம். செல்லப் பிராணிகளை வளர்க்கிறோம். அவற்றின் பராமரிப்பு தடங்கல் இல்லாமல் நடைபெறுகிறது. அவற்றிற்குப் பிடித்தமான உணவளித்து சுகாதாரம் குன்றினால் மருத்துவரை அணுகிக் கவனிப்போம். நம் குழந்தைச் செல்வங்களைத் தினமும் நீராட்டிப், பாலூட்டி வளர்ப்போம். குழந்தைக்குப் பசிக்கும் வேளையறிந்து எச்சரிக்கையுடன் செயற்படுவோம். விருந்தாளியை உணவளித்து உபசரிப்போம்.

நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்கள் கடவுளின் படைப்பு. விதையை விதைக்கிறான் விவசாயி. பூமி அதைப் பயிராக மாற்றித் தருகிறது. அது பூமி மாதாவின் கருணை. அவர்தந்த உணவை முதலில் அவருக்குத் தந்தபிறகு ஏற்றுக்கொள்வோம். உணவை ஆண்டவனுக்கு அளிக்கவேண்டும். அவரது பார்வைபட்டு, தூய்மையாக்கி அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். என்ற நடைமுறையை வகுத்துத் தந்தது தர்ம சாஸ்திரம். அவருக்கு அபிஷேகம் செய்வதும் உணவளிப்பதும் ஒரு சுமையாகாது.

விக்கிரகத்தை வைத்து பூஜை செய்ய ஆசைப்பட்டால் அபிஷேகம், பிரசாதம் ஆகியவற்றையும் செய்யவேண்டும். நமது வீட்டில் அவரை வரவழைத்து அபிஷேகம் செய்யாமலும் உணவளிக்காமலும் இருப்பது தவறு. விருந்தோம்பலில் முன்னவர்களான நமக்கு அது அழகல்ல. அக்கறையுடன் செய்யுங்கள். தங்களது முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வீட்டில் அவருக்குப் பணிவிடை செய்ய பொருளாதாரமும் சந்தர்ப்பமும் இடம் கொடுக்காவிட்டால் விக்கிரகத்தைத் தேவையானவர்களுக்கு அளிக்கலாம். கடவுளைக் கோயிலில் வணங்கினாற் போதும்.

நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்



-ஆறுமுகநாவலர்-

படலம்-53

## கீரனைக் கரையேற்றிய படலம்

நக்கீரர் சிவபிரானது நெற்றிக் கண்ணின் அக்கினியினாலே பொற்றாமரை வாவியிலே விழுந்து துன்பப்பட, மற்றப் புலவர்களெல்லாரும் கண்டு நடுங்கினார்கள். "நக்கீரர் இல்லாத சங்கம்" அரசன் இல்லாத குடியும்-ஞானம் இல்லாத கல்வியும்" போன்றதாக எண்ணி, "சிவபிரானுடன் வாது செய்த இப்பிழையோ பெரியது; இது தீர்வது எப்போது? தீர்வதெப்படி" எனச் சிந்தித்தார்கள். யாவருக்கும் தேவராகிய சிவபிரான் திருவுளம் இரங்கினால் மட்டுமே நக்கீரரின் துன்பம் நீங்கும் எனத் தெளிந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்தனர். "நக்கீரர் தனது கல்விச் செருக்கினால் அறிவிழந்து செய்த தவறை தாங்கள் பெருங் கருணை கூர்ந்து பொறுத்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனர்.

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையாரோடு எழுந்து போய் பொற்றாமரை வாவிக் கரையையடைந்து புலவர் கூட்டத்தினுள்ளே நின்று கொண்டு நக்கீரரை அருட்பார்வை பார்த்தார். நக்கீரர், தம் பொறிபுலனனைத்தும் சிவபெருமானுடையதேயாக இறைவன் கருணைக் கடலில் ஆழ்ந்து அன்புருவானார். "உலக மாதாவாகிய ஞானப் பூங்கோதை அம்மையாருடைய கூந்தலுக்கு தீங்கு சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அவரேயன்றி யார் பொறுப்பார்?" என்று, திருக்காளத்தியப்பர்மீது நேரிசை வெண்பாவினாலே "கைலைபாதி காளத்திபாதியந்தாதி" பாடினார். சிவபெருமான் அதைச் செவிமடுத்து மகிழ்ந்து, நேர் வந்து அவருடைய கையைப் பிடித்துக் கரையிலேற்றியருளினார்.

நக்கீரர், சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையாரையும் வணங்கினார். சிவபெருமான் தீமை செய்தவருக்கு நிக்கிரகமும் நன்மை செய்தோருக்கு அநுக்கிரகமும் செய்யும் தன்மையைப் பொருளாகக் கொண்டு "கோபப்பிரசாதம்" பாடினார். பின்பு, "பெருந்தேவபாணி"யும், "திருவெழுகூற்றிருக்கை"யும் பாடிச் சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்தார். மற்றைய புலவர்களுந் தனித்தனியே துதித்து வணங்கினார்கள். சிவபெருமான் நக்கீரருக்குத் திருவருள் சுரந்து, "நீ முன்போலப் புலவர் கூட்டத்துள் இருக்கக் கடவாய்" என்று பணித்து மறைந் தருளினார்.

நக்கீரரும் மற்றைப் புலவர்களும் சங்கமண்டபத்தின் முன்னே தொங்கிய பொற்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்தவுடன், பாண்டியனைக் கொண்டும் சில வரிசைகள் கொடுப்பித்து கல்விச் செல்வர்களாய் வாழ்ந்திருந்தார்கள். சண்பக பாண்டியன் நாடோறுஞ் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துப் பற்பல திருப்பணிகளையும் செய்து கொண்டிருந்தான்.

நன்றாகச் சிரித்தால் வீட்டில் ஒளி பரவும்.

படலம்-54

# கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

சோமசுந்தரக் கடவுளுடைய கடாட்சத்தினாலே சங்கப் புலவர் கூட்டத்திற் சேர்ந்த நக்கீரர் அழுக்காறு நீங்கி, அக்கடவுளின் திருவடிகளிலே அன்புகொண்ட மனத்தினராகி புலவர் கூட்டத்தினரோடு வீற்றிருந்தார். "நெற்றிக் கண்ணின் வெப்பந் தாங்காது தவித்த போது, தமக்கு வெப்பந்தணித்து காத்தது இந்த பொற்றாமரை வாவியே" என்று சிந்தித்து நாடோறும் முப்பொழுதிலும் பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் செய்து சோமசுந்தரக் கடவுளை வழிபடும் நியமம் பூண்டார்.

நக்கீரனது உளமார்ந்த அன்பினையும் வழிபாட்டையும் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், "இவனுக்கு இலக்கணம் இன்னமுந் தெரிந்திலது. அதனால், இவனுக்கு இலக்கணம் யாரைக்கொண்டு போதிக்கலாம்" எனச் சிந்திக்கலானார். முன்பு ஒரு காலத்தில் அகத்தியருக்கு இறைவனே தமிழிலக்கணம் கற்பித்ததை நினைவுபடுத்தி, "அகத்தியரைக் கொண்டே நக்கீரனுக்கு இலக்கணம் உணர்வித்தருளுமாறு" உமாதேவியார் வேண்டினார்.

அதுகேட்ட சிவபெருமான், "அப்படியே செய்வோம்" என்று அகத்தியரை நினைந்தருளினார். அதனையறிந்துகொண்ட அகத்தியர் தம் மனையாள் உலோபா முத்திரையோடு புறப்பட்டு மதுரைத் திருக்கோயிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையையும் வணங்கி நின்றார். அப்பொழுது நக்கீரரும் பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, தரிசனத்திற்காக அங்கு வந்து சேர்ந்தார். அகத்திய முனிவரை நோக்கிய சிவபெருமான், "இந்த நக்கீரனுக்கு இயற்றமிழ் தெரிந்திலது. நீ நம்மிடத்துக் கற்றுக்கொண்டபடியே இவனுக்குக் கற்பிக்கக் கடவாய்" எனப் பணித்தருளினார். அகத்திய முனிவர் அப்பணியினை அகத்தினும் சிரத்தினும் மனத்தினுந் தாங்கி, நக்கீரருக்கு முதனூலைத் தொகை வகை விரிமுறையினாலே, காண்டிகை யுரையானும் விருத்தியுரையானும் ஐயந்திரிபறப் போதித்தார். அவரது போதனா சக்தியைக் கண்ட இலக்கண முதநூலாசிரியரான சிவபெருமான் அகத்திய முனிவரை ஆரத்தழுவி வேண்டும் வரங் கொடுத்து இருக்கை செல்ல அனுப்பி வைத்தார்.

அகத்தியர் போனபின் உமாதேவியார், சிவபெருமானை நோக்கி, "நக்கீரனுக்கு நீரே கற்பியாது, அகத்தியனைக் கொண்டு கற்பித்ததென்னை?" என்று வினாவினார். "நம்மிடத்தே பொறாமையில்லாதவருக்கும், நமது சொல்லைக் கடவாதவருக்கும் நூல் கற்பித்தல் தருமம். இவன் நம்மிடத்தே பொறாமை கொண்டதனால் நாம் கற்பியாது, அகத்தியனைக் கொண்டு கற்பித்தோம்" எனச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

அகத்திய முனிவரிடத்திலே முதனூல் கற்றுக்கொண்ட நக்கீரர், வழுவும் வாழா நிலை முடிவும் உற்றுநோக்கி, "நான் அறியாமையினாலே இறைவன் பாடலிலே பொருட்குற்றம் சொன்னேனே. **"அற்பவித்தையுடையோர் மகாகருவமுடையோர்"** எனும் பழமொழி என்பொருட்டு சரியாகிவிட்டதே. மாதாவானவள் தன் குழந்தையைக் கசக்கின்ற மருந்தைக் கொடுத்து நோயை ஓட்டுதல் போல, தமியேனைத் தண்டித்து அறிவுறுத்திய பெருங்கருணைப் பெருமானுக்கு ஏழையோன் செய்யத் தகுவது யாது?" என நினைந்து நினைந்து ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தார். தமக்கு அகத்தியர் போதித்த முதநூலை மற்றப் புலவர்களுக்கும் போதித்து சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளிலே பதிந்த பக்தியோடிருந்தார்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

5. மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே

## பதவுரை

மகமாயை- வலிமைமிக்க பெரிய மாயைகளையெல்லாம், களைந்திட வல்ல- நீக்க வல்லவராகிய, பிரான்- உயிர்களை விட்டுப் பிரியாதவராகிய முருகப் பெருமானுடைய, முகம் ஆறு- ஆறு திருமுகங்களையும், மொழிந்தும்- அடியேனுடைய நாவானது "ஆறுமுகம்" "ஆறுமுகம்" என்று பன்முறை கூறியும், அகம்- வீடு, மாடு- செல்வம், மடந்தையர் என்று- மாதர் என்று இவைகளைச் சதா நினைந்து, அயரும்- சோர்வு அடையச் செய்கின்ற, சகமாயை உள்நின்று- உலக மாயையுள் கிடந்து, தயங்குவது ஒழிந்திலனே- கலங்குவதை அடியேன் விட்டு விலகப் பெற்றேனில்லையே.

## பொழிப்புரை

மிகுந்த வலிமையுள்ள பெரிய மாயைகளை எல்லாம் நீக்கவல்லவராகிய, உயிர்களை விட்டுப் பிரியாதவராகிய முருகப்பெருமானுடைய ஆறுமுகங்களையும் எனது நாவினால் பலகாலும், "ஆறுமுகம்" "ஆறுமுகம்" என்று கூறியும், வீடு, செல்வம், பெண்கள் என்ற இவற்றையே நினைந்து தளர்ச்சியடைகின்றதை அடியேன் விட்டு விலகினேன் இல்லையே.

## விரிவுரை

***மகமாயை களைந்திட வல்ல பிரான்:***

மகாமாயை என்பது மகமாயை எனக் குறுகியது. மாயை என்பது திரோதான சக்தி வயப்பட்ட உலகச் சிற்றின்ப வாழ்வு மயக்கத்தைக் குறிக்கின்றது. கேவல திசையில் ஆணவமலம் இருளில் உயிர்கள் மூழ்கிக்கிடந்திருந்தன. அறிவு சிறிதும் இன்றி இருந்த அவ்வுயிர்கள் படிமுறையில் சிறிது சிறிதாய் இருளிலிருந்து நீங்கி தன்னையறிந்து, தலைவனையறிந்து உய்யும் பொருட்டு இறைவனோடியைந்து நிற்கின்ற அருட்சக்தி, திரோதான சக்தியாகி, உயிர்களுக்கு தனு கரண புவன போகங்களை

உதவி, சகல நிலையில், உலக இன்பங்களை நுகருமாறு மயங்கி அருள் செய்கின்றான். அங்ஙனம் மயங்குவது உலக நலன்களை நுகர்ந்து, அவைகள் நிலையில்லாதவையென்று உணர்ந்து, பொய் வாழ்வைக் கழித்து பேரின்ப நாட்டமுற்று, மெய்யறிவையடைந்து நிலையான பேரின்ப வாழ்வையடையும் பொருட்டேயாம். ஆணவமலம் நீங்கியவுடன் அந்தத் திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி அருள்புரிகின்றாள்.

இந்த உலக மயக்கம் நீங்குதல் அரிது. ஆதலின் மகமாயை யென்றார். மகமாயையை ஞானவாளால் சேதித்தல் வேண்டும். அந்த ஞானவாளை அடியார்க்கு அருளி மகமாயையைப் போக்கவல்ல பிரான் முருகப் பெருமான்.

"தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி" -கந்தரலங்காரம் (69)

"அவிரோத ஞானச்சுடர் வடிவாள் கண்டாயடா
அந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே"
-கந்தரலங்காரம் (25)

### முகமாறு மொழிந்து மொழிந்திலனே:-

(1) "ஆறுமுகம், ஆறுமுகம்" என்று பலகாலும் கூறியும் அடியேன் உலக மாயையில் நின்று கலங்குவதை ஒழிந்தேனில்லை. ஏன்? வாக்கு மட்டும் கூறுகின்றது. மனம் அதனோடு ஒன்றவில்லை. அதனால் சக மாயை நீங்கிற்றில்லை என்கின்றார்.

(2) ஒருமுகமே என் மாயையைப் போக்கவல்லது. ஆறுமுகங்களைக் கூறியும் அடியேன் மாயையைக் கடந்தேனில்லை. என்னே என் தவக் குறைவு? என்றும் கூறுகின்றார்.

(3) முகமாறு மொழிந்து மொழிந்திலனே.

முருகன் ஆறுமுகமாகத் தோன்றி பொழிந்தும்- உபதேசித்தும்- அடியேன் மாயையை ஒழியப் பெற்றேனில்லை என்றும் பொருள்படும்.

(4) முகமாறு மொழிந்து மொழிந்திலனே.

ஆறுமுகத்தை மொழிந்து மொழிந்திலனே என்றே கொண்டு ஆறுமுகத்தைப் பலகாலும் கூறுகின்றேனில்லையே! சகமாயையுள் நின்று தயங்குவதோ? இதுவோ என் விதி? என்றும் பொருள்படும்.

(5) மொழிந்திலனே என்ற சொல்லில் உள்ள ஏகாரம் எதிர்மறையாகக் கொண்டால் ஒரு முகத்தைக் கூறினாலே உலக மாயை ஒழியுமே! ஆறுமுகத்தைக் கூறியும் ஒழிந்திலனே! ஒழிந்துவிட்டேன் என்றும் பொருள் கூறலாம்.

### அகமாடை மடந்தையர் என்றயரும் சகமாயை:-

அகம்- வீடு; மண்ணாசை, மாடு- செல்வம் (ஐ சாரியை) பொன்னாசை, மடந்தையர்- பெண்கள். பெண்ணாசை

இந்த மூவாசைகளாகிய உலக மாயையில் சிக்குண்டு கலங்குவதை ஆறுமுகப் பெருமானுடைய அருளின் வலிமையால் அகற்ற வேண்டும்.

*பிரான்:-*

பிரியான் என்ற சொல்லின் மருஉ. உயிர்களை விட்டு ஒருபோதும் இறைவன் கருணையினால் பிரிய மாட்டான். இப் பொருள் பாம்பனடிகள் கூறியது. ஆறுமுகம், ஆறுமுகம் என்று பலகாலும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் ஓதி உலக மாயையைக் களைந்து நாம் உய்ய வேண்டும்.

முகம் ஆறும்- என்பதில் உள்ள உம்மை முற்றுமை.

**கருத்துரை**

ஆறுமுகப் பெருமானுடைய திருநாமத்தை ஒருமைப்பாட்டுடன் கூறி உலக மாயையை வெல்லுதல் வேண்டும்.

---

# ஒழுக்கம் உயிரினும் மேல்

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்**

**-குறள்-**

**உலகியல் வாழ்வில் எவ்வளவுதான், கல்வி, அறிவு, பட்டம், பதவி, பணம் எல்லாம் இருந்தாலும் ஒழுக்கம் ஆகிய மனித விழுமியம் இன்றேல் மற்றெல்லாம் என்றோ ஒரு நேரம் பெருங்கேடு விளைவித்து விடும். ஒழுக்கமில்லாத கல்வி அறிவு, பட்டம், பதவி எல்லாம் மனிதன் இறக்கும் போது அவனுடன் அழிந்து விடுவது மட்டுமன்றித் தீராப்பழியாகவும் தொடர்ந்திருக்கும்.**

**கற்றறிந்தோர், பட்டறிவுபடைத்தோர் இதனை நன்கு உணர்ந்தே வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வை வலியுறுத்தி வருகின்றனர். நாம் தினமும் சந்திக்கும் எத்தனை எத்தனை மனிதர்கள் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையினாற் சமூகத்தில் ஒதுக்கப்படுகிறார்கள். மேலும் ஒருவனுடைய ஒழுக்கங்கெட்ட செயல்களால் அவன் மனமே அவனை வெறுத்துத் தவறான வழியிற் துன்பப்பட வைக்கும் என்பதனையே**

**வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்**

**எனத்திருக்குறள் அழகாக எடுத்துக் கூறுகின்றது.**

**எனவே நாம் படிப்பு, பணம், பதவி எதனைத்தான் பெரிதாகப் பெற்றிருந்தாலும் ஒழுக்கத்தைக் கட்டிக்காக்காமல் விட்டால் இழிநிலைக்குத் தள்ளப்பட நேரிடும். ஆதலாற் சிறியோர் முதல் பெரியோர்வரை ஒழுக்கநெறியைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் மானிட சமூகத்தை மாண்புற வைக்கலாம்.**

**-நீர்வைமணி-**

---

**ஒன்றும் தெரியாதவனுக்கு எதிலும் சந்தேகமில்லை.**

# செய்திச் சிதறல்கள்

- சிவத்தமிழ் செல்வி, துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மூன்றாவது குருபூசை வைபவம் 11.07.2011 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் தலைவர் திரு ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

- சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் வெளியிடவுள்ள "சைவ சித்தாந்த" ஆய்வு நூலுக்கான பொருத்தமான கட்டுரைகள் சைவ சித்தாந்த அறிஞர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இம்மலருக்கான ஆக்கங்களை எதிர்வரும் ஆவணிமாதம் 15ஆம் திகதிக்கு (15.08.2011) முன் சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம், ஏழாலை மேற்கு, சுண்ணாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் இயக்குனர் கு. ரஜீவன் அறிவித்துள்ளார்.

- பருத்தித்துறை சிவன் கோயில் திருவிழா எதிர்வரும் 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். 01.08.2011 வியாழக்கிழமை காலை 09மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாட் காலை 07 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

- யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் 04.08.2011 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். 27.08.2011 சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும். மறுநாட் காலை தீர்த்தத்திருவிழாவும் 29.08.2011 திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

- வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் தேவஸ்தான அம்பாள் மகோற்சவம் 24.07.2011 ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 01.08.2011 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 02.08.2011 செவ்வாய்க்கிழமை ஆடிப்பூரத்தன்று காலையில் ஊறணி சமுத்திரத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவடையும்.

- வல்வை கப்பலுடையவர் (பிள்ளையார்) கோயில் அலங்காரத் திருவிழா 21.07.2011 வியாழனன்று ஆரம்பமாகி, 30.07.2011 ஆடி அமாவாசை தினத்தன்று கடற் தீர்த்தத்துடன் நிறைவுபெறும். 01.08.2011 திங்களன்று மாலை 7மணிக்கு கடலில் நடைபெறும் தெப்பத் திருவிழா நிறைந்த மின் அலங்காரத்துடன் காணற்கரிய காட்சியாகவிருக்கும்.

# யாழ்ப்பாண அரசவம்சப் புலவனுக்கு நீர்வேலியில் திருவுருவச் சிலை



*திரு ந. குமரசிறி அவர்கள்*

அரசகேசரி - யாழ்ப்பாணத் தமிழ் அரச வம்சத்தை சேர்ந்த பெரும்புலவர். காளிதாசனின் வடமொழி இரகு வம்சத்தை தமிழில் தந்த பெருமைக்குரியவர். ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதலில் காப்பியம் இயற்றிய புலவன் என்ற பெருமையையும் அரசகேசரி பெறுகிறார்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள் விநாயக வழிபாட்டில் அதிக நாட்டம் காட்டினர். நல்லூரில் கைலாயப் பிள்ளையார், இணுவிலில் பரராசசேகரப் பிள்ளை யார், செகராசசேகரப் பிள்ளையார் என்ற வரிசையில் நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் கோவிலைத் தாபித்தனர்.

போர்த்துக்கேயரின் படையெடுப்பின் போது யாழ்ப்பாண அரச வம்சத்தவர் கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் நிலையெடுத்தார்கள் என்ற செய்தி நீர்வேலிக்கும் யாழ்ப்பாண அரச வம்சத்தவர்களுக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்துகின்றது.

"நல்லூரில் இருந்த இராசதானியும் பெரியகோயிலும் (கந்தசுவாமி கோவில்) போர்த்துக்கேயரால் கி.பி. 1621 இல் முற்றாக அழிக்கப்பட அங்கிருந்த கோயிற் சிலை விக்கிரகங்களை குளமொன்றில் புதைத்துவிட்டுக் கோயில் குருக்கள்மார் நீர்வேலிப் பகுதிக்கு ஓடினர்" என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் குறிப்பிடுகின்றது.


யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவரான எதிர்மன்னசிங்கன் எனப்படும் பெயரினையுடைய எட்டாம் பரராசசேகரனின் (கி.பி. 1591 - கி.பி. 1616) நெருங்கிய உறவினனே இந்த அரசகேசரி.

தமிழ்நாட்டிலே திருநெல்வேலியை அடுத்துள்ள ஆழ்வார் திருநகரிலே இராமாநுசக் கவிராயரிடம் இவர் பாடங்கேட்ட காரணத்தால் இராமாயணம் மீது அதிக காதல் கொண்டார் என்பர். இதனால் வடமொழியில் காளிதாசர் பாடிய இரகுவம்சத்தை அரசகேசரி தமிழில் பாடினார். தமிழில் எழுந்த இரகுவம்சம் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுந்த முதற்காப்பியமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒருநாள் உறக்கத்தின் போது தான் கண்ட கனவை நினைந்து பார்த்து தனது இராசவீதி வழியே நீர்வேலி வந்து அதன் அருகில் இருந்த பற்றைக் காட்டிற்குள் அமைந்திருந்த விநாயகரை அரசகேசரி கண்டார் என ஐதீகக் கதைகள் கூறுகின்றன. இதன் காரணமாக

விநாயகருக்கு அரசகேசரி கோவில் அமைத்தார். தமிழரிடையே குறிப்பாக இந்துக்களிடையே இருந்த வரலாற்று ஆவணப்படுத்தல் மற்றும் துறைசார்ந்த விழிப்பின்மை அரசகேசரி பற்றிய செய்திகளையும் கோவில் பற்றிய செய்திகளையும் துல்லியமாக குறிப்பிடத்தவறிவிட்டன.

யாழ்ப்பாண அரச வம்சத்தவர் விநாயகருக்குப் பிரமாண்டமான கோவில் அமைக்கும் போது இரட்டை மூலஸ்தானங்களைக் கொண்டு கோவில்களை அமைத்தனரோ? என்பது ஆராய்விற்குரியது. நல்லூர் கைலாயப் பிள்ளையார் கோவிலைப்போல நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரிலும் இரட்டை மூலஸ்தானங்கள் உள் ளன. ஒன் றில் விநாயகரும் மற்றையதில் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானும் வீற்றிருக்கின் றனர்.




அரசகேசரி கண்ட கனவுச் செய்திகளும் அதன் நிமித்தம் விநாய கரைக் கண்டு கோவில் வைத்த செய்திகளும் பிள்ளையாருக்குரிய தேரில் அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. 1960களின் பிற்பகுதியில் தமிழகத்தின் புகழ்பெற்ற ஸ்தபதியாக விளங்கிய ஏகாம்பரம் என்பவரால் இந்தச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன அழகிய சிற்பங்கள் நிறைந்துள்ள தேர் இந்துக் கோவில் தேர்க்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள் பலவற்றைக் கொண்டிருப்பதாக தேர்ச்சிற்ப ஆய்வாளர் அம்பிகைபாகன் குறிப்பிடுகின்றார்.

அரசகேசரியின் பெருமைகளை நிதர்சனமாக நாளும் நினைக்கக் கூடிய வகையில் ஆலய வாயிலுக்கு நேரே அரசகேசரியின் திருவுருவச் சிலையை அமைத்துள்ளனர். இந்திய சிற்ப வல்லுநரான க. புருஷோத்தமனின் கைவண்ணத்தில் விரிவுரையாளர் ச.லலீசனின் உபயமாக அண்மையில் (12.06.2011) இடம்பெற்ற திருக்குடமுழுக்குப் பெருவிழாவின் போது அரசகேசரியின் திருவுருவம் “பக்தப் பிரதிட்டை” செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வலி. கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் விநாயக அடியவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அரசகேசரிக்கு முதல் மரியாதை செய்தனர்.


நீர்வேலியூரில் கைகளில் ஏடுகளுடன் கம்பீரமாகக் காட்சி தரும் அரசகேசரி, இப்பிரதேச மக்களின் புலமைசார் இருப்புக்குக் கட்டியம் கூறுபவராக அமைவார் என எதிர்பார்க்கலாம்.

**தேவை இல்லாமல் அடுத்தவன் விஷயத்தில் தலையிடுபவன் முட்டாள்.**




# உலக வரலாற்றில் யாழ்ப்பாணத் தமிழனின் ஒப்பற்ற ஒலிம்பிக் சாதனை

"எதென்ஸ்" நகரத்தில் நடைபெற்ற மாற்றுவலுவுள்ளோருக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் சிவராசா துஷ்யந்தன் வெள்ளிப்பதக்கம் பெற்று உலக வரலாற்றில் யாழ்ப்பாணத் தமிழன் ஒப்பற்ற சாதனை நிலைநாட்டி இருக்கின்றான். கோண்டாவில் சிவபூமி பாடசாலையை ஆரம்பித்து ஏழு வருடங்களில் மாற்று வலு உள்ள மாணவனைக் கொண்டு உலக சாதனை நிலை நாட்டி வைக்க இந்த ஆசிரியர்களால் முடிந்திருக்கின்றது என்றால் இது ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் சிந்திக்கவேண்டிய விடயமாகும்." இவ்வாறு சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை படைத்த துஷ்யந்தனுக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் நடைபெற்ற வரவேற்பு விழாவிற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்திய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும் சிவபூமி பாடசாலை அறக்கட்டளைத் தலைவருமான ஆறு. திருமுருகன் குறிப்பிட்டார்.




எதென்ஸ் நகரில் இருந்து யாழ் திரும்பிய துஷ்யந்தன் நல்லூர் இந்து மாமன்ற கட்டிடத்தில் இருந்து வாகனப் பவனியாக அழைத்து வரப்பட்டு கோண்டாவில் சந்தியிலிருந்து பாண்ட் வாத்திய சகிதம் அவருக்குச் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

சிவபூமி பாடசாலையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் ஆறு. திருமுருகன் தொடர்ந்து பேசுகையில்; "எந்த ஒரு காரியத்தையும் மகிழ்ச்சியோடும் விருப்பத்தோடும் செய்து வந்தால் அது உயரத்தில் கொண்டு

போய்விடும் என்பதற்கு துஷ்யந்தனின் சாதனை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உலகின் சரித்திரத்தில் ஒபபற்ற சாதனை படைத்த இந்த மாணவன் எதென்ஸ் நகரில் என்ன நடந்தது என்பதைக்கூட எடுத்துச் சொல்ல முடியாத வாய்பேச முடி யாத மாணவன். இந்தப் பாடசாலைக்குப் பெற்றோருடன் இந்த மாணவன் வந்து சேர்ந்த நிலையை எண்ணிப் பார்க்கிறேன். கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக இந்த மாண வன் பெற்றுக்கொண்ட கடினமான பயிற்சிகளே இவரை இந்த நிலைக்கு உயர்த்தியது.

இவரை இந்த நிலைக்கு உருவாக் கிய அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப் பாளர்கள், பெருமைக்குரியவர்கள், பாராட்டப் படவேண்டியவர்கள். சாதாரண நிலையில் உள்ள ஒரு மாணவனைப் பயிற்றுவிப்பதே சிரமமான நிலையில் மாற்றுவலுவுள்ள இந்த மாணவனை இவ்வளவு தூரம் உலக சாதனை நிலைநாட்டத்தக்க வகையில் பயிற்றுவிப்பது எத்துணை கடினமான செயல் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

துஷ்யந்தனின் சாதனைக்கு வழி சமைத்த சிவபூமி பாடசாலை அதிபர் திருமதி கலைவாணி குகதாசன், யாழ். பல்கலைக் கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் மா. இளம்பிறையன், சிவபூமி பாடசாலை ஆசிரியர், பேராசிரியர் நாகராஜன் போன்ற வர்கள் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர் கள்" என்றும் கூறினார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்; ஒலிம்பிக் திடலில் கால் பதிப்பதே அபூர்வம். அதுவும் அங்கு நடை பெற்ற உலக நாடுகள் பங்கு கொண்ட கடும் போட்டியில் வெற்றி பெற்று பதக்கத்தைப் பெற்றுக்கொள்வது என்பது சாதாரண விடயமல்ல. இந்த வகையிலே சிவபூமி பாடசாலை மாணவன் சி. துஷ்யந்தனின் சாதனை மிகப்பெரும் சாதனையாகும்.

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவன் சி. துஷ்யந்தன் கிரீஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றமையிட்டு இடம்பெற்ற பாராட்டு வைபவத்தில் வாழ்த்தைத் தெரி விக்கும்போது பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேலும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பேராசிரியர்; "பல வருடங்களுக்கு முன்னர் உயரம் பாய்தலில் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற எதிர்வீரசிங்கத்திற்குப் பிறகு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற தமிழன் என்னும் பெருமையை துஷ் யந்தன் பெற்றுள்ளார்.

இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, இலங்கைக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர் களுக்கே பெருமைதரும் விடயமாகும். துஷ் யந்தனுக்கு இது இறைவனால் கொடுக்கப் பட்ட கொடையாகும். எல்லாப் புகழும் இறை வனுக்கே" எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், இந்திய உத வித் தூதுவர் வி. மகாலிங்கம், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வட மாகாணக் கல்வித் திணைக்கள விளையாட்டுத்துறைப் பணிப் பாளர் எஸ். அண்ணாத்துரை, பல்கலைக் கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் மா. இளம்பிறையன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன், வலம்புரி ஆசிரியர் எஸ். விஜயசுந்தரம் மற் றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். மாணவன் துஷ்யந்தனின் வெற்றி ஊர்வலம் நல்லூர்

**மனச்சாட்சியில் நீதிபதியாக கடவுள் மட்டும்தான் நுழையலாம்.**

கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றக் காரியாலயத் திலிருந்து அன்று பிற்பகல் 3மணியளவில் ஆரம்பமாகிப் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி வழியாகக் கோண்டாவில் சந்தியை அடைந்து, பின்னர் சந்தியிலிருந்து சிவபூமிப் பாடசாலை வரை செங்கம்பள வரவேற்பு பாண்ட் வாத்திய சகிதம் இடம்பெற்றது. ஊர் வலம் சென்ற வீதிகளில் பெருமளவிலான மக்கள் மாணவனை வாழ்த்தியும், பரிசில்கள் வழங்கியும் கௌரவித்தனர். அலங்கரிக்கப் பட்ட திறந்த காரில் நீண்ட வாகனத் தொடரணியுடன் மாணவன் துஷ்யந்தன் அழைத்து வரப்பட்டார். சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு. திருமுருகன், பாடசாலை அதிபர் திருமதி கலைவாணி குகதாசன், விரிவுரை யாளர் மா. இளம்பிறையன் ஆகியோர் திறந்த காரில் மாணவனுடன் அமர்ந்திருந்தனர்.

திரளான மக்கள் கலந்துகொண்டு மாணவன் துஷ்யந்தனை வாழ்த்தியதோடு பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-நன்றி: தினக்குரல்-

# செவ்வனே நானதைச் சொல்வேன்

என்னதைச் செய்ய, என்னதைச் சொல்ல
இதுதான் உலகம் ஐயா!
எதை யெடுத்தாலும் ஏதோ வொரு சுணக்கம்
இந்த நாட்டில் மட்டும் தானோ?
முன்னதாய்ச் செய்யவோ முடிவெடுத்தாலும்
முடியாமல் போவதேனோ?
மூடிய கதவுகள் என்றோ ஒருநாள்
மெல்லவே திறக்கும் முருகா!
சின்னதாய் ஒரு செய்தி முருகா உனக்குச்
சேமித்து வைத்திருக்கின்றேன்
செல்வமாய் சந்நிதிக்கு நான் வரும் போது
செவ்வனே நானதைச் சொல்லுவேன்
சொன்னபின் சரியா பிழையா என்பதைச்
சோதித்துப் பார் முருகா!
சூரிய சந்திரர் பூமியைப் போலவொரு
(நம்) சேவையில் புனிதம் வேண்டும்.

-கே.எஸ். சிவஞானராஜா-

சிரிப்பும் அழகையும் வாழ்க்கையின் தோழர்களே.

# முன்னைப் பழமையும் பின்னைப் புதுமையும் இணைந்த இசைத்தட்டுக்கள்

*திரு ச. லலீசன் அவர்கள்*

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகப் பெருமான் கோவிலை மையப்படுத்தி இரண்டு இசைத்தட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் வெளியீட்டு விழா கடந்த 09.07.2011 சனிக்கிழமை இரவு ஆலய முன்றலில் இடம் பெற்றது. இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இவ்வாலயத்தின் மீது "கல்வளை அந்தாதி" என்ற பிரபந்தத்தைப் பாடினார். இதற்கு ந. தனசொருபியின் குரலிசையைக் கூட்டி இசைத்தட்டாக வெளியிட்டுள்ளனர். அத்துடன் தற்கால வழக்குக்கேற்ப ஐந்து பக்திப் பாடல்களை இசைத்து "கல்வளையான் கழல் போற்றி" என்ற பெயரில் இசைத்தட்டாக வெளியிட்டுள்ளனர்.

இவ்விசைத்தட்டுக்கள் எமது சைவ உலகினர்க்கு ஓர் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கவை. இச்செயற்பாடுகளை முன்னெடுத்தவர் இருபத்தொரு வயதேயான கல்வளையூர் சுகந்தன் என்பதும் ஆச்சரிய மான உண்மை.

எமது சமயம் சார்ந்த தளத்தில் தற்போது எதிர்கொள்ளப்படுகின்ற சவால்களுக்குத் தீர்வாகப் பழமையை மீட்க வேண்டும் என்று வாதிடுவோர் பலர் உளர். நாயக்க மன்னர்களுடைய காலத்தில் சைவத்தை நிலைநிறுத்தும் வகையில் பழமை போற்றும் பல இலக்கியங்கள் எழுந்தன. இந்த வகையில் எழுந்த தலபுராணங்களுக்கு ஒப்பாகவே தலம்சார் இசைப் பாடல்கள் தற்போது வெளிவருகின்றன.

அந்தாதி எனப்படுவது தமிழிலக்கிய வரலாற்றில் ஆரம்பத்தில் சொல்லணியாகப் பயன்பட்ட ஒரு கூறு.

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளி தலைஇய தீயும் (புறம் 02)

என்பது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த புறநானூற்றில் உள்ள ஒரு பாடல். இங்கு ஒரு அடியில் உள்ள இறுதிச் சொல் அடுத்த அடியின் தொடக்கமாக அமைந்துள்ளது. இவ்வாறு இறுதியைத் தொடக்கமாகக் கொண்டு அமைவது அந்தாதி (அந்தம் - இறுதி, ஆதி- தொடக்கம்) ஐங்குறு நூறு என்ற சங்க கால இலக்கியமே அந்தாதி வடிவத்திற்கு அடிப்படை எனக் கொள்வர்.

நினைவு வைத்துக் கொள்வதை இலகுபடுத்துவதற்காகவே அந்தாதியாகப் பாடினர் என்ற கருத்து நம்மிடையே உள்ளது. இலகுவாக மனனம் செய்வதற்கும்

இவ்வடிவம் கைகொடுத்துள்ளது. இதன் பயன்பாடு கருதி சொல்லணியாக இருந்த அந்தாதியை இலக்கிய வடிவமாக நம் முன்னோர் அறிமுகம் செய்தனர். அவ்வாறு அறிமுகம் செய்தவர் காரைக்காலம்மையார் ஆவார். அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி 101 பாடல்களைக் கொண்ட பக்தி இலக்கியம். வைணவ நெறியில் நூற்றுக் கணக்கான அந்தாதிகள் எழுந்துள்ளன. நம்மாழ்வார் ஆயிரம் பாடல்களை அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார். மாணிக்க வாசகர் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, யாத்திரைப் பத்து, கோயில் திருப்பதிகம் என்பவற்றை அந்தாதி முறையில் அமைத்துப் பாடியுள்ளார்.

எமது சைவநெறியில் அந்தாதி வடிவம் அதிக முக்கியத்துவம் பெற்றமையால் 11 ஆம் திருமுறையில் எட்டு அந்தாதிகளைத் தொகுத்துள்ளனர். காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத்திருவந்தாதி, நக்கீரர் பாடிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, கபிலதேவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதி, பரணதேவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதி, பட்டினத்தடிகள் பாடிய திருவேகம்பமுடையார் திருவந்தாதி, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி சேரமான் பெருமாள் பாடிய பொன் வண்ணத்தந்தாதி என எட்டு அந்தாதிகள் உள்ளன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தில் நம்மண்ணில் பல அந்தாதி இலக்கியங்கள் எழுந்தன. ஒல்லாந்தர் கைக்கொண்ட சமயப் பொறை இத்தகைய அந்தாதிகள் எழுவதற்கு வாய்ப்பளித்ததுடன் சமய உணர்வை ஊட்டுவதற்கு ஊற்றுக்காலாகவும் விளங்கிற்று.

ஒல்லாந்தர் காலத்தில் தேசவழமைச் சட்டத்தை எழுதும் தகைமை பெற்றவராக விளங்கிய வில்லவராய முதலியாரின் மகனே சின்னத்தம்பிப் புலவர். இவர் மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு ஆகிய நூல்களை இயற்றியவர்.

கல்வளைப் பதியுறையும் விநாயகப் பெருமான் மீது யமக அந்தாதியாகப் பாடப்பட்டதே கல்வளை அந்தாதி. யமக அந்தாதி என்றால் ஒரே விதமான தொடர் வெவ்வேறு பொருள்களில் அமையுமாறு பாடப்படுவதாகும். இதனை விளங்கிக் கொள்வதற்கும் சிறந்த தமிழ் அறிவு வேண்டும். எனவே ஒல்லாந்தர் காலத்தில் சிறந்த கல்விச் சமூகம் ஒன்று சண்டிலிப்பாயில் இருந்திருக்கிறது எனவும் துணியலாம்.

தொன்மையான தமிழ் நூல்களிற் பல படிப்பார் இன்றியும் பாதுகாப்பார் இன்றியும் அழிந்தொழியும் நிலையில் சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபையார் 2004 ஆம் ஆண்டில் "கல்வளை அந்தாதியும் கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாறும்" என்ற நூலை வெளியிட்டனர். தர்மகர்த்தா சபையார் மேற்கொண்ட இப்பணி சைவத்தமிழ் உலகினால் போற்றப்படத்தக்கதாகும்.

இதன் தொடர்ச்சியாக கல்வளை அந்தாதிப் பாடல்களுக்கு குரலிசை வடிவம் கொடுத்துள்ளனர் . ஈழத்தின் பிரபல இசைக் கலைஞர் கலாநிதி நா.வி.மு. நவரத்தினத்தின் புதல்வி செல்வி ந. தனசொரூபி குரலிசை நல்கியுள்ளார்.

**"கல்வளையான் கழல் போற்றி"** என்ற இசைத்தட்டு ஐந்து பாடல்களை உள்ளடக்கியுள்ளது. பண்டை நாட்களில் எழுந்த தலபுராணங்களின் மாற்று வடிவமாக ஆலயம் சார்ந்த பக்திப்பாடல் வெளியீடுகளைக்

கொள்ளலாம். இத்தகைய பாடல்கள் தலப் பெருமை, பாட்டுடைத் தலைவனது புகழ், ஊர்ப் பெருமை என்பவற்றுடன் அடியவரது இடையூறுகளைச் சுட்டிக் காட்டி அருள் புரியுமாறு வேண்டுவதாகப் பாடப்படும்.

கவிதரன், வீரா, கண்ணதாசன் ஆகிய இளங்கவிஞர்கள் பாடல்களை எழுதியுள்ளனர். கவிஞர்களுடைய கற்பனை வளத்தில் சிறிது வரட்சித் தன்மை நிலவுவதையும் குறிப்பிட்டாக வேண்டும். பெரும்பாலும் ஒரே செய்திகளே பாடலெங்கணும் எடுத்தாளப்படுகின்றன. ஆயினும் இசைப்பாடலுக்குரிய கவித்துவம் பாடல்களுள் காணப்படுகின்றது.


*காரியம் எதிலுமே நீதான் முதல்வனே*
*கயிலையின் நாதனின் மூத்த புதல்வனே*
*வாரண முகத்துடன் தோன்றும் அழகனே*
*வையகம் முழுவதும் காக்கும் இறைவனே*

என்ற அடிகள் இங்கு குறிப்பிட்டுக் காட்டத்தக்கன.

இதே போல **"தேரோடுது தேரோடுது தேரோடுது பாரு கல்வளையான் திரு வீதியிலே"** என்ற பாடல் தேரோட்டத்திற்கான உற்சாகத்தைத் தரும் பாங்கில் அமைந்துள்ளது.

பாடல்களுக்கு ஈழத்தின் புகழ் பெற்ற கலைஞர்களான சாந்தன், சுகுமார், சந்திர மோகன், ஜெயபாரதி ஆகியோர் குரல் வடிவம் கொடுத்துள்ளனர். இசைப் பிரியன் இசை அமைத்துள்ளார். இவரது இசையமைப்புப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி என்பார்களே அத்துணை சுவை இவரது இசைக்கு உண்டு. எம்மண்ணின் இசைச் சொத்தாக விளங்கும் இசைப் பிரியன், வெளியீட்டு விழாவின்போது "இராக வேந்தன்" என்ற கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் இந்த முயற்சி செயல்வடிவம் பெற்றிருக்கின்றது. கோவில்களில் பணத்தை எப்படிச் செலவு செய்வது எனத் தெரியாது ஏங்கும் இளசுகளுக்கு இம்முயற்சி சிறந்தவொரு முன்மாதிரி. முன்னைப் பழமையாகிய கல்வளை அந்தாதியையும் பின்னைப் புதுமையாகிய இசைப்பாடற்றொகுதியையும் உருவாக்குவதில் உழைத்த யாவரும் பாராட்டிற்குரியவர்கள்.



**தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் சிறப்புச் சொற்பொழிவுகள் 29.08.2011 திங்கட்கிழமை தொடக்கம் 09.09.2011 வெள்ளிக்கிழமை வரை காலை 10.00 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.**

**வயிறுதான் காலைச் சுமக்கிறது.**



# சந்நிதியான்

திரு அற்புதன் அவர்கள்

"இன்பமே சூழ்க..... எல்லோரும் வாழ்க" என நாம் நித்தமும் வேண்டுதல் செய்கிறோம். இந்த உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுமே இன்பமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இறைவன் இவ்வுலகையும் படைத்து, உலகின் அனைத்து வளங்களையும் படைத்துள்ளான். இவ்வனைத்தையும் பயன்படுத்தி நாம் கடைந்தேறும் வழிகாண வேண்டும்.

மானிடப் பிறவி எடுத்த நாம் உலகியல் வாழ்வு, ஆன்மீக வாழ்வு என இரு நிலைகளில் நமது வாழ்வியற் பயணத்தைத் தொடருகிறோம். உலகியல் வாழ்வில் ஈடுபடுபவர்கள், தமது உடல், உளச் சோர்வினை நீக்கும் வகையில் பலவிதமான கேளிக்கைகளில் ஈடுபட்டு- அதனாற் கிடைக்கும் இன்பத்திற் திளைத்து, "இதுதான் வாழ்வு" என்று வாழ்வின் முடிவுரைக்கு வருகிறார்கள். ஆனால் ஆன்மீக வாழ்வு வாழ்பவர்கள், இறை சிந்தனையோடு தமது சொல், செயல் அனைத்தையும் அர்ப்பணிக்கிறார்கள். நமது சமய குரவர்களின் வரலாறுகள் இதனையே நமக்குப் பாடமாகப் புகட்டுகிறது. அவர்கள் கால்நடையாகவே யாத்திரைகள் சென்று, எல்லா உயிர்களும் மேன்மையுற வேண்டும் என்ற சீரிய சிந்தனையுடன் வாழ்ந்த வரலாற்றையே நாம் காண்கிறோம்.

இன்று, அந்தணர்களைக் கொண்டு நாடும் மக்களும் நலம்பெற வேண்டி யாகங்கள் செய்வித்தும், திருத்தலங்களுக்கு பாதயாத்திரை செய்து- பஜனைபாடி தமது ஆன்மீகச் செயற்பாட்டினை பூரணமாக இறை நம்பிக்கையுடன் ஆற்றிவருகின்றனர். இத்தகைய யாத்திரைகளின் அடிப்படை நோக்கமே

வாயைக் காப்பவன் தன் வாழ்க்கையைக் காப்பவனாகிறான்.

எமது சமயத்தின்மீதும் இறைவன்மீதும் நம்பிக்கை வைத்துச் செயற்படும் ஆற்றலையும் திறமையையும் வளர்த்தெடுப்பதேயாகும். இந்தச் செயற்பாட்டின் பயனை நன்குணர்ந்த ஆச்சிர மத்து மடாதிபதி மோகனதாஸ் சுவாமிகள் வருடாவருடம் பல்வேறு திருக்கோயில்களுக்கும் யாத்திரைகளை மேற்கொள்வதனை ஒரு கட்டாய கடமையாகக் கருதிச் செயற்படுவார். தாம் மட்டுமல்லாமல் தம்முடன் இன்னும் பல அடியார்களையும் அரவணைத்து அழைத்துச் செல்வதே அவரது வழமை.

இந்த வரிசையில் இவ்வருடம் கதிர்காமக் கந்தனின் திருவிழாவினை முன்னிட்டு 02.07.2011இல் ஆச்சிரமத்து சுவாமிகளும் அவரோடு நாற்பது அடியார்களும் கதிர்காமக் கந்தனின் திருத்தலம் நோக்கிய தமது பயணத்தை (தனி வாகனத்தில்) ஆரம்பித்தனர். அன்றைய தினம் காலை 09 மணிக்கு செல்வச்சந்நிதி முருகன் வாசலிற் பிரார்த்தனையுடன் ஆரம்பமான தலயாத்திரை இரவு 11.30 மணியளவில் கதிர்காமம் சென்றடைந்தது. இந்த யாத்திரைக் குழுவில் 75 வயதைத் தாண்டிய முதியவர்கள் 7பேர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. சந்நிதியான் வாசலில் இருந்து ஆரம்பித்து மீண்டும் சந்நிதியான் வாசலுக்கு வந்து சேர்ந்தது வரையிலான சகல செலவினங்களையும் சந்நிதியான் ஆச்சிரமமே பொறுப்பேற்றுக்கொண்டது. இத்தகைய யாத்திரைகளில் பொதுவாக யாத்திரிகர்களின் உணவு-ஓய்வு அனைத்து விடயங்களிலும் சுவாமிகள் தனிக்கவனம் செலுத்துவார். ஒருவர் சற்று சோர்வடைந்தாற்கூட என்ன? ஏது? என தாயன்புடன் விசாரித்து ஆவன செய்வது அவரது வழமையான பாணி.



கதிர்காமம் சென்றடைந்த குழுவினருக்கு தங்குவதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் முன்னரே ஏற்பாடு செய்திருந்தார் சுவாமிகள். அதன்படி, இந்து யாத்திரிகர் விடுதியில் தங்கி இருந்த நாற்பத்தொரு பேரையும் விடுதியின் முகாமையாளரும், சிவபூமி அன்னதான சபையினரும் வேளை தவறாது விருப்பொடு கவனித்தனர்.

மாணிக்க கங்கையில் நீராடி மாணிக்கப் பிள்ளையாரையும்- செல்லக் கதிர்காமக் கந்தனையும் வணங்கி, வள்ளியம்மன் வாசலில் தேனும் தினை மாவும் கொண்டு மாவிளக்குப் போட்டு, படைத்து அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்டார்கள். கதிர்காமக் கந்தன் திருவுலாக் காட்சிகளை கண்குளிரக் கண்டு பரவசமடைந்தனர். தெய்வயானை அம்மன் கோயில் வாசலில், தெய்வயானை அம்மன் மடத்து முக்கியஸ்தர்கள், கதிர்காமக் கந்தனின் வீதியுலா வரவுக்காகக்

**கோழையின் கண்ணுக்கு பூனையும் பூதம்போற் தோன்றும்.**

காத்திருந்தனர். ஆச்சிரமத்து சுவாமிகளும் அவரோடு வந்திருந்த யாத்திரைக் குழுவின் முக்கியஸ்தர்களும் கூடவே இருந்தனர். முருகன் அவ்விடத்தை அண்மித்ததும் மடத்து முக்கியஸ்தர்கள் ஆச்சிரம சுவாமிகளின் கையில் 6அடி உயரமான பெரிய மாலையினைக் கொடுத்தார்கள். அவர் அதனை யானையின் மேலே அமர்ந்திருந்த பூசகரிடம் கொடுத்தார். பூசகர் அதனை முருகனுக்குச் சாத்திய அற்புதமான காட்சியினை யாத்திரைக் குழுவினர் கண்டு பரவசமடைந்தனர். ஊர்வலத்தில் பங்குகொண்ட யானைகளுக்கு சுவாமிகள் கரும்பும், வாழைப் பழமும் கொடுத்தார். அத்துடன் கதிர்காமக் கந்தனின் வீதியுலாவில் முன் வரிசையில் நடந்துவந்த கோயிலின் ஆதிவாசிகளுக்கு ஆச்சிரம சுவாமிகள் நெற்றியில் திலகமிட்டு வாழ்த்தினார்.



05.07.2011 செவ்வாயன்று அதிகாலையில் கதிரமலை ஏறும் பயணம் ஆரம்பித்து, ஒன்றரை மணிநேரத்தில் அனைவரும் மலையுச்சியை அடைந்தனர்.

யாத்திரையில் கூடவே வந்திருந்த முதியவர்கள்கூட எவ்வித சிரமமும் இன்றி மலையேறி வந்தமை அந்த முருகன் கருணையேயாகும். நாம் கையோடு கொண்டு வந்திருந்த அவல், பலாப்பழம், கப்பல் வாழைப் பழம் ஆகியவற்றினை கதிர மலை வேற்பெருமானுக்கு நெய்வேத்தியமாகப் படைத்து



பூசை வழிபாடுகளை நிகழ்த்தியதோடு அடியார்கள் அனைவரும் ஒன்றுகூடி பஜனையையும் மேற்கொண்டனர். உணர்வுபூர்வமாக ஆச்சிரமத்து சுவாமிகள் பாட, தொடர்ந்து அனைவரும் உச்ச தொனியில் பஜனை செய்தமை பார்ப்போரைப் பரவசப் படுத்தியது. மலை உச்சியில் இருந்த வேற்று சமயத்தவரும் இந்தப் பஜனையில் கலந்து வழிபாட்டினில் ஈடுபட்டமை காண்பதற்கரிய காட்சியாக அமைந்தது. வேற்பெருமானுக்குப் படைக்கப்பட்ட பிரசாதம் ஓரளவினதாக இருந்தபோதும், ஆச்சிரம சுவாமிகளின் கைகளில் அட்சய பாத்திரமாகி அள்ள



அள்ளக் குறையாமல் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கப் பட்டமை ஆச்சரியமான விடயமே.

கதிரமலைக் கந்தனிடம் விடைபெற்று 6ஆம் திகதி அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு, இடையே தங்கி ஓய்வெடுத்து, 7ஆம் திகதி காலையில் திருக்கேதீஸ்வரம் சென்றடைந்து பாலாவியில் நீராடி கேதீஸ்வரப் பெருமானைத் தரிசனம் செய்தனர். சொற்ப நேரத்தில் மீண்டும் பிரயாணத்தை ஆரம்பித்து நண்பகலில் சந்நிதியான் வாசலை வந்தடைந்ததுடன், சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட யாத்திரை நிறைவு பெற்றது. 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையிலான கதிர்காம யாத்திரை காலத்தில் எவருக்கும் எவ்வித இடைஞ்சலோ, விக்கினமோ, நோய் நொடியின்றி சந்நிதியான் வாசலுக்கு நலமே வந்து சேர்ந்தமை சந்நிதியானின் திருக்கருணையே.

"எல்லாம் அவன் பார்த்துக் கொள்ளுவான்" என்பது ஆச்சிரமத்து சுவாமிகள் அடிக்கடி உச்சரிக்கும் வாசகம். இது வெறும் வார்த்தைகளே அல்ல. எப்பொழுதும் அதிர்வினை ஏற்படுத்தும் ஒரு மந்திர ஒலி இது. இந்த வாசகத்தின் வலிமையினை யாத்திரை வேளையில் ஐதார்த்தமாகக் கண்டு கொண்டனர் யாத்திரைக் குழுவினர்.



# முன்பள்ளிகளில் விழாக்களும் பண்டிகைகளும்

*திருமதி அ. நிருபா அவர்கள்*

முன்பள்ளியென்பது பிள்ளைகள் முறைசார் பாடசாலைக்குச் செல்லுமுன்னர், பாடசாலைக்குச் செல்வதற்கு வேண்டிய தேர்ச்சிகளைப் பெறுமிடமாகும். இது மட்டுமன்றி பிள்ளைகளின் வயதிற்கேற்ப வாழ்க்கைத் தேர்ச்சிகளைப் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, எதிர்காலத்தின் சிறப்புமிக்க பிரஜைகளை உருவாக்கும் செயற்பாட்டிற்கு அடித்தளமாகவும் அமையும் இடமுமாகும்.

கல்வி எனும் பெருங் கட்டடம் நிலைத்து நிற்பதற்கு அடித்தளமாக அமைவது முன்பள்ளிக் கல்வியேயாகும். ஆனால், இன்று எமது சமூகத்தினருக்கு, அடித்தளமாக அமையும் முன்பள்ளிக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தராது, அதன்மீது கட்டப்படும் கட்டடம் போன்ற ஏனைய கல்விக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம். ஸ்த்திரமான கட்டிடத்திற்கு அத்திவாரம் போன்று அமையும் முன்பள்ளிக் கல்விமீது அதிக அக்கறை காட்டவேண்டிய தேவையுண்டு.

***பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் செயற்பாடுகள்:***

முன்பள்ளிகளில் எதிர்கால வாழ்விற்கு, ஒளியூட்டும் செயற்பாடுகள் பலவும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். இந்த வகையில் காலத்திற்குக் காலம் எம்மவர்களால் கொண்டாடப்படும் விழாக்களும், பண்டிகைகளும் முன்பள்ளிகளிலும் கொண்டாடப்பட்டு இவைமூலம் பல்வேறு சமூகமயமாக்கல் உத்திகளை மாணவர்கள் பெற வகை செய்தல் வேண்டும்.

***முன்பள்ளிகளில் விழாக்கள்:***

இந்துக்களின் பண்பாட்டுடனும், கலாச்சாரத்துடனும் விழாக்களும் பண்டிகைகளும் பின்னிப்பிணைந்தவை. ஒவ்வொரு மாதமும் ஏதாவதொரு விழாவையேனும் கொண்டாடத்தக்க வகையில் பல்வேறு விழாக்களும் பண்டிகைகளும் இந்து மதத்தில் உண்டு. எனினும் முக்கியமான விழாக்களை மட்டும் கொண்டாடுதல் சாலச்சிறந்தது.

இறைவனின் பல்வேறு செயற்பாடுகளிற்கும் விழா எடுப்பது இந்துமதம். இதேபோல் இயற்கைக்கு விழா எடுப்பதும் இந்துமதமே. இவ் விழாக்களைப் பாடசாலையில் கொண்டாடுவதுடன் மேலும் தேசிய விழாக்களையும் கொண்டாடுவது வேண்டத்தக்க செயற்பாடாகும்.

சமயம் சம்பந்தமான விழாக்கள்: உதாரணம்- சரஸ்வதி பூஜை, கிருஷ்ண ஜெயந்தி

இயற்கையுடன் தொடர்பான, காலநிலையுடன் தொடர்பான விழாக்கள்: உதாரணம்- தைப்பொங்கல், வருடப்பிறப்பு

தேசிய விழாக்கள்: உதாரணம்- சுதந்திரதினம், குடியரசுதினம்

***சமயம் சம்பந்தமான விழாக்கள்:***

சரஸ்வதிபூஜை, கிருஷ்ணஜெயந்தி போன்ற சமய விழாக்களை பாடசாலையில் கொண்டாடுவதுடன், அவ்விழா கொண்டாடலின் நோக்கத்தையும் மாணவருக்கு எடுத்துக்காட்டல் வேண்டும். இத்துடன் இவ்விழாக்களோடு தொடர்புபட்ட வகையில் மாணவரின் ஆக்க

**ஒருவர் பழகும்முறை அவர் உள்ளத்தைத் திறந்து காட்டும்.**

வெளிப்பாட்டுக் காட்சிகளை (ஆற்றுகைகள்) காட்சிப்படுத்த இந்நாளில் சந்தர்ப்பம் வழங்குவதன்மூலம் அவர்தம் ஆளுமைவிருத்திக்கு வித்திடமுடியும். இங்கு இவ்விழாக்கள் கொண்டாடும்போது பெற்றோரையும் அழைத்து தமது பிள்ளைகளின் வெளிப்பாடுகளைப் பார்த்து பூரிப்படைவதற்கும் ஆவன செய்தல் சிறந்தது.

எமது முன்பள்ளிகளில் பல்வேறு சமயத்தினரும் கல்விகற்குமிடத்து அவர்தம் விழாக்களையும் கொண்டாட வேண்டும். இதன்மூலம் மற்றைய சமயத்திலுள்ள நல்ல பண்புகளையும், முறைகளையும் அறிவதற்கு வாய்ப்பும் ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி மாணவரிடையே இளம் வயதிலேயே சமயரீதியான புரிந்துணர்வு வளர்வதற்கு வாய்ப்பாகவும் இச்செயற்பாடுகள் அமையும்.

***இயற்கையுடன் தொடர்பான விழாக்கள்:***

இயற்கையை இறைவனாகவும், காலநிலை மாற்றங்களிற்கு அமைவாகவும் திட்டமிட்டு விழாக்கள் கொண்டாடுவதில் முன்னிற்கும் மதம் இந்துமதமாகும். இம்மதத்தில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களிற்கு ஏற்ப விழாக்கள் கொண்டாடப்படுவதினை நாம் அறிவோம். அந்த வகையில் தைப்பொங்கல், திருவோண நன்நாள், சித்திரை வருடப்பிறப்பு போன்றன இவ்வாறு கொண்டாடப்படுகிறது.

தைத்திருநாள் என்பது நெல் அறுவடைக்கு உதவிய சூரியபகவானிற்கு நன்றி செலுத்திப் பொங்கலிடும் நாளாகும். இதுபோன்ற விழாக்களை பாலர் பாடசாலைகளில் கொண்டாடுவதனூடாக இயற்கையைப் பேணும் மனப்பாங்கை இளம்பராயத்திலேயே மாணவர் மத்தியில் விதைத்துவிட முடியும்.

***தேசிய விழாக்கள்:***

எமது நாட்டின் சுதந்திரதினம், குடியரசு தினம் போன்றவற்றையும் பாலர் பாடசாலையில் கொண்டாடலாம். இதனூடாக மாணவர் மத்தியில் தேசிய உணர்வையும், நாட்டுப் பற்றையும் இளம்பருவத்திலேயே மாணவர் மனங்களில் விதைத்துவிட முடிகிறது.

***முன்பள்ளிகளில் விழாக்கள் கொண்டாட வேண்டியதன் தேவை என்ன?***

1. பொதுவாக எல்லா விழாக்களும் வீட்டில் கொண்டாடப்படுவதில்லை. இதேபோல் தேசிய விழாக்களும் வீட்டில் கொண்டாடப்படுவதில்லை. இவ்வாறான விழாக்களை முன்பள்ளியில் கொண்டாடுவதனூடாக அவ்விழாக்களின் முக்கியத்துவத்தினையும் மாணவர் அறியக்கூடியதாக இருக்கும்.
2. விழாக்களை முன்பள்ளியில் கொண்டாடுவதனூடாக, நமது பண்பாடுகளையும், பாரம்பரியத்தையும் பேணிக்காக்கும் உணர்வை இளம்பராயத்திலேயே குழந்தைகளின் மனத்தில் ஊட்டிப் பக்குவப்படுத்த முடியும்.
3. இவ்வாறான விழாக்களை பாடசாலைகளில் கொண்டாடுவதனூடாக வீட்டுக்கும்-பாடசாலைக்கும் இடையே நெருங்கிய உறவும், தொடர்பும் ஏற்படுகிறது. இதனால் பிள்ளை பாடசாலையை நேசிக்கும் தன்மை ஏற்படுகிறது.
4. எல்லா மாணவரும் கூடிக் குதூகலமாக இவ்விழாக்களைக் கொண்டாடும்போது பல்வேறு சமூகப் பண்புகளும் பிள்ளைகளிடம் வளர்கிறது.
5. திட்டமிட்டுச் செயற்படல், ஒற்றுமையாகச் செயற்படல், பொறுப்பேற்றுச் செயற்படல் போன்ற திறன்கள் வளர்வதற்கு அடியத்திவாரம் இடப்படுகிறது.
6. தினசரி செயல்களிலிருந்து மாறுபட்டதாக விழா நாட்கள் அமைவதால் மாணவரின் மகிழ்வு மிகவும் உயர்வாக இருக்கும்.

7. விழாக்களை ஒட்டி பல்வேறு ஆற்றுகைச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு களமாக இவ்விழாக்கள் அமையும்.
8. பெற்றோருக்கும்- பள்ளிக்கும் இடையே சிறந்த உறவை வளர்ப்பதற்கு சந்தர்ப்பத்தை விழாக்கள் ஏற்படுத்தித்தரும்.
9. மொத்தத்தில் இவ்விழாக்களை சிறந்த முறையில் பாலர் பாடசாலையில் கொண்டாடுவதனால் பாடசாலையின் மதிப்பு சமூகத்தில் உயர்வடையும்.

***முன்பள்ளிகளில் விழாக்கள் கொண்டாடும்போது கருத்திற்கொள்ள வேண்டியவை.***

1. முன்பள்ளியில் விழாக்கள், பண்டிகைகளைக் கொண்டாடும்போது அவ் விழாக்களின் நோக்கம், குறிக்கோள் என்பவற்றை நன்குணர்ந்து அந்நோக்கம், குறிக்கோள் என்பவற்றை பாலர் அறியும் வகையில் விழாக்கள் கொண்டாடப்படல் வேண்டும்.
2. முன்பள்ளிகளில் விழாக்களுடன் தொடர்பான மாணவரின் கலைநிகழ்வுகளிற்கு களம் அமைத்துக்கொடுக்கும்போது எமது கலாச்சாரத்துடனும், பண்பாட்டுடனும் தொடர்புடைய நிகழ்வுகளையே தெரிந்தெடுக்க வேண்டும். இளம் வயதிலேயே கலை, பண்பாட்டுப் பிறள்வான நிகழ்வுகளை மாணவருக்கு அறிமுகப்படுத்தல் நன்றன்று.
3. பாடசாலையில் விழாக்களைக் கொண்டாடும்போது திட்டமிடலிலிருந்து விழா முடியும்வரை எல்லா செயல்களிலும் சிறாரையும் ஈடுபடுத்தல் வேண்டும். இதனூடாக அவர்களின் திட்டமிடல்திறன், செயற்படுத்தும் திறன் என்பவற்றிற்கு மிகவும் உரமான அத்திவாரம் அமையும்.
4. எல்லாச் சிறார்களும் விழாக்களில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விழாக்களிலிருந்து மாணவர் ஒதுங்கியிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
5. விழாக்கள் எளிமையாகவும், சிக்கனமாகவும், வீண் ஆடம்பரங்கள் இன்றியும் நடாத்தப்படுதல் வேண்டும்.
6. ஆசிரியர் எல்லா விழாக்களைப் பற்றியும், அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் தெரிந்திருப்பதுடன், அன்று கொண்டாடப்படும் விழா பற்றி நன்கு அறிந்து குழந்தைகளிற்கு தெளிவாக எடுத்துக்கூற வேண்டும். விழாக்கள் கொண்டாடப்படுவதற்கு முன்னதாகவே அவ்விழாவின் சிறப்பை சிறாருக்கு எடுத்துக்கூறுவதனூடாக சிறுவரை ஆர்வத்துடன் விழாவில் பங்குபற்றச் செய்யமுடியும். இதனால் குறித்த இவ்விழா சிறப்பாகவும் அமையும்.
7. விழாக்கள் கொண்டாட முன்னதாக பிள்ளைகளின் பெற்றோரைச் சந்தித்து விழாக் கொண்டாடும் விடயம் சம்பந்தமான கலந்துரையாடலிற்கு வகைசெய்து, இதனூடாக பெற்றோரின் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.
8. நன்கு திட்டமிட்டு, திட்டமிட்ட முறையில் விழாக்களை கொண்டாடுவதனூடாக விழாவின் நோக்கம் ஈடேறுவதுடன், மாணவரின் ஆளுமை விருத்தியிலும் ஒருபடி உயர்ச்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

எமது பண்பாடுகள், கலாச்சாரங்கள் சிறிது சிறிதாக அருகிவரும் இவ்வேளையில் அவற்றை அழியவிடாது பாதுகாப்பது எம் கடமையல்லவா? இந்த வகையில் இளம் சிறார் மத்தியில் இவ் விழாக்களை அறிமுகமாக்கி எமது பண்பாடு, கலாச்சார வளர்ச்சிக்கு வித்திடுவோமாக.

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருநள்ளாறு

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

பாண்டிச்சேரி மாநிலத்தின் காரைக்கால் பகுதியில் கரைபுரண்டு ஓடும் காவேரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது **திருநள்ளாறு**. காரைக்காலுக்கு மேற்கே 5கி.மீ தூரத்திலும், கும்பகோணத்திலிருந்து 45கி.மீ தூரத்திலும், மயிலாடுதுறையிலிருந்து 30கி.மீ தூரத்திலும், நாகபட்டினத்திலிருந்து 23கி.மீ தூரத்திலும் உள்ளது இத்திருத்தலம். எனவே, இத்தலத்திற்கு எல்லா முக்கிய நகரங்களிலிருந்தும் பேருந்துகள் தாராளமாகச் செல்கின்றன. சென்னையிலிருந்தும் சில மணிநேர இடைவெளியில் நேரடியாகவும் திருநள்ளாறுக்குச் சென்று வரலாம்.

நளனுக்கு நன்னெறி காட்டிய தலம் என்பதால் **"நள்ளாறு"** எனப் பெயர் பெற்றது. இறைவனை **"நள்ளாறர்"** என்றும், தீர்த்தத்தை **"நளதீர்த்தம்"** என்றும் அழைக்கிறார்கள். அன்றியும் காவேரியைக் குறிக்கும் **"நல்லாறு"** என்ற பெயரே **"நள்ளாறு"** என மருவியதாகக் கொள்வோரும் உள்.

திருநள்ளாறு அழகும் அருளும் நிறைந்த ஒரு கலைக்கோயில். கிழக்கு நோக்கிய ஒரு ராஜகோபுரம் உள்ளது. வெளிப்புறமாக புதிய ராஜகோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது. இதன் வேலைகள் முற்றுப் பெற்றதும் பழைய கோபுரம் இரண்டாம் கோபுரமாகிவிடும். கோபுர வாசலின் உள்ளே இரண்டு திருச்சுற்றுக்கள் உண்டு. நேராக உள்ள இறைவன் சந்நிதி கிழக்கு முகமாகவும், அம்பிகையின் சந்நிதி தெற்கு முகமாகவும் உள்ளன. அம்பிகையின் சந்நிதிக்கு முன்பாக வலப்புறத்தில் கிழக்குப் பார்த்தபடி, இக்கோயிலின் சிறப்பு மூர்த்தியான **"ஸ்ரீசனிபகவான்"** சந்நிதி அமைந்துள்ளது.

மூலவர்: தர்ப்பாரண்யேசுவரர் (நள்ளாறர்)
அம்பாள்: போகமார்த்த பூண்முலையாள்
தியாகராஜர் / திருநாமம் } நகவிடங்கர்
சிறப்புமூர்த்தி: சனீஸ்வர பகவான்
தீர்த்தம்: நளதீர்த்தம், பிரம்ம தீர்த்தம் முதலானவை
தலவிருட்சம்: தர்ப்பை (அதனாலேயே: தர்ப்பாரண்யேசுவரர்)

மூலவர் தர்ப்பாரண்யேசுவரர் சந்நிதியின் உட்பிரகாரத்தை வலம் வருகிறோம். கருவறையின் புறச்சுவரில் உள்ள கோஷ்ட மூர்த்தங்களின் வரிசையில், (தெற்கே) தவக்கோலத்திலிருந்து உண்மைப் பொருளை உபதேசிக்கும் தென்முகக் கடவுளாகிய தட்சணாமூர்த்தியின் திருவடிவம் தனிச் சந்நிதியிலும், (மேற்கே) நடுமாடத்தில் லிங்கோற்பவரும்- அடிமுடி தேடிய அயனும் அரியும் (சிறிய உருவங்களில்), (வடக்கே) பிச்சாடணரும் அருகேயே

செய்நன்றி மறத்தல் நன்மைக்குத் தடையாகிறது.

துர்க்கையும் அருள்தர அமர்ந்துள்ளனர். லிங்கோற்பவருடன் திருமாலும்- பிரம்மாவும் சிறிய ரூபங்களில் அமர்ந்திருப்பதுவும், பொதுவாக பிரம்மா அமர்ந்திருக்க வேண்டிய கோஷ்ட மாடத்தில் பிச்சாடணர் அமர்ந்திருப்பதுவும் வித்தியாசமான அம்சங்கள். பிச்சாடணரின் அழகும் பொலிவும் இக் கோயிலின் தொன்மைக்குச் சான்றாகி நிற்கிறது.

கோஷ்ட மூர்த்தங்களின் தரிசனத்தை முடித்து பிரகார வலத்துக்கு வருகிறோம். உட்பிரகாரத்துத் தென் புறத்தில் அறுபத்துமூவர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. அறுபத்துமூவர் மண்டபத்தின் கடைசியில் தனித்த சிறிய மண்டபத்தில் நளனும் ஒரு சிவலிங்கத் திருமேனியும் உள்ளன. மேற்குச் சுற்றில் வரிசையாக சொர்ண விநாயகர் சந்நிதியும், பிரகார நடுவில் அகத்தியர் முதலான சப்த ரிஷிகளினால் பூஜிக்கப்பட்ட லிங்கங்கள் வரிசையாகவும் உள்ளன. அடுத்து சோமஸ்கந்தர் உள்ளார். பொதுவாக சோமஸ்கந்தர் திருவுருவம் பஞ்சலோகத்தில் உள்ளதையே பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே சோமஸ்கந்தர் கல்விக்கிரகமாகவே உள்ளார். அடுத்து சப்தவிடங்கத் தலங்களில் உள்ள விடங்க லிங்கங்கள் உள்ளன. அடுத்துள்ள சிறிய மண்டபத்தில் பிரம்மா நின்ற திருக்கோலத்தில் உள்ளார். அவரின் முன்பாக முனிவர்களின் சாயலில் மூவர் உருவங்கள் காணப்படுகிறது. "இவர்கள் யார்?" எனச் சிலரை விசாரித்தேன். விபரம் கூறுவார் யாருமிலர். கோயிற் குறிப்புக்களிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வடகீழ் கோடியில் நடராஜர் சிவகாமி அம்மையுடன் எழுந்தருளியுள்ளார். வட ஈசானிய மூலையில் இக் கோயிலில் முக்கிய மூர்த்தங்களில் ஒன்றான வைரவர் பெரிய வடிவத்தில் அருள்பாலிக்கிறார். இவரே இக்கோயிலின் காவற் தெய்வம். கிழக்குச் சுற்றில் மேற்குப் பார்த்தபடி சூரியன் உள்ளார். அதிகாலையில் சூரிய பூசையை முடித்த பின்னரே திருப்பள்ளி எழுச்சி முதலான தினப் பூசைகளைத் தொடருகிறார்கள்.

பிரகார வலம் முடிந்து நாம் இப்பொழுது சில படிகள் ஏறி மேலே மூலமூர்த்தியான தர்ப்பாரண்யேசுவரர் திருவாயிலை அடைகிறோம். நள்ளாறரின் திருமுன்பாக நந்தியெம் பெருமானும் துவார பாலகர்களும் காணப்படுகின்றனர். நந்தியெம்பெருமானின் கம்பீரமும், துவார பாலகர்களின் "அதட்டும் தொனி" கலந்த தோற்றமும் பல்லவர் பாணி சிற்பங்களைக் கோடிட்டுக் காட்டுகிறது. கருவறையில் மூலவர் நள்ளாறர் சுயம்புவாக ஜோதிலிங்க வடிவில் அருள் பாலிக்கிறார். அவரது பொலிவான அழகிய அலங்காரத் தோற்றம் காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளுகிறது. இப்பெருமானையே, **ஆளுடைய பிள்ளையார்** எனப்படுகின்ற திருஞானசம்பந்தரும்- **ஆளுடைய அரசு** எனப்படுகின்ற அப்பர் பெருமானும்- **ஆளுடை நம்பி** எனப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிப் பரவி நின்றனர். மூவராலும் பாடப்பெற்ற ஒப்பற்ற தேவாரத் திருத்தலம் திருநள்ளாறு.

எந்த ஒரு கோயிலிலும் மூலமூர்த்தியின் கீர்த்தியே மிகுந்திருக்கும். ஆனால், இங்கே மூலவருக்குச் சரிசமமான சிறப்பு வாய்ந்த மூர்த்தங்களாக (1) சொர்ண விநாயகர் (2) போகமார்த்த பூண்முலையாள் (3) நகவிடங்கர் (4) சனிபகவான் எனத் திருநள்ளாறில் உள்ள ஏனைய மூர்த்தங்களுக்கும் தனித்தனியான வரலாற்றுப் பெருமை உண்டு.

**நல்ல சகவாசமில்லாவிட்டால் அது தொல்லைகளை உண்டாக்கும்.**

***1) சொர்ண விநாயகர்:***

தர்ப்பாரண்யம் வந்து தர்ப்பாரண்யேசுவரரைத் தரிசித்த நள மகாராஜனைப் பீடித்திருந்த சனி பகவான் அவனைவிட்டு விலகியதால், அதுநாள்வரை சனீஸ்வரனால் உண்டான துன்பங்கள் நீங்கி மனஅமைதி அடைந்து பேரானந்தம் பெற்றான். நிம்மதியடைந்த நளன் பெருமானது திருக்கோயிலைப் பெரிதாக அமைக்க எண்ணி திருப்பணி வேலைகளை ஆரம்பித்தான். போதுமான பொருள் வளமின்மையால் திருப்பணி வேலைகள் இடையில் நின்று போயிற்று. மனம் மிக வருந்திய நளன் விநாயகரைத் துதித்து பூசைகளும் ஹோமங்களும் செய்வித்தான். நள மகாராஜாவின் பக்தியை மெச்சிய விநாயகர் அவனுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்து நின்றுபோன திருப்பணியைப் பூர்த்தியாக்கினார். விநாயகரே இத்திருப்பணிக்கு "சொர்ணம்" கொடுத்தபடியால் **"சொர்ண விநாயகர்"** ஆனார். இவரையே நாம் உட்பிரகாரத்துத் தென்மேற்கு மூலையில் தரிசித்தோம்.

***2) போகமார்த்த பூண்முலையாள்:***

இங்கே இறைவன் சந்நிதி கிழக்கு முகமாகவும், அம்பாள் சந்நிதி "சோபன மண்டபத்தில்" தெற்குப்புறம் பார்த்தபடியும் அமைந்துள்ளது. அம்பிகை **"போகமார்த்த பூண்முலையாள்"** என்ற திருநாமத்தோடு பெருமிதம் மிகுந்த பிராட்டியாக அருட்கோலம் தாங்கி நிற்கிறாள். உயிர்களுக்கெல்லாம் தாயாகி உலக நாயகியாக கனிவுளத் தெய்வமாக அருள் மழை பொழிந்து வருகிறார்.

புனல்வாதம் முடிந்த பின்னர் அனல்வாதம் செய்யப்புறப்பட்ட திருஞானசம்பந்தர் தாம் பாடிய தலத் திருப்பதிகங்களைக் கொண்ட ஏட்டுச் சுவடிகளின் கட்டுகளைக் கொணர்வித்து நூற்கயிறு சார்த்திப் பார்த்தார். அந்நூற்கயிறு திருநள்ளாறில் திருஞானசம்பந்தர் பாடிய "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங்கும் பதிக ஏட்டில் விழுந்தது. மனம் மகிழ்ந்த சம்பந்தர் அம்பாளை வேண்டியபடி அப்பதிக ஏட்டினை எடுத்து செந்தீயில் இட்டார். அவ்வேடு கனன்ற தீயினில் கருகாது மேலும் பசுமையாக விளங்கியது. இதனால் தீயினில் வேகாத இப்பதிகம் **"பச்சைப் பதிகம்"** என்றாயிற்று. தென்னாட்டில் சைவசமயம் புத்துயிர் பெற்று விளங்க இந்த அனல்வாதம் வழிகோலியது.

***3) நகவிடங்கர்:***

சப்தவிடங்கத் தலங்கள் ஏழினுள் திருநள்ளாறும் ஒன்றாகும். தர்ப்பாரண்யேசுவரர் சந்நிதியின் உட்பிரகாரத்தின் தென்புறமாக உள்ள ஒரு வழியால் "நகவிடங்கர்" சந்நிதிக்கு இலகுவாகச் செல்லலாம். அல்லது முதற் சுற்றுப் பிரகார நீண்ட வழியாகவும் செல்லலாம்.

மகாவிஷ்ணுவால் பூசிக்கப் பெற்றுவந்த மூர்த்தியை இந்திரன் பெற்றுவந்து பூசித்து வந்தான். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவர்களுக்கு உதவி புரிந்தார். வெற்றித் திருவிழா வேளையில் இந்திரன் சபைக்கு வந்த முசுகுந்தச் சக்கரவர்த்தியிடம், "தேவரீர் வேண்டுவது யாது?" என இந்திரன் வினாவ, "இறைவன் அருளால் உன்னுடைய ஆர்த்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ தியாகேசப் பெருமானை

**தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவனே, உலகைச் சரிப்படுத்த தகுதியானவன்.**

வெற்றிப் பரிசாகக் கொடு" எனக் கேட்டான் முசுகுந்தன். அதற்கு மனம் விரும்பாத இந்திரன், தேவதச்சன் மயனைக் கொண்டு அதேபோல் ஆறு மூர்த்திகளை உளிபடாமல் செய்து வைத்து "உமக்கு வேண்டிய ஒன்றினை எடுத்துக் கொள்ளவும்" எனக் கூறினான். சற்றே திகைத்துப்போன முசுகுந்தனுக்கு, இறைவன் குறிப்பால் உணர்த்திட, மூல மூர்த்தியை அடையாளங் கண்டு எடுத்தான். இந்திரன் ஏனைய மூர்த்தங்களையும் முசுகுந்தருக்கே கொடுத்தனுப்பினான். எல்லா மூர்த்திகளையும் பெற்று வந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி மூலமூர்த்தியைத் திருவாரூரிலும், ஏனையவற்றைத் திருநள்ளாறு, திருநாகைக்காரோகணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என ஆறு திருத்தலங்களிலும் பிரதிஷ்டை செய்வித்தான். இந்த ஏழு திருத்தலங்களுமே "சப்தவிடங்கத் தலங்கள்" எனப்படுகிறது. திருநள்ளாறு தலத்து விடங்கரின் திருநாமம் "நகவிடங்கர்" என்பதாகும். (சப்தவிடங்கத் தலங்கள் பற்றிய மேலும் விபரக் குறிப்புக்களை 2010 மாசி மாத ஞானச்சுடரில் "திருவாரூர்" கோயில் வரிசையிற் காணலாம்)

கிழக்கு நோக்கிய விடங்கப்பெருமான் சந்நிதிக்கு எதிரிடையபரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் விடங்கப் பெருமானைப் பார்த்தபடி அமர்ந்துள்ளார். தியாகராஜ சுவாமியின் தெற்குச் சுற்றின் ஆரம்பத்தில் நால்வர் திருவுருவங்களும், அதனையடுத்து விநாயகர், தாா்ப்பாரண்யச் சிவலிங்கம் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. தியாகராஜர் கோயிலின் தெற்கு கோஷ்டத்தில் தட்சணாமூர்த்தி சந்நிதி காணப்படுகிறது. இதேபோல திருநள்ளாற்றுப் பெருமான் சந்நிதியின் தென் கோஷ்டத்திலும் தட்சணாமூர்த்தியை நாம் தரிசனம் செய்தது நினைவுக்கு வருகிறதா? இவ்விதம் இரண்டு தட்சணாமூர்த்தி சந்நிதிகள் இருப்பது விடங்கத் தலங்களின் விசேடமாகும்.

**ம) ஸ்ரீ சனி பகவான்:**

ஸ்ரீசனி பகவான் உக்கிர மூர்த்தியல்ல. அருளே வடிவானவர். அவர் அநுக்கிரக மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் திருத்தலம் திருநள்ளாறு. ஏற்றமும் எழிலும் வாய்ந்த இவரது திருத்தோற்றத்தினை பல ஸ்தலங்களில் பார்த்து வணங்க முடிந்தபோதும், சனிபகவான் எனச் சொன்னவுடனேயே நம் சிந்தனையில் வருவது திருநள்ளாறு திருத்தலமே. அம்பாள் சந்நிதி முன் வலது பக்கமாக கிழக்குப் பார்த்தபடி சனீஸ்வரனின் தனிச் சந்நிதி காணப்படுகிறது. நவக்கிரக மூர்த்திகளில் சனிபகவான் நிரம்பவும் பெருமைக்குரியவர். ஈஸ்வரனுக்குச் சமமாக அவருக்கு மட்டுமே ஈஸ்வரப் பட்டம் இருப்பதனாலேயே சனி + ஈஸ்வரன் = சனீஸ்வரன் எனப் பெருமிதமாகப் போற்றப்படுகிறார். நவக்கிரகப் பிரதிஸ்டை இல்லாத கோயில்கள் பலவற்றிலுங்கூட சனீஸ்வரனுக்குத் தனிச் சந்நிதி இருப்பதைப் பார்க்கிறோம். திருநள்ளாறிலும் நவக்கிரகங்கள் தனியாகப் பிரதிஷ்டை செய்யப்படவில்லை. ஸ்ரீ சனிபகவான் நவக்கிரகங்கள் ஒன்பதுள்ளும் மிக மெதுவாக அண்டவெளியில் சஞ்சாரம் செய்வதால் இவருக்கு "மந்தன்" என்ற பெயருமுண்டு.

தேவர்களாயினும், மன்னாதி மன்னர்களாயினும், நம்போன்ற சாதாரண மனிதர்களாயினும் சரி சனிபகவானை நெஞ்சுருகி வழிபடாதவர்களேயில்லை. ஸ்ரீசனிபக்வான்

நம்முடைய பலாபலன்களுக்கு ஏற்றபடி நம்மை பக்குவப்படுத்த வேண்டி கெடு பலன்களைச் செய்தாலும், பலகாலம் நன்மைகளை அளித்து நம்மைக் காத்து வருகிறார். சனீஸ்வரனால் கெடுபலன்களையும் பின்னர் சுப பலன்களையும் அனுபவித்த நளச்சக்கரவர்த்தியின் வரலாறு நாமெல்லாம் அறிந்ததே.

சாதாரண ஒரு சனிக்கிழமை நாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் சனி தோஷ நிவர்த்தி வேண்டி திருநள்ளாறுக்கு வருகிறார்கள். இரண்டரை வருடத்திற்கு ஒருமுறை வரும் சனிப்பெயர்ச்சி நாளிலும், அதன் முன்பின்னாக வரும் சனிக்கிழமைகளிலும் பல லட்சம் மக்கள் தங்கள் நேர்த்திகளை இங்கே நிறைவு செய்கிறார்கள். ஸ்ரீ சனி பகவானிடம் தோச நிவர்த்திக்காக வருபவர்கள் ஒரு ஒழுங்கான வணக்க முறையைக் கைக்கொள்கிறார்கள். முதலில் நள தீர்த்தத்தில் தீர்த்தமாடி- தாம் தீர்த்தமாடும்போது அணிந்திருந்த ஆடைகளை குளத்திலும் குளக்கரையிலும் விட்டுவிட்டு- மாற்றுடை தரித்து- பிரம்ம தீர்த்தம் சரஸ்வதி தீர்த்தத்தில் தண்ணீரைத் தெளித்துக்கொண்டு உட்பிரகாரத்தை வலம் வருகிறார்கள். சொர்ண கணபதி- ஸ்ரீ சுப்பிரமணியர்- தார்ப்பாரண்யேசுவரர்- தியாகேசர் சந்நிதிகளை வணங்கிக் கொண்டு இறுதியில் சனீஸ்வரன் சந்நிதிக்கு வந்து நீண்ட வரிசையில் பலமணிநேரம் காத்திருந்து சனி பகவானை வணங்கிச் செல்கிறார்கள்.

## நவக்கிரக ஸ்தலங்கள்

| | |
|---|---|
| சூரியன் | **-சூரியனார் கோயில்**<br>ஆடுதுறை அருகில்<br>அண்மித்த நகரம்: கும்பகோணம்- 15கி.மீ |
| சந்திரன் | **-திங்களூர்**<br>கும்பகோணம்- திருவையாறு வழி<br>அண்மித்த நகரம்: திருவையாறு 04கி.மீ |
| செவ்வாய் | **-வைத்தீஸ்வரன் கோயில்**<br>மயிலாடுதுறை - சீர்காழி வழி<br>அண்மித்த நகரம்: மயிலாடுதுறை 13கி.மீ |
| புதன் | **-திருவெண்காடு**<br>சீர்காழி - பூம்புகார் வழி<br>அண்மித்த நகரம்: சீர்காழி 10கி.மீ |
| குரு | **-ஆலங்குடி**<br>கும்பகோணம் - வலங்கைமான்-<br>நீடாமங்கலம் வழி<br>அண்மித்த நகரம்: கும்பகோணம் 17கி.மீ |
| சுக்கிரன் | **-கஞ்சனூர்**<br>மயிலாடுதுறை கும்பகோணம் வழி<br>அண்மித்த நகரம்: ஆடுதுறை 05கி.மீ |
| சனி | **-திருநள்ளாறு**<br>மாபெரும் சனீஸ்வரன் ஸ்தலம்<br>அண்மித்த நகரம்: காரைக்கால் 5கி.மீ |
| இராகு | **-திருநாகேஸ்வரம்**<br>கும்பகோணம் அருகில் உள்ளது.<br>அண்மித்த நகரம்: கும்பகோணம் 17கி.மீ |
| கேது | **-கீழப்பெரும் பள்ளம்**<br>பூம்புகார் அருகே<br>அண்மித்த நகரம்: பூம்புகார் 04கி.மீ |

**சோம்பல்தான் தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம்.**

*சனிபகவான் சந்நிதிக்கு முன்பாக, கோபுர வாசலருகே இடது புறமாக நீண்ட மண்டபம் காணப்படுகிறது. மண்டபத்தில் அகலம் குறைந்த பல படி வரிசைகளில் பல்லாயிரக்கணக்கான எள்ளெண்ணை சிட்டி விளக்குகள் எரிந்தபடியுள்ளன. கோயில் நிர்வாகமே இந்த எள்ளெண்ணை சிட்டிகளை விற்பனை செய்கிறார்கள். நாமும் கையோடு கொண்டு வந்திருந்த எள்ளெண்ணை சிட்டிகளை படிவரிசைகளில் ஏற்றி வணங்குகிறோம். மனதின் எல்லாப் பாரங்களையும் சனீஸ்வரன் காலடியில் இறக்கி வைத்தபின், நிம்மதியான நெஞ்சினராய் நமது அடுத்த திருக்கோயில் பயணத்தைத் தொடருகிறோம்.*

*போகம் ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்*
*பாகம் ஆர்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி*
*ஆகம் ஆர்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்*
*நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.*

*-சம்பந்தர் தேவாரம்-*

## தொண்டர்தம் பெருமை சொல்லவும் எளிதோ

**அன்பின் அறிகுறி திருத்தொண் டாகும்**
**அடியவர் எல்லாம் திருத்தொண் டராவார்**
**அன்னம் அளித்தல் ஆடை வழங்குதல்**
**அடியவர் தமக்குச் செய்யும் தொண்டுகள்**
**இன்னும் எத்தனை எடுத்துக் காட்டினார்**
**இவர்களில் அப்பரும் திலகவ தியாரும்**
**முன்னிலை தாங்கிய சமயத் தொண்டராம்**
**முதலில் வைத்துப் போற்றக் குரியராம்**
**கன்னிப் பெண்களும் கைம்பெண் களுமே**
**கலங்கா துதொண்டு புரியலாம் என்று**
**அன்பையும் அருளையும் பெருக்கிக் கொண்டார்**
**அன்னை திலகவ தியம்மை யாரே**
**அன்னம் அளிக்கும் அருந்தொண் டாற்றிய**
**அப்பரும் சம்பந் தரும்இறை வனிடம்**
**பொன்னும் பொருளும் பெற்றுக் கொண்டு**
**போற்றிடும் தொண்டு ஆற்றினர் அன்று**

**-கவிஞர் வ. யோகானந்தசிவம்-**

**பயமும் தயக்கமும் உள்ளவனைத் தோல்வி தொடர்ந்து கொண்டே இருக்கும்.**

உ

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

**05.08.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளின் 26ஆவது குருபூசை

பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு

(யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

---

**12.08.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

இன்னிசை :- "இசையால் இறைவனைக் காணலாம்"

வழங்குபவர் :- சிவயோகராணி கதிரவேல் அவர்கள்

(அறநெறிப் பண்ணிசை ஆசிரியர்)

---

**19.08.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "அருணகிரிநாதர்"

வழங்குபவர் :- திருமதி பவளராணி கணேசலிங்கநாதர் அவர்கள்

---

**26.08.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- இரா. ஸ்ரீநடராசா அவர்கள்

(அதிபர், யா/ தொண்டைமானாறு வீ. ம. வி)

மதிப்பீட்டுரை :- க. நடேசன் (தெணியான்) அவர்கள்

ஆவணி 164ஆவது மலர்

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

